BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

## ORU PAPER

Paper - 02 Issue - 47 19 Friday May 2006 விற்பனைக்கல்ல

**NRS CONSTRUCTION**

* Planning Permission
* Plumbing & Heating
* Electrical Work

Free Estimate, No Obligation

Call : 07800 585 213




OFF LICENCE & ON LICENCE

* New Personal Licence Holder (NCPLH) & Premises Supervisor (PPS) course
* உங்களுக்குரிய Personal Licence
* புதிதாக கடை எடுப்பவருக்கு வேண்டிய Licence
* Running & Established Shops for sale/to buy anywhere in the UK
* Food-Hygiene, Health & Security

LTTA LTD

தொடர்புகளுக்கு Mr. Ravi
Head office, System House,
19 Pershore Road south,
Birmingham B30 3EE
Tel : 07782 223 005

UNIGLOBE EXCHANGE LIMITED

Check Our Rates before you send...
230 B, Northolt Road, South Harrow, HA2 8DU
Call Us at 020 8423 9988
020 8423 7744

EPoS SOLUTIONS FOR TODAY'S RETAILERS — IPOS Solutions

The ultimate costs effective and complete 'EPoS and News Delivery System'

Special Offer Starts from £1999

* Barcode Scanning
* Pre-Loaded 20000 Stock
* Stock Control
* Handles all Promotions
* Paper & Magazine Control
* Home News Delivery
* Prints Shelf Edge Labels
* Invoice Control
* Reports
* Costcutter & NISA Link(OCS)

Tel: 0845 838 0856

Terms & Conditions apply

SIVA BUSINESS TRAINING

எங்களிடம் வாருங்கள்
வென்று தருகின்றோம்

Citizenship Course (Life in UK வகுப்புகள்)
Personal Licence
(For Off Licence and On Licence)
National Certificate
for Personal Licence Holders (NCPLH)
New Supervisor Course (DPS)

* Foundation Certificate in Food Hygiene
* Intermediate Certificate in Food Safety
* Intermediate Certificate in Supervising Health and Safety

Siva 020 8683 6544, 079 0480 6371
Challenge House 616, Mitcham Road,Croydon CR0 3AA

MortgageLink — The National Mortgage Network

100% MORTGAGE அல்லது குறைந்த DEPOSIT 5% ல் வீடு வாங்க வேண்டுமா?

பல ஆண்டுகளாக Chicken கடைகளில் வேலை செய்து அனுபவம் உள்ளவர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், சொந்தமாக Chicken கடை ஆரம்பிக்க விரும்பினால் சில வாரங்களில் கடன் வசதி செய்து தருவோம் Leasehold / Freehold

Mobile: 07930 62 65 85
020 8946 5566

Nearest underground: Tooting Broadway - Northern Line

YOUR HOME AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOANS SECURED IN IT

London Accident Claims Limited
70 Windmill Road, Croydon, CR0 2XP

Had an accident - Not your fault

மூன்று வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட...

* தனிநபர் அளர்த்த நஷ்டஈடு
* புனர் நிர்மாணம் அல்லது வாகன இழப்புக்களுக்கான பூரண நஷ்டஈட்டுத் தொகை முதலில்
* வருமான இழப்புக்கள்
* வாகனப்பிரதியீடு = வாடகை வாகனம்

No Win - No Fee

We Provide:

* Personal Injury Compensation (eg. back, neck & shoulder pain etc)
* Repair / Total Loss value of your vehicle
* Loss of Earnings
* Replacement Car = Credit Hire (terms & Conditions apply)

Tel/Fax: 020 8665 7667
Mob: 079 5095 3514
Call Free: 0800 032 6798

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

## Mortgages, Sales, Loans, Letting Management, Insurance & Building Insurance

*100% வீட்டு வங்கிக்கடன்கள்*
*5நிமிடத்தில் ஏற்பாடு செய்யமுடியும்.*

வருமான அத்தாட்சி அவசியமில்லை
முற்பணம் அவசியமில்லை
ஏற்கனவே உள்ள கடனுக்கு வட்டியை குறைக்க,
குறைந்த வட்டிக்குக் கடனை மாற்றமுடியும்.
முத்திரைத் தீர்வு அவசியமில்லை

Tel:020 8852 1683
www.angelsproperties.co.uk

உங்களின் நிதி சம்பந்தமான
அனைத்துப் பிரச்சினைகளுக்கும்
தகுந்த தீர்வு தரப்படும்

**ANGELS**
Properties and
Financial Services Limited

74 Lee High Road, Lewisham SE13 5PT. Email: info@angelsproperties.co.uk

---



**POS TECH** POS TECH LTD
EPOS SOLUTION
020 8873 1710



**RETAILS TILLS**
**RESTAURANTS KIT**
**NEWS ROUND**

- + TOUCH SCREEN
- + STOCK CONTROL
- + PROMOTIONS & OFFERS
- + SHELF LABELS
- + SALES REPORTS
- + SPECIAL 'Z' REPORT
- + ACCOUNT CUSTOMERS
- + ACCESS FROM HOME
- + FREE 50,000 ITEM LIST
- + STAFF SECURITY
- + LINK WITH SAGE LINE 50

TOUCH SCREEN TILL £1600
IBM PC BASE TILL £900

NISA OCS LINK / C CARD LINK
PAY POINT / PAYZONE LINKS



* FREE SUPPORT * FREE BARCODE PRINTER
* INTEREST FREE PAYMENTS OPTIONS
* FREE LASER PRINTER

* LIMITED OFFERS

---

Losing a loved one is a traumatic time

## INDIAN FUNERAL DIRECTORS

### இறுதிக்கிரியை மண்டபம்

Our comprehensive service includes:
Large Prayer room (Mandir) for performing the last funeral rites or for paying the last respects
All religious rites, ceremonies and wishes respected and administered
Modern, fully equipped washing & dressing facilities
Funeral Ceremony items provided.

Foremost Indian Funeral Directors in England Serving the Asian Community since 1984

For a fast, efficient & professional service, contact:
Bharat Shah, Sanjay Shah, Neeta Shah or Alka Shah on
Tel: 020 8952 5252
24 Hours Mobile: 0777 030 66 44
Call us at anytime for a complete package price

எம் சாஸ்திர சம்பிரதாயங்களுடன்
இறுதிக் கிரியைகளை நடத்தி
துயருறும் மனங்களுக்கு ஆறுதல்
அளிப்பதே எமது நோக்கம்

44 South Parade, Mollision Way,
Edgware, Middlesex HA8 5QL

---

மூன்றாவது வருடமாக எமது இணையற்ற சேவை

## GOWRI TRANSPORT

Fully Air Conditioned Vehicles

**எதிர்வரும் மே 26 - 29ல் (Bank Holiday)**
**LOURDES TEMPLE, PARIS DISNEY WORLD, EIFFEL TOWER**
உணவு தங்குமிடவசதி உட்பட தனிநபர் £195

**Airport Pickup & Drop**
வீட்டிலிருந்து விமானநிலையத்திற்கு அழைத்துச்சென்று விமானம் ஏறும் வரையிலான உதவிகளும் செய்து தரப்படும்

Licensed by Department for Transport

**UK Journeys**
Wales, Walshingham, Alton Towers, Scotland, Margate மற்றும் இங்கிலாந்தின் எப்பாகத்திற்கும்
(Wales கோவில் தனிநபர் £29 Walsingham Church தனிநபர் £14)

Wales Temple (வார விடுமுறையில்)
புறப்படும் இடங்கள்
Eastham முருகன் கோவில்
Tooting அம்மன் கோவில்
Alperton சிவன் கோவில்
Lewisham சிவன் கோவில்

**Van for hire**
8, 15, 23, 49, 73 Minibus & Coach services also available

**Airport Pickup service available in Canada (Toronto)**

**European Tours**
Lourdes தேவாலயம், Disney World மற்றும் ஐரோப்பிய சுற்றுப்பயணம்
France Tour - Lourdes மாதா, Eiffel Tower, Disney World - உணவு தங்குமிடவசதி உட்பட தனிநபர் £195
Amsterdam City Tower, Rotterdam £195
Holland, Belgium Tour on July 28th to 31st
Paris Weekend Trip - உணவு தங்குமிடவசதி உட்பட தனிநபர் £135

**Removal Services**
இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலிருந்தும் பாதுகாப்பாகவும் விரைவாகவும் பொருட்களை இடமாற்றம் செய்து கொடுக்கப்படும்
(UK & Europe Removals)

திருமணவைபவங்களுக்கான வாகன வசதிகளும் செய்து கொடுக்கப்படும்
(Mercedes E-Class & S Class)







24 Hour Service
**07956 375 803**

Contact: **Nithi**
Tel: 020 8438 0472
Mob: 07956 375 803
Email: info@lowfareairportcars.com
web: www.gowritransport.com
www.lowfareairportcars.com

Special Price for Group Booking

Private Hire for UK & Europe

# கலைமன்றத்தின் ஆண்டு விழா







காலஞ் சென்ற திரு ராம் குமாரசாமியால் யாழ்ப் பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட நுண்கலைப் பிரிவின் பாரம்பரியத்தில் வந்த கலைமன்றம் அமைப்பு தனது ஆண்டு விழாவை கடந்த 6ம் திகதி சனிக்கிழமை Eastcote Community Association Centre நடாத்தியது.

இங்கு கல்வி பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கு முகமாகவும் மாணவர்களின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் நிகழ்ச்சிகளை கண்டுகளிக்கும் முகமாகவும் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விழா சரியாக 5.30 மணிக்கு இறைவணக்கத்துடன் ஆரம்பமாகியது.

கர்நாடக இசைப்பிரிவின் ஆசிரியர் திருமதி இளம் பூரணர் முன்னிலையில் கலைமன்ற மாணவர்களும் Middlesex தமிழ் கல்விக் கூட மாணவர்களும் சேர்ந்தளித்த வாய்ப்பாட்டுநிகழ்ச்சியும், அதன்பின்னர் மாணவர்களின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற்றன. மனதுக்கு மிகவும் ரம்மியமூட்டுவதாக இருந்தது. மாணவர்களின் ஒவ்வொரு அசைவையும் பெற்றோர்கள் ரசிப்பதையும் நம்மால் உணர முடிந்தது.

விழாவினை ஒழுங்குசெய்த கலைமன்றத்தின் பிரதம ஆசிரியர்களான திருமதி நந்தினி சுதாகர், திருமதி. திரிபுரசுந்தரி யோகானந்தம் ஆகியோர் பாராட்டுக்குரியவர்களாவர்.

# வெண்புறாவின் சிறுவர் இல்ல விடுதி திறப்பு








வன்னியில் வெண்புறா நிறுவனத்தின் பிரித்தானியக் கிளையின் நிதியுதவியில் மூன்று சிறுவர் தங்கும் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. 75,000 பவுண்ஸ் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இவ்விடுதிகள் கடந்த மாதம் திறந்து வைக்கப்பட்டன. குருகுலம் மற்றும் உருத்திரபுரத்தில் உள்ள காந்தி இல்லம் ஆகியவற்றில் அமைக்கப்பட்ட விடுதிகளின் திறப்பு விழா வைபவங்களில் லண்டனிலிருந்து வன்னிக்கு சென்றிருந்த இந்நிறுவனத்தின் அறங்காவலர்களில் ஒருவரான திரு. மைக்கல் வோட்லோ கலந்து கொண்டு சிறப்பித்தார். கடந்த வருடம் யூன் மாதம் இவ்விடுதிகளுக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் வெண்புறா நிறுவனத்தின் பிரித்தானியக் கிளை பொறுப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி கலந்து கொண்டிருந்தார்.

**மனதில் உறுதி இருந்தால், பொய்கள் தவிடு பொடியாகும்**

# உள்ளூராட்சித் தேர்தலும் தமிழரும்

இம்மாதம் இரண்டு தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன. ஒன்று பிரித்தானிய உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல். மற்றயது தமிழக சட்ட சபைக்கான தேர்தல் தென்னிந்திய ஊடகங்களும் உள்ளூர் ஊடகங்கள் சிலவும் கொடுத்த முக்கியத்துவத்தில் தமிழ் நாட்டு தேர்தலே புலம் பெயர்ந்த தமிழர்களின் பேசுபொருளாகவிருந்தது.

ஆளுக்காள் போட்டி போட்டுக் கொண்டு கொடுத்த வாக்குறுதிகள், அரசியல் வாதிகளின் குத்துக்கரணங்கள், தேர்தல் பிரச்சாரத்தில் சுந்தரத் தமிழ்பேசிய சினிமா நடசத்திரங்கள் என பெரிய களியாட்ட விழாவாக நடந்ததால், தமிழ்நாட்டில் நடைபெற்ற தேர்தல் பற்றி இங்கும் மக்கள் பேசிக் கொண்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால் வழமைக்கு சற்று மாறாக, இத்தகைய ஆர்ப்பரிப்புகள் எதுவும் இல்லாத பிரித்தானிய உள்ளூராட்சி தேர்தலிலும் இம்முறை தமிழ் மக்கள் ஆர்வங்காட்டியதை உணரக்கூடியதாக இருந்தது.

தாங்கள் வாழும் நாட்டில் தமது அன்றாட வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்துகிற விடயங்களில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் எம்மவரால் உணரப்பட்டு வருவது வரவேற்கத்தக்க விடயம்.

இந்த தேர்தலில் இருபது வரையிலான தமிழர்கள் வேட்பாளர்களாக நின்றதும் இந்த அக்கறைக்கு காரணமாக இருக்கலாம். இம்முறை ஹரோவில் திரு.தயா இடைக்காடர், திரு. மனோ தர்மராஜா, திருமதி. சசிகலா சுரேஸ், கிங்ஸ்ரனில் திரு. யோகன் யோகநாதன், குரொய்டனில் திரு. செல்வா, திரு. ராம் மோகன், நியுவத்தில் திரு.போல் சத்திய நேசன், சதக்கில் செல்வி எலைஸா மான் என இரண்டு பெண்கள் உட்பட ஒன்பது தமிழர்கள் கவுன்சிலர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சியை தருகிறது.

இந்த நிலவரம் தமிழர்களை காட்டிலும் சிறிலங்காவிலுள்ள சிங்கள இனவாதிகளிடையே தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை கொழும்பிலிருந்து வெளியாகும் ஐலண்ட் பத்திரிகை "LTTE promises mini Eelam in London" என தலைப்பு செய்தி மூலம் வெளிப்படுத்தியது.

அப்பத்திரிகையின் லண்டன் நிருபர் துசி ரணதுங்க எனபவர் உள்ளூர் தமிழ் எடுபிடி ஒன்றின் துணையுடன் உண்மைக்கு புறம்பான தகவல்களை இச்செய்தியில் எழுதியிருந்தார் என்பது வேறு விடயம். ஆனால் வழமையாகவே தமிழர்கள் தங்கள் அரசியல் உரிமைகளை நிலை நாட்ட முற்படுவதை பொறுத்துக்கொள்ள முடியாத சிங்கள இனவாதிகளால், லண்டன் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் தமிழர் பிரதிநிதிகள் போட்டியிடுவதை பொறுக்க முடியவில்லை என்பதுதான இங்கு வெளிப்பட்ட உண்மை.

பல்லின கலாச்சாரத்தை தனது நட்சத்திர சிறப்பம்சமாக கருதும் லண்டன் மாநகரில் மற்றய இனத்தவர்களுடன் சேர்ந்து வாழ்வதையே தமிழர்கள் விரும்புகிறார்கள் என்பது சிங்கள இனவாதிகளுக்கு தெரிந்திருந்தாலும், வெறும் எதிலிகள் எனக்கருதப்பட்ட தமிழர்கள் அதிகளவில் பிரித்தானிய அரசியலில் ஈடுபடுவது சிறிலங்கா அரசியலில் தமகது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் உணரத் தலைப்பட்டதே இத்தகய தலைப்பு செய்திக்கு காரணமாகவிருந்தது.

இந்த தேர்தலில் போட்டியிட்ட தமிழர்கள் பெரும்பாலும் தொழில் கட்சியின் சார்பிலேயே போட்டியிட்டார்கள். லண்டன் முழுவதிலுமே தொழில் கட்சி பெருத்த இழப்புக்களை சந்தித்திருந்தபோதும், தமிழ் அங்கத்துவம் அதிகரித்துள்ளது கவனிக்கத் தக்கது. இது வெறும் தமிழ்மக்களின் ஆதரவினால் பெறப்பட்டதல்ல. மற்றய சமூகங்களின் ஆதரவும் சம்பந்தப்பட்டவர்களின் அயராத உழைப்பும் இங்கு முக்கிய இடம்பெற்றன.

இளையதலைமுறை தமிழர்களை பிரதிநிதித்துப்படுத்தும் வகையில் அகிலன் யோகநாதன் கிங்ஸரன் சபைக்கு தெரிவாகியுள்ளார். இவரைப்போலவே பார்னற் சபைக்கு போட்டியிட்ட மற்றொரு இளயவர் சந்திரா ஜனனி பாலேந்திரா சில வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்துள்ளார்.

ஒப்பீட்டு அளவில் லண்டனில் தமிழ் மக்களின் வாக்கு வங்கி சிறியதாயினும் அதன் முக்கியத்துவம் இன்று ஓரளவு உணரப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து பேணிக்காப்பது தமிழர்களின் கைகளிலேயே உள்ளது. தெரிவாகியுள்ள தமிழ் உறுப்பினர்கள் தமிழ் சமூகத்தின் பிரதி நிதிகளாக அவர்களின் அரசியல் நிலைப்பாடுகளினை பிரதியலிக்ககூடிய செயற்பாடுகளை மேற்கொள்ளவதோ சமூகப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண உழைக்க வேண்டிய கடப்பாடும் அவர்களுக்கு உள்ளது.

எந்த கட்சியுடன் இணைந்து செயற்படுகிறார்கள் என்பதைக் காட்டிலும் தமது கொள்கைக்கு ஏற்ப தேசியகட்சிகள் யாவிலும் இணைந்து செயற்பட தமிழ் மக்கள் முன்வரவேண்டும். சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ள இன்றைய அரசியலில் விழிப்புணர்வுடனான ஒரு சமூகமாக தமிழர்கள் மாறவேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

*- எழுபரிதி*

**MONEY IN MINUTES TO SRI LANKA**

**PAY AT**

BARCLAYS

நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் பணத்தை பாதுகாப்புடனும் விரைவுடனும் அனுப்ப அருகில் உள்ள BARCLAYS இல் பணத்தை வைப்புச் செய்த பின் எம்மை அழையுங்கள்

A/C NAME: C.E.C.LTD
A/C NO: 70713945
SORT CODE: 20-36-47
BRANCH: HANOVER SQ.

Head Office : 125 - 127 Bramley Road, Oakwood, London N14 4UT

HSBC
COMMERCIAL BANK
PEOPLE'S BANK

FAST CASH
SEND TODAY - COLLECT TODAY

இலங்கைக்கான பணமாற்றுச் சேவை

நம்பிக்கை நாணயமிக்க மிகத் துரிதமான சேவை
குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.

Transfer Hotline
020 8886 4488
www.cecfastcash.com

Open 7 Days

SEYLAN BANK LIMITED
BOC

MCG
Mike Cooke Group



## நீங்கள் ஒரு பாடகரா?

8–15 வயதிற்கு இடைப்பட்டவரா? உங்களது திறமையை வெளிப்படுத்த இதோ ஒரு சந்தர்ப்பம்!

'ஒரு பேப்பர்' மூன்றாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதைக் கொண்டாடவும், இலைமறை காயாய் இருக்கும் இளம் கலைஞர்களை ஊக்குவிக்கவும் இதோ ஒரு பாடல் போட்டி!

போட்டியில் பங்கு கொள்ள நீங்கள் பாடி பதிவு செய்த ஒலிப்பேழை ஒலிநாடா அல்லது MP3 file ஒன்றுடன் பாட விரும்பும் 5 பாடல்களைக் குறிப்பிட்டு உங்களது பெயர், பிறந்த திகதி, விலாசம், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றுடன் June 30க்கு முதல் எமக்கு அனுப்பி வையுங்கள்.

கடைசிப் போட்டி பார்வையாளர்கள் முன்னிலையில் ஆண்கள் ஒரு பிரிவாகவும், பெண்கள் ஒரு பிரிவாகவும் போட்டி நடைபெறும்.

**விபரங்களுக்கு:**
Tel: 020 8640 4604
020 8286 9327

e-mail: info@orupaper.com

**விலாசம்:**
Oru Paper,
45B Crusoe Road,
Mitcham, Surrey,
CR4 3LJ



**நாளைய நட்சத்திரம்**

**சிறுவர் பாடல் போட்டி நிகழ்ச்சி**

# செய்தித் துணுக்குகள்

துருக்கிய உயர் நீதிபதி ஒருவர் அரச சபைக் கூட்டமொன்றுநடைபெறும்போதுசட்டத்தரணி ஒருவரால்சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அவருடன் இருந்த வேறு நீதிபதிகளும் காயத்துக்கு உள்ளாகியுள்ளனர். தீவிர இஸ்லாமியவாதிகளின் செயலாக இது கருதப்படுகிறது.

• • •

சேல்ரென்கம் பல்கலைக்கழக வளாகத்தினுள் உள்ள நூறடி உயர மரத்தில் குடிபோதையில் ஏறிகிளைகளுக்கிடையில்உறங்கியமாணவன் காலையில் இறங்க வழி தெரியாது தனது கைத்தொலைபேசி மூலம் 999க்கு அடித்து கீழ் இறக்கப்பட்டார்.

• • •

ஆறு மாதத்திற்கு மேல் வாழமாட்டாதவர்கள் என்று அடையாளம் காணப்பட்ட கடும் நோயாளிகளுக்கு அவரகள் விரும்பினால் இறப்பு மாத்திரை வழங்க உள்ளார்கள். இதற்கான மசோதா ஆறு மாதத்திற்கு பின் போடப்பட்டுள்ளது. அநேகமாக அதன்பின் இது சட்டமாகலாம்.

• • •

தோல் புற்று நோயால் பெண்களை விட ஆண்களே அதிகம் பேர் இறக்கிறார்கள். இதில் உள்ள சிக்கல் என்னவென்றால் இந்நோய் ஆரம்பமாகும்போது ஏற்படும் தடித்த மண் நிறத் தழும்புகளை அசட்டைபண்ணிப் பலர் விட்டுவிடுகிறார்களாம்.

• • •

ஜாவாவின் மத்தியிலுள்ள மேரப்பி என்னும் எரிமலை விரைவில் அனல் கக்கப் போகிறது. இதற்கான எச்சரிக்கையும் விடப்பட்டு விட்டது. பல மக்கள் வெளியேறிவிட்டார்கள். தங்கள் ஆடுமாடுகளை விட்டுப் பிரிய மனமில்லாத சிலர் தொடர்ந்தும் அங்கு வசிக்கிறார்களாம்.

• • •

பிஜி நாட்டில் இந்திய பரம்பரையைச் சார்ந்தவரும் தேர்தல்மூலம் தெரிவான வருமான பிரதமரை 87ல் இராணுவச் சதிமூலம் விரட்டி பிரதமராகி 99 வரை பிரதமராயிருந்த சிசிற்றிவேனி ரபுக்கா பதவி பறிபோன பின்பு 2000ல் அதே ராணுவப் புரட்சிக்கு முற்பட்டு மாட்டி இப்போதும் விசாரணைக்குள் உள்ளார்.

• • •

இந்தியாவின் கேரள மாநிலத்திலும் மேற்கு வங்க மாநிலத்திலும் சட்டசபைத் தேர்தலில் பொதுவுடைமைக் கட்சியினர் அமோக வெற்றி யீட்டி ஆட்சி அமைத்துள்ளனர்.

• • •

ஒக்ஸ்போட் மருத்துவ மனையொன்றின் ஆண் தாதி ஒருவர் இரு நோயாளிகளைக் கொன்றும் 15 பேர் வரையிலானோருக்கு உடற்பாதிப்பையும் ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் 17 ஆயுள் தண்டனை பெற்றுள்ளார். கொல்வதில் ஏன் அவருக்கு அப்படி ஒரு ஆசை!

• • •

பங்களதேஷில் 6 குண்டுகள் வெடித்தன. எவரும் சாகவில்லை. ஆனால் அதில் சம்பந்தப்பட்ட 10 பேருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது. இங்கும் இஸ்லாமிய தீவிரவாதிகளின் பங்களிப்பு உண்டு. எல்லாமாக முழு நாட்டிலும் இது நடந்த ஆகஸ்ட் மாதத்தில் 500 மேற்பட்ட குண்டுகள் வெடித்தன. பெப்ரவரியில் இது தொடர்பாக 21 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது

• • •

நேபாலிய சிறையில் உள்ளா ஆயிரத்திற்கும் அதிகமான மாவோவாதிகளில் முக்கிய இருவருக்கெதிரான கொலைக் குற்றச்சாட்டை புதிய நேபால் அரசு வாபஸ் செய்துள்ளது. இது இரு தரப்பினரக்கும் இடையில் சுமூக சூழலை எற்படுத்த உதவும்.

• • •

1982ல் கூட்டாளிகளுடன் சென்று கூட்டாக 25 வயதுப் பெண்ணைக் கற்பழித்த மஹரே என்னும் பாராளுமன்ற உறுப்பினர் இப்போது தான் அதற்கான பரிசினைப் பெறுகிறார். 10 ஆண்டுச் சிறை.

• • •

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**மே 20 சனி:** மாலை 5.30 மணிக்கு புதினம் பத்திரிகையின் பத்தாவது ஆண்? விழாவை முன்னிட்டு நடைபெறும் 'தமிழ் கலைகளின் சங்கமம்'. கலைநிகழ்ச்சிகளுடன் நூல் வெளியீடுகளும் இடம்பெறும். இடம்: Arch Bishop Lanfranc School, Mitcham Road, Croydon விபரங்களுக்கு: புதினம், 020 8767 8004, 07886 921 177

**மே 20 சனி:** மாலை 5.00 மணிக்கு வட தமிழ்ச் சங்கம் நடாத்தும் தமிழ்ப் புத்தாண்டு விழா கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். இடம்: Wallasey Town Hall, Wirral,CH44 8ED (Near M53 Jn 1) அனுமதி: குடும்பம் £25, தனிநபர்: £10 தொடர்புகளுக்கு: cheenu@totalise.co.uk

**மே 21 ஞாயிறு:** பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6 மணி வரை தமிழர் தாயகக் கோட்பாட்டை வலியுறுத்தக் கோரும் ஒன்று கூடல். Campaign for Truth and Justice எனும் அமைப்பால் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கும் இந்நிகழ்வில் தேச விடுதலை விவகாரங்களில் ஈடுபாடுடைய சர்வதேச நிபுணர்களும் உரையாற்றவுள்ளனர். இடம்: Trafalgar Square, London WC2. அருகாமையிலுள்ள தொடரூந்து நிலையம்: Charing Cross தொடர்புகளுக்கு: 07956 100 646 அல்லது 0870 486 7305

**மே 27 சனி:** மதியம் 10 மணியலிருந்து பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 6 மணி தனியார் மயப்பட்டிருக்கும் ஈலிங் ஈழபதீஸ்வரர் ஆலயத்தை பொது ஆலயமாக்க கோரி இவ்வாலயத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம். தொடர்புகளுக்கு: ராஜன் 07751717097

**யூன் 17 சனி:** மாலை 6 மணிக்கு மிடில் செக்ஸ் தமிழ் கல்விக்கூடத்தின் வருடாந்தக் கலைவிழா பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெறும். இடம்: Harrow High School, Gayton Road, Harrow.

## அணுசக்தியை உபயோகிக்க விரும்பும் பிரித்தானியா

பிரதம மந்திரி, பிரித்தானியாவின் எரிபொருட் தேவைகளை சமாளிப்பதற்கு அணுசக்தியை பயன்படுத்துவதுதான் சிறந்த வழி என்ற தனது விருப்பத்தை அண்மைய பேச்சொன்றில் வெளியிட்டுள்ளார். இதற்கு தேவையான காரணங்களும உண்டு. 2025 ஐ இலக்காக வைத்து வளிமண்டலத்திற்கு அனுப்பப்படும் கரியமல வாயுவின் அளவைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு பிரித்தானியாவிற்கும் உண்டு. இப்போதுள்ள முறையைத் தொடர்வதால் 80இல் இருந்து 90 வீதமான எரிபொருள் தேவைக்கு பிற நாடுகளின் தயவை நாடும் நிலை ஏற்படும்.

ஆனாலும் அரசாங்கம் தனது சக்தி உபயோகத்தை தெளிவாக மறுபரிசீலனை செய்யாத நிலையில் இப்படியான ஒரு பேச்சை பிரதமர் வெளியிட வேண்டிய தேவையிருக்கவில்லை என்பதே ஆய்வாளர்கள் கருத்து.

## சிறை செல்லும் வெளிநாட்டவர் அநேகர் திருப்பி அனுப்பப்படுவர்.

சிறை செல்லும் வெளிநாட்வர்களை தண்டனை முடிந்ததும் அவர்கள் நாட்டிற்கு திருப்பி அனுப்புவதற்கு எற்ற முறையில் சட்டம் மாற்றப்பட உள்ளது. இந்த மாத ஆரம்பத்தில், தண்டனை முடிந்து திருப்பி அனுப்பப்பட வேண்டியவர்களை வெளியில் உலாவ விட்டதால் பதவி பறிபோன அமைச்சர் சால்ஸ் கிளார்க்கிற்குப் பதிலாக நியமிக்கப்பட்ட ஜோன் றெயிட்டிற்கு கடுமையான அறிவுறுத்தல்கள் பிரதமரால் இது சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ளது. புதிய சட்டம் பற்றி பேசுவதைப் பார்த்தால் அதில் வரப்போகும் அவதானிக்கக் கூடிய அம்சம், அவர்கள் தங்கள் நாடுகளுக்குப் போனால் எத்தகைய துன்பங்களை அனுபவிக்க நேரிடும் என்பதை கவனத்தில் கொள்ளாமல் விடப்போகிறாற்கள் போல் தெரிகிறது.




பல் டாக்டர் டி. வீ. பழனிவேல் FDSRCS (England)



கிளிப் Orthodontics
Costmetic Dental
முரசு சிகிச்சை
பல்வலி நிற்பாட்டல்
உட்பட எல்லாவிதமான
சிகிச்சைகளும்

புதிய முகவரி - Eastham
290 High Street North
(Manor Park - Eastham)
London E12 5SA
Byron Avenue அண்மையில்
6Kumar இற்கு எதிர்பக்கம்

Tel: 0208 552 1626

# பூங்கொத்து

## கோழி குப்பையைக் கிளறியது போல

ஒருவரும் உங்களுக்குச் சொல்ல வில்லை என்று நினைக்கின்றேன். ஒரு பேப்பர் ன் அமைப்பும், வடிவும் (Layout) மிக அழகாக இருக்கின்றது.

இங்கு கனடாவில் வெளியாகின்ற எல்லா ஓசிப் பேப்பர்களும் கோழி குப்பையைக் கிளறியது போல Layoutஐ செய்திருக்கிறார்கள். ஆனால் ஒரு பேப்பர் ரை புரட்டுகிற போது மனதுக்கு இதமாக இருக்கிறது. ஒவ்வொரு பக்கமுமே வாசிக்க வைக்கிறது. அதுவும் முகப்புப் படங்களும் அவற்றுக்கு ஏற்ற வாசகங்களும் காணக் கண் கோடி வேண்டும். ஒரு பேப்பர் வந்த பிறகு இங்கு மற்றைய ஓசிப் பேப்பர்காரர்கள் திகைத்துப் போய் இருக்கிறார்கள். நீங்கள் ஒரு மகசீன் தொடங்கினால் என்ன? பப்பாவில் ஏத்துகிறேன் என்று நினைக்காதீர்கள். உண்மையாகத்தான் சொல்கிறேன். நீங்கள் ஒரு மகசீன் தொடங்கினால் நன்றாக இருக்கும்.

— *பாபு (Toronto)*

## நிச்சயம் விடியும்

எத்தனை தகவல்கள் எம்மை வந்தடைகின்றன! பாலகர்கள் உட்பட குடும்பம் கொல்லப்பட்டது. ஆலயத்தினுள் உறங்கிய ஆசிரியர் உட்பட இளைஞர்கள் பலி. பெண் பாலியல் வல்லுறவின் பின் கொல்லப் பட்டார். 15 ஆண்டுகளுக்கு முன்பும் குமுதினிப் படகு, கைதடி என்றெல்லாம் கேள்வியுற்றோம். விடிவே இல்லையா?

— *விமலா*

## ரஜினி ரசிகர்கள் உம்மைச் சும்மா விடார்.

உங்களுக்கு குசும்பு ஆகலும் தான் ஜாஸ்தியாப் போச்சு. 'இதயத்தை நோண்டாதே' ருசிஷாவின் பேட்டியை அறுவைப் பக்கத்தில் பார்த்து சிரித்து சிரித்து வயிறு புண்ணாகி விட்டது. ஒரு பேப்பர் ரைத் திறந்தவுடன் நான் முதலில் பார்ப்பது அறுவைப் பக்கத்தில் திரைப்பட விளம்பரத்தை. 'சிவாஜியும் சித்தாலேபயும்' என்று போட்டிருக்கிறீர்கள். ரஜினி ரசிகர்கள் உங்களைச் சும்மா விடமாட்டாங்கள்.

— *பிரியன்*

## சிலுக்கின் 90:10 கொள்கை

90:10 கொள்கை வாசித்தபோது பல உண்மைகளை என்னால் புரிய முடிந்தது. அந்தக் கட்டுரையை போட்டோக் கொப்பி எடுத்து நான் பலருக்குக் கொடுத்துள்ளேன். உண்மையில் எல்லோரும் வாசித்து தங்களைத் திருத்த வேண்டிய கட்டுரை அது. இப்படி எங்களுக்குப் பயனுள்ள விசயங்களை ஒவ்வொரு முறையும் எழுதலாமே. எழுதியவர் பெயர் சிலுக்கு என்று போட்டிருக்கிறீர்களே, எல்லாவற்றையும் குறும்பாகப் பார்க்காதீர்கள். சிலுக்கு எழுதியது என்றவுடன் நான் அதை வாசிக்காமல் விட யோசித்தேன். அதுவும் 90:10 என்றவுடன் இடையின் அளவோ தொடையின் அளவோ என்று பயந்து போனேன். இனிமேல் இப்படி நல்ல விசயம் எழுதினால் சேயோன், எல்லாளன் என்று பெயர் போட்டால் நாங்கள் கட்டாயம் வாசிப்போம்.

— *சிறி (Newmalden)*

## ஒரு காலடி எங்கே?

ஒரு பேப்பர் ரில் ஏதாவது நல்ல விசயம் தொடராய் வந்தால் உங்களுக்கு பொறுக்காது. ஒன்று இரண்டு இதழ்களுடன் நிறுத்தி விடுவீர்கள். ஒரு காலடி பகுதியை ஏன் நிறுத்தினீர்கள். ஒரு காலடி போன்ற விடயங்கள் வராவிட்டால் உங்கள் பத்திரிகை மாவரிக்கத்தான் லாயக்கு.

— *மகேஸ்வரி*

## அறிவின் இழப்பு

உண்மை. பேரா.சிவத்தம்பி அவர்கள் சொல்வது முற்றிலும் உண்மை. தராக்கி சிவராம் மறைந்த பிறகுதான் அவரின் அருமையை நாங்கள் உணரத் தலைப்படுகிறோம்.

இவரின் வெற்றிடம் ஒரு பேப்பர் குறித்தது போல் இன்னமும் நிரம்பவில்லைத்தான். பேரா.சிவத்தம்பி அதை நாசூக்காக உணர்த்தி விட்டார். சிவராமின் இழப்பினால் நமது தமிழ்ச்சமூகம் அறிவின் வறுமைக்குள் தள்ளப்பட்டுவிட்டது. வெறும் புத்தகப் படிப்பல்ல அறிவு. அதனுடன் அனுபவம் சேர வேண்டும். நுண்ணுணர்வு, மதியூகம், பகுத்தறிவு யாவும் சேர வேண்டும். சிவராம் பாரம் சேர்ந்த ஒருவர். சிவராமின் இழப்பு ஈடுசெய்ய முடியா இழப்புத்தான். லெனினுக்கு நன்றி சொல்லி சேயோன் எழுதிய கட்டுரை ஒரு பேப்பர் மீதான என் மதிப்பை ஒரு படி உயர்த்தி விட்டது. இருண்ட காலத்திற்கும் இருண்ட சமூகத்திற்கும் ஒளியேற்றி வந்திருக்கிறது ஒரு பேப்பர். இது தெளிவான பாதை. உங்கள் பயணம் தொடரட்டும். போற்றுபவர் போற்றட்டும். புழுதி வாரித் தூற்றுபவர் தூற்றட்டும். நீங்கள் நடவுங்கள்.

— *பிரசன்னா (Ont.)*

## மீண்டும் வேண்டும் பரப்புரை

பரப்புரையின் பலவீனத்தால் பாதிப்புகளுக்குள்ளாகிறதே எம் இனம். இலண்டன் மாநகரில் பல பரப்புரைகள் நடந்தனவே 10 ஆண்டுகளுக்கு முன். அவற்றை ஒழுங்கு செய்தவர்கள், பங்கு கொண்டு கருத்து வழங்கியவர்ள் எல்லோரும் எங்கே? களைத்து விட்டார்களா? அல்லது வயது முதிர்ச்சியால் ஒதுங்கி விட்டார்களா? அல்லது காலனின் கடமையால் மறைந்து விட்டார்களா?

— *அருமை*

## கோட்பாடு

ஏன் ஐயா பரிணாமத்தின் பரிமாணம் அறியாத ஒருவர் கோட்பாட்டிற்கும் தத்துவத்திற்கும் வித்தியாசம் புரியாமல் எழுதிய கடவுளை மறுப்பதற்கு ஒரு உண்மை (தத்துவமென்றால் அதன் பொருள் உண்மை) என்ற கட்டுரையை பிரசுரித்து உங்கள் பத்திரிகையின் தரத்தை உயரவிடாது பாதுகாத்துக் கொள்ளுகிறீர்கள்?

— *புதுவிழி*

## மன உறுதி வேண்டும்

இரத்தம் கொதிக்கிறதே. நியாயம் எங்கள் பக்கமிருக்க பேச்சுவார்த்தைக்கு தயார் நிலையில் உள்ளது போல் அரசு போடும் பொய் வேடத்தை நம்பி முழு உலகமும் எம்மைக் குற்றவாளிகள் போல் கணிக்கிறதே. பேரினவாதத்தால் தமிழினம் அல்லல் படுவது அவர்கள் கண்ணுக்கு எப்படித் தெரியாது போகும்? நடிக்கிறார்கள். அவர்கள் நடிப்பு போராளிகளின் மன உறுதி முன் எடுபடாது.

— *காந்தன்*

## இலைமறை காய்

பாரதியாரின் இறுதிச் சடங்கில் விரல் விட்டு எண்ணும் அளவில்தான் ஆட்கள் பங்கு பற்றினார்களாம். இறந்த பின்பு தான் அவர் பெருமையை தமிழ் உலகம் உணர்ந்தது. தராக்கியும் இலைமறை காய்போல் எம்முடன் வாழ்ந்திருந்தார் என்பது அவர் உயிர் அநியாயமாகப் பறிக்கப் பட்ட பின்புதான் எமக்குத் தெரிய வருகிறது.

— *குயிலன்.*

## எல்லாளனை விடமாட்டாரோ?

நிஸ்தார் டாவின்சி கோட்ஐ பற்றி எழுதினார் நல்ல விசயம். படத்தை பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளார், நன்றி. ஆனால் இந்த கட்டுரையிலும் அவர் எல்லாளனை விட்டு வைக்கவில்லை. அவருக்கு கடவுளை பற்றி எழுத சந்தர்ப்பம் கொடுத்து அவரின் நிறை வேறாத ஆசையை நிறைவேற்றினால் என்ன? உங்களுக்கு கடவுள் (எந்த?) புண்ணியம் கிடைக்கும்.

— *டொமினிக்*

# கனடாப் போஸ்டில் வந்த மெயில் . . .

*அன்பு நண்பன் சிவாவுக்கு...*

நலந்தானே? நானும் பறுவாயில்லை. நல்ல சுகமா இருக்கிறன்.

லண்டனில தடைச்சட்டம் ஒண்டும் செய்யேல்லை எண்டதைக் கேள்விப் படேக்கை, எனக்கும் கொஞ்சம் நிம்மதியா இருக்கு. மற்றது மச்சான், நீ எங்கட ஆக்களைப் பத்திச் சொன்னது நூத்துக்கு நூறு சரியடாப்பா. இஞ்ச போன கிழமை ஒற்றுமை வாரம் எண்டு ஒரு நல்ல விசயம் ஒண்டு எங்கட தமிழாக்கள் எல்லோரும் சேந்து வைச்சவை. நினைக்கேக்கையே புல்லரிக்குது மச்சான். ஊர்ச்சங்கங்கள், இளையோர், மாணவர்கள், முதியோர், ஊடகவியலாளர்கள், விளையாட்டுக் கழகங்கள் எண்டு எல்லாரும் ஒவ்வொரு நாளைப் பகிர்ந்தெடுத்து, இந்தக் கனடிய அரசுக்கு எங்கட தமிழாக்களிண்ட ஒற்றுமையையும், நிலைப்பாட்டையும் விளங்கப் படுத்திச் சொல்லிச்சினம். எல்லா நாட்களிலயும், சனங்கள் தங்களால முடிஞ்ச ஆதரவைத் தெரிவிச்சு, இந்த ஒற்றுமை வாரத்தை நல்ல வடிவா செய்து முடிச்சிருக்கினம். இஞ்ச தடை வந்தாப்பிறகு ஒரு சனமும், இந்த விழாக்களுக்கு வர மாட்டினம் எண்டு பகல் கனவு கண்டவை பாடு அதோ கதி தான். இனியும் எங்கட சனத்தின்ற, தாய் நாட்டுப் பற்றைப் புரிஞ்சு கொள்ளாட்டி, இந்தக் கனடிய அரசை வரலாறு ஒரு நாளும் மன்னிக்காது, கண்டியோ.

இஞ்ச கனடாவில பயங்கரவாதத் தடைச் சட்டம் வந்தாப்பிறகு, எனக்கென்னமோ, சனம் எல்லாம் இன்னும் கூட ஆதரவா இருக்கிற மாதிரி இருக்கு. கனடா போட்ட சட்டத்திலயும் சரியான ஒரு தெளிவில்லை மச்சான். இது செய்யலாம் அது செய்யக் கூடாது, ஆனா அது செய்தா இது செய்யலாம் எண்ட மாதிரி ஒரே இடியப்பச் சிக்கல். கனடிய அரசுக்குக் கீழ்ப்படியிறது எங்கட கடமை, அதில ஒரு சந்தேகமும் இல்ல. ஆனா அதே நேரம், எங்கட உரிமைகளையும் விட்டுக் கொடுக்கக் கூடாது, விளங்குதுதானே.

உனக்குச் சொன்னா என்ன மச்சான், இந்த சர்வதேசம் எண்டுறது ஒரு நாளும் எங்களுக்கு உதவப் போறதில்லை எண்டுறது தான் என்ட அபிப்பிராயம். ஈழப் போராட்டத்தைப் பத்தி, எங்களை விட அவங்களுக்குக் கூட தெரியும் மச்சான்.

நான் இதுக்கு நல்ல உதாரணம் ஒண்டு சொல்லுறன் கேள். கொழும்பில சரத் பொன்சேகாவிற்கு யாரோ குண்டு வைச்சாங்கள். அது யாரெண்டே இன்னும் கண்டுபிடிக்கவேயில்ல. அதுக்குள்ள, அமெரிக்கா தொடங்கி இந்தியா வரை, இது கண்டிக்க வேண்டிய விசயம், அது இது எண்டு எல்லாரும் துள்ளிக் குதிச்சிச்சினம். எனக்கும் உடன, சர்வதேசம் எங்கட நாட்டை நல்லா உன்னிப்பாத்தான் கவனிச்சுக் கொண்டு இருக்குது எண்டு ஒரு சின்ன சந்தோசமாக் கிடந்துச்சுது.

ஆனா, அதே நேரம் திருகோணமலை, சம்பூர் பகுதியில சிறிலங்கா பிளேனில போய் குண்டு போட்டு எத்தின எங்கட தமிழ் உறவுகள் அநியாயமா செத்திச்சினம். அதுக்கு இதே அமெரிக்காவும், லண்டனும், இந்தியாவும் குண்டு போட்டது சரி எண்ட மாதிரி பாத்துக் கொண்டு இருக்கினம். இது எவ்வளவு அநியாயம்? ஏன் எங்கட சனம் சாகேக்க ஒரு கண்டனமும் விடேல்ல? எனக்குக் கிடைச்ச சின்னச் சந்தோசமும் போயிட்டுது. இது தான் மச்சான், சர்வதேசம் எண்டுறது. இவை தான், எங்களுக்கு உதவப் போயினம் எண்டு நினைச்சா, எங்களை மாதிரி முட்டாள் ஆக்கள் உலகத்தில வேற ஒருத்தரும் இல்ல. என்ட பாட்டி அடிக்கடி சொல்லுவா. நித்திரை கொள்ளுறவனை எழுப்பலாம், ஆனா நித்திரை கொள்ளுற மாதிரி நடிக்கிறவனை எழுப்பேலாது எண்டு. அது தான் மச்சான் நடக்குது.

வேற என்னடாப்பா? நீ சொன்ன மாதிரி இப்ப கொஞ்சம் காசு கையில கிடக்கு மச்சான். இந்த சமருக்கு ஒருக்கா ஊருக்குப் போயிட்டு வரலாம் எண்டிருக்கிறன்.

உனக்கு கலியாணம் கட்டி வைக்கவென்றாலும், ஒருக்கா நாட்டுக்குப் போய் நல்ல ஒரு பொம்பிளையைப் பாத்து போட்டோ அனுப்புறன். பிறகு நீ கனவு காணேக்க முகம் நல்ல கிளியரா இருக்கும். நான் சொல்லுறன் எண்டு போட்டுக் கட்டவேணும் எண்டு அவசியமில்லை. உனக்கும் பிடிச்சிருந்தா, மேற்கொண்டு பேசுவம், சரியோ.

நிறைய எழுத வேணும் போல இருக்கு. ஆனா நேரம் தான் மட்டுமட்டு. உனக்குத் தெரியும் தானே, வெளிநாட்டில எல்லாருக்கும் தெரிஞ்ச ஒரு சொல் எண்டா அது பிசி (Busy) தான். அதுதான் எனக்கும். பிறகு சந்திப்பம். பாய்.

*அன்புடன் பவா.*







**SRI SANTHOSH LUXMY JOTHIDAM**

**Pundit Manjunatha Shastry**
**Famous Astro Palmist**

An expert pundit at Service, past present & future of your life. Will be read over to you from your numerology, prediction in Business, Education, Job, Love, marriage, Family problem, Sickness, Promotion, Removal of Enemy etc. We also provide you protection amenities. He learn Malayalam manthirigam. Tamil, Hindi, Telugu Languages

**AKILAN ENTERPRISES LTD**

274 HIGH STREET NORTH, EAST HAM, LONDON E12 6SA
Mob: **07984 685 157**

**ஸ்ரீ சந்தோஷ் லட்சுமி ஜோதிடம்**

பிரபல இந்திய ஜோதிடர் பண்டித் மஞ்சுநாதா சாஸ்திரி அவர்கள் கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடப்பவை, மற்றும் நடக்கப் போகின்றவை பற்றி விபரமாகக் கூறுவார். தொழில் வியாபார, லட்சுமிகர விடயமான பொருத்தம், விவாகப் பொருத்தம், கிரகப் பிரவேசம், வாகனப் பொருத்தம், பிள்ளைகளின் படிப்பு, பிள்ளைகளின் குடும்ப ஒற்றுமை, கணவன் மனைவி ஒற்றுமையின்மை, கோட்டு, வழக்கு, உடல்நலமின்மை, போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல், பரிகாரம் செய்தல், எல்லா நாட்களும் ஜோதிடம் பார்க்கப்படும். இவர் கேரள மலையாளம் மந்திரம் படித்தவர். சாந்தி பூஜை, லக்சுமி பூஜை செய்யப்படும். தமிழ், தெலுங்கு, இந்தி மொழிகள்.

Opening Hours: 8.00 a.m - 9.00 p.m

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, MAY 19, 2006, ISSUE 47

## ஐரோப்பிய ஒன்றியமும் தடைவிதிக்கின்றது?

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இணைத் தலைமை நாடுகளை திருப்திப்படுத்துவதற்காக இன்னமும் முறிவடையாவிட்டாலும், அமைதி வழித்தீர்வு என்பது சாத்தியமற்றதாகி விட்டது.

சிறிலங்கா அரசு போர் பிரகடனம் செய்யாமலே தமிழின அழிப்பு நடவடிக்கைகளை நாளுக்கு நாள் தீவிரப்படுத்தி வருகிறது. தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள் போன்றோரை இனங்கண்டு கொன்றொழித்து வருவதுடன், அப்பாவி மக்களை, குழந்தைகள், பெண்கள், வயோதிபர் என வேறுபாடில்லாமல் தாக்கியழித்து வருகின்றனர். இவற்றை தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும், போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினர் ஆகக் குறைந்தது அங்கு நடைபெறும் சம்பவங்களை அறிந்த சாட்சிகளாகவாவது இருக்கிறார்கள்.

இலங்கைத் தீவின் நிலவரம் துலாம்பரமாகத் தெரிந்திருந்தாலும், யுத்தமற்ற சூழலை ஏற்படுத்தி அதன் மூலம் தமது பொருளாதார நலன்களை வலுப்படுத்துவதில் அக்கறை செலுத்தும் மேற்குலக நாடுகள், தமிழ் மக்களின் போராட்ட நியாயத்தையோ படை வலுச் சமநிலைக்கான அவசியத்தையோ ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை. அரசு தரப்பு - அரசு இல்லாத தரப்பு எனப் பாகுபடுத்தி அரசு தரப்புக்கு மட்டும் சாதகமாக செயற்பட்டு வருகின்றன. விடுதலைப் புலிகள் இயக்கத்தை தமது நாடுகளில் தடை செய்வதன் மூலம் தமிழர் தரப்பு மீது அழுத்தங் கொடுக்கலாம், அதன் மூலம் அரசு இல்லாத தரப்பின் போராட்ட வலுவை குறைத்து விடலாம் எனவும் நம்புகின்றன. மோசமான அரச பயங்கரவாதத்தையும் சிங்கள அரசின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளையும் ஏற்றுக் கொண்டுதான் இப்படியான அழுத்தங்கள் தமிழர் தரப்புக்கு விதிக்கப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியமும் விடுதலைப் புலிகள் மீதான தடையை இவ்வாரம் கொண்டு வரவிருக்கின்றது. இதனையிட்டு ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் குழப்பம் அடைய வேண்டியதில்லை. ஏதோ எங்கள் பரப்புரையில் தான் தவறுகள் இருப்பதாக பதறியடித்து கொண்டு எதனையும் செய்ய வேண்டியதில்லை.

மாறாக எங்கள் அரசியல் அபிலாசைகளில் பற்றுறுதி வைத்து தொடர்ந்தும் அரசியல் ரீதியாக செயற்படுவோம். தமிழர்கள் தனித்து விடப்பட்ட நிலையில், எம்மத்தியில் உள்ள எல்லா விதமான கருத்துக் குழப்பங்களுக்கும் விடை கொடுத்துவிட்டு அழிவின் விளிம்பில் நிற்கும் எம்மக்களுக்காய் செயற்பட முன்வாருங்கள்!

## ஒரு பேப்பர் ...

*வணக்கம்!*

*நீண்ட பகல் பொழுதுகள் .. வார இறுதி நாட்களில்... பழைய பள்ளிக்கூடத்து விழா, ஊர் ஒன்றுகூடல், கலை நிகழ்ச்சிகள், அரங்கேற்றங்கள், கோயில் திருவிழா என பிசியாயிருப்பீர்கள். இருந்தாலும் சாமிதரிசனம் முடிந்து போகும் போது கோவில் பிரசாதத்துடன் மறக்காமல் **ஒரு பேப்பர்** ரும் எடுத்துக் கொண்டு போகிறீர்களே அந்த ஈடுபாட்டுக்காய் இன்னொரு தரம் வணக்கம்.*

*கடந்த பேப்பரில் சில தவறுகள் நடந்துவிட்டன. 27ம் பக்கத்தில் 'இந்தியாவுக்கு போகும் கனடிய இராணுவம்' என்ற கட்டுரையை கனடாவிலிருந்து இளந்திரையன் வேலை மெனக்கட்டு அனுப்பியிருந்தார். அதை கவிக்கோ அப்துல் ரகுமான் எழுதியதாக பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதுபோலவே 5ம் பக்கத்தில் றோயல் மெயிலில் வந்த கடிதத்தை கனடா போஸ்டில் வந்ததாக தவறாக போடப்பட்டிருந்தது. இவையெல்லாம் நித்திரை தூக்கத்தில் எங்கள் அச்சுப் பகுதி செய்த கூத்துக்கள். **ஒரு பேப்பர்** ல் இப்படியான தவறுகள் நடப்பது ஒன்றும் அதிசயம் இல்லைத்தான் இருந்தாலும் தவறுகளுக்கு மன்னிப்பு கோருகிறோம். ஏதோ கவிஞர் அப்துல் ரகுமான் கைகளுக்கு **ஒரு பேப்பர்** போய் சேர்வதில்லை என்பதால் தப்பித்தோம்.*

*இது விடயமாக அச்சுப் பகுதியினை விசாரித்தால் அவர்கள் பதிலுக்கு நீங்கள்தான் நேர காலத்துக்கு ஆக்கங்கள் தருவதில்லை என எங்களை முறைக்கிறார்கள். எனவே ஆக்கங்களை அனுப்புவோர் அவற்றை நேரத்துக்கு அனுப்பி வையுங்கள் பிளீஸ்.*

*எங்கே **ஒரு பேப்பர்** எங்கட சனம் வாசிக்கிற அளவில்தான் இருக்கிறதோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம் ஆனால் சிறிலங்காவில் சிங்கள பேப்பர்காரருக்கும் அதன் செய்திகள் சென்றடைவது எமக்கு மகிழ்ச்சியை தருகிறது. தமிழில் வரும் விடயங்களை எங்களிடம் எந்த பிரதியுபகாரமும் எதிர்பார்க்காமல் மொழிபெயர்த்துக் கொடுக்கிற அந்த பெருந்தகைகளுக்கு நன்றி. **ஒரு பேப்பர்** ல் வரும் விடயங்களை நீங்கள் தவறாக மொழி பெயர்க்கிறீங்களோ அல்லது அவையள்தான் வேறுவிதமாய் வியாக்கியானம் செய்கிறார்களோ.. எதுவாயிருப்பினும் எங்களுக்கு வருத்தமில்லை.. உங்களுக்கு முடிந்ததைத்தானே நீங்களும் செய்யலாம். ஆனால் இப்படியெல்லாம் எழுதி எங்களை பயமுறுத்தலாம் என நீங்கள் நம்பினால் உங்களுக்காக அனுதாபப்படுவதை விடுத்து வேறு என்ன செய்வது ..*

*லண்டனில் இத்தகைய பெருந்தகை ஒருவர் உள்ளூராட்சி கவுன்சில் அலுவலகத்துக்கு **ஒரு பேப்பர்** ன் பிரதியொன்றை அனுப்பிவைத்துள்ளார். அங்குள்ள வெள்ளையின உயரதிகாரி கையில் **ஒரு பேப்பர்** ருடன் நின்றதை பார்த்த எங்கள் அபிமானி ஒருவர், தான் புளங்காகிதம் அடைந்ததாகவும் தான் பெற்ற இன்பத்தை நாங்களும் பெற தனது செல்லிடபேசியில் எங்களை தொடர்பு கொண்டு தனது மகிழ்ச்சியை எங்களுடன் பகிர்ந்து கொண்டார். ஆனால் நாங்களோ கவுன்சிலிலிருந்து பெரிசா பில் ஏதுவும் வருகிறதோ எண்டு பயந்து கொண்டிருக்கிறோம். கவுன்சிலுக்கு அனுப்பி வைத்த பெருந்தகைக்கு வேறும் கவுன்சிலுகளுக்கு பேப்பர் அனுப்ப வேணுமெண்டால் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.*

*மீண்டும் சந்திப்போம் அதுவரை வணக்கம் கூறி விடைபெறும் உங்கள்*

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

EDITORIAL

# Tamil blamelessness?

Today it is clear beyond all reasonable doubt that the Tamils in Sri Lanka are facing another major war. Already a well planned low intensity war is slowly leeching our people of their futures.

People are daily being injured, intimidated and killed by the Sri Lankan institutions, while the moral and ethical guardians of the world, India and the US-European-Japan Bloc are trying to politically stabilise and militarily strengthen the Sri Lankan state in order to promote and consolidate their respective strategic and economic interests. Again and again we see the carrots of political recognition and economic assistance being dangled and verbal and diplomatic threats splayed before the Tamils.

While all this is happening in the land of our fore bearers, we, the barefoot colonials, the educated, skilled, suave, connected, or whatever else we like to call ourselves, are in an ethical and moral slumber. 'The Norwegians would not let the Tamils down, the Indians will save them, the Japanese will sort it out' we say.

Exactly three years ago, the very much missed Taraki lamented:

*'We should remember the developments which led up to the Indo-Lanka Treaty and the arrival of the Indian Army. Then influential Tamils (fools and there are many of the educated variety among Tamils, Taraki fumed) propagated an illusion that 'Mother' India would save the Tamils as she did in Bangladesh. In the end what did the Tamils get? They got no political recognition or legitimacy from the Indians for their political resistance and no security guarantees for their lives from Indians or anyone else. Even if we are to discuss peace with Colombo for the next 100 years an acceptable political solution is not going to be possible.'*

If Taraki was here today, surely he would say that even a doddering dullard would find the deja vu inescapable.

So with all our past experiences, surely we should be opening our eyes to the problems and not passing them continually onto others, surely a period of self reflection is needed.

We are living in the West in relative comfort and prosperity. Our lives are generally stable, we are working hard, saving money and going up steadily in our quest of middle class ideals. Our children are becoming part of a global generation and the majority of them are doing well.

What has helped us achieve so much? What is the one most important external factor that has contributed to all our achievements? Is it not the security we have, from living in our 'adopted countries', in life and economy. Do not our brothers and sisters from the same villages and towns we came from, deserve the same? At least, surely, they deserve the right to life, to live.

> The peace did not hold, no miracle solution was found and now the people we left behind, are at a cross road

The Sri Lankan Institutions failed Tamils a long time ago, the reasons? Simple, we are different, a different language, different gods and we decided to vote and support different political parties.

Surely this is an old story, a story much repeated in history books across the world, and the outcome from these tales, people always resist, people always fight back against such injustices.

We Tamils, are no different, so when the inevitable happened and we stood against this institutional racism, the Sri Lankan state turned nasty and quickly violent.

Fifty years have passed in this story, and up to one hundred thousand Tamils, young, old, men, women, skilled and the unskilled were murdered, and almost a million of us ran away to foreign lands.

And in this fifty years, what has changed?

The ones who decided to stay, bonded themselves to our lands, language, culture and the way of life. They continued to put up resistance against land and cultural colonisation and political and military pacification by the Sri Lankan nation state, while that same State gained support from almost every other nation state and their allied non governmental organisations in this murderous effort, up till this day.

We admit that the Tamil resistance was not according to every ones tastes. They did not adopt Voltaire, Kant or John Stuart Mill as their gurus or did not paint their mud walls with Che. But who are we to criticise, they were defending themselves against overwhelming odds. To them Bagavat Geeta was an inspiration not Amnesty International.

But still during their life or death struggles in the late 90s while their backs were against the wall, we were their umbilical cord. Then the new millennium came and we all wanted them to talk peace.

In 2002 they decided so, and we hoped that the Europeans, Japanese and the Americans would sort out the problem and we went to sleep.

But the peace did not hold, no miracle solution was found and now the people we left behind, are at a cross road.

So, what is our next move? Indeed what should we do next?

The question, do they deserve the right to live? Should they carry on with their fight for their lives? Should we take any responsibility at all? Do we support them or abandon them? Or is it still the White (and Japanese and Indian) man's burden?'

*For the fools and the Hooles among ourselves we say this.*

*That is, when the existence of our people in their own lands is safely established and their security is guaranteed by **THEMSELVES** they will teach their then fat and spoilt children Voltaire, Kant and John Stuart Mill. They will criticise, pontificate, quarrel and tongue lash each other while making lots of money. And we shall call their tiny little nation as free, liberal and democratic and go back to sleep.*

# சர்வதேசமும் சில கோமாளித்தனங்களும்

**இளந்திரையன்**
*(ஒரு பேப்பருக்காக)*

ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப் பட்டிருக்கும் (United nations convention on the law of the sea) கடலும் அது சார்ந்த சட்டங்களும் என்ற வரைவில் இரண்டாம் பகுதியில் ( Territorial sea and contiguous zone ) இறைமையுள்ள நாடுகளுக்கான அந்நாடுகளின் தரையை சூழ்ந்த கடற்பகுதிகளின் ஆளுமைக்கான சட்ட எல்லைகளும், அக்கடல் எல்லைகளில் அமைந்துள்ள வான் வெளிப் பிரதேசங்களின் ஆட்சியும் பாதுகாப்பும் என்பது பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

அதே போல இலங்கை இந்தியாவிற்கிடை யிலான பாக்கு நீரிணை வங்காள விரிகுடாக் கடற் பிராந்தியங்களுக்கிடையிலான வரையறை கள் 1976 மார்ச் 23 ஆந்திகதி மீள்வரயறை செய்யப்பட்ட (Agreement between Srilanka and india on the maritime boundary between the two countries in the Gulf of Mannar and the Bay of the Bengal and the related matters 23 march 1976) ஆவணத்திலும் மிகத் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளது.

இதிலிருந்து நாடுகளின் தரைப்பகுதியைச் சூழவுள்ள கடல் வான் வெளிகளில் சுய ஆதிக்கம் கொள்வதற்கு ஒரு நாடு தன்னளவிலான சுதந்திரமும் அதிகாரமும் கொண்டுள்ளது என்பது சர்வுதேச நாடுகளால் அங்கத்துவம் கொள்ளப்பட்ட ஐ.நா சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறையிலுள்ள விடயமாகும்.

இலங்கைத் தீவைப் பொறுத்த அளவில் இன்று இரண்டு இறைமையுள்ள பிரதேசங்களும் அது ,சார்ந்த இன மக்களும் அவர்களுக்கான இறைமையுள்ள ஆட்சியும் நிலவுகின்றது என்பது சர்வதேச சமூகத்தாலும் இலங்கையில் வாழுகின்ற மக்களாலும் புரிந்து கொள்ளப்பட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டுமுள்ளது. அவற்றின் இராணுவ சமநிலையை கருத்திற் கொண்டுமே 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் நாள் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டு சாமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆகவே இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழ்த் தேசியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கடல் ஆகாய வெளிகளிலான சுயாதீனா ஆதிக்கமும் ஆட்சியும் செய்யும் அதிகாரம் தமிழ் தேசியத்தின் தலமையிடம் இயல்பாகவே வந்து விடுகின்றது.

இரண்டு ஹீரோக்களுக்கு மத்தியில் ஒப்பந்தம் ஏற்படலாம். அல்லது ஹீரோவிற்கும் வில்லனுக் கிடையிலும் கூட ஒப்பந்தம் ஏற்படலாமேயொழிய ஒரு கோமாளியுடன் ஒப்பந்தம் ஏற்பட முடியாது. இங்கு நாம் சிங்கள அரசாங்கத்தை கோமாளியாகப் பார்க்காவிட்டாலும் நிச்சயம் ஒரு வில்லனாகவே பார்க்கின்றோம்.

ஒரு சுதந்திரமான மக்களின் வாழ்விடங் களுக்குள் தனது படைகளை வைத்திருப்பதுவும் அம்மக்களுக்கெதிரான அழிவு நடவடிக்ககளில் ஈடுபடுவதும் ஒரு வில்லங்கமான வெறி பிடித்த மன நோயாளர்களாலேயே முடியும். அந்தப் பாத்திரத்தை சிறீலங்காவின் இராணுவமும் அரசு இயந்திரமும் திறம்படவே செய்கின்றன என்பதை பாங்கொக்கிலிருந்து இயங்கிக் கொண்டிருக்கும் ஆசியாவிற்கான சர்வதேச மனித உரிமைகள் அமைப்பினால் வெளியிடப்பட்ட கண்டன அறிக்கை மிகத் தெளிவாக ஆவணப் படுத்துகின்றது.

வில்லனும் கதாநாயகனும் இருக்கும் இடத்தில் நிச்சயம் ஒரு கோமாளியும் இருக்க வேண்டுமே. அந்தக் கோமாளி பாத்திரத்தை கண்காணிப்புக் குழு இப்பொழுது செய்யத் தொடங்கியிருக் கின்றது. கண்காணிப்புக் குழு என்பது இலங்கையில் கண்காளிப்புப் பணிகளுக்காக அமைக்கப்பட்ட ஒரு சிறு குழுவாகும். தமிழ்த் தேசியத்திற்கும் சிங்களத் தேசியத்திற்கும் இடையில் காணப்பட்ட யுத்த சமநிலையில் இருந்து கொண்டு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டி உருவாக்கப்பட்ட ஒப்பந்தத்தின் பின்னால் ஏற்படக் கூடிய ஒப்பந்த மீறல்களை கண்காணிக்க வேண்டி உருவாக்கப் பட்ட ஒரு குழு என்பதே சரியான வரைமுறையாகும். மற்றும் படி ஒப்பந்தத்தை காத்துக் கொள்வதும் சமாதான முன்னெடுப்புகளை முன்னெடுப்பதும் அல்லது ஒப்பந்தத்தை உடைத்துக் கொள்வதும் இரண்டு தரப்பும் மட்டுமே தனித்து எடுக்க வேண்டிய செயல்முறையாகும்.

ஒப்பந்தம் பற்றியோ நடைமுறை பற்றியோ எவ்வித கருத்தோ ஆலோசனையோ கூறுவதற்கு கண்காணிப்புக் குழுவினருக்கு எந்தவித உரிமையும் கிடையாது. கண்காணிப்புக் குழு அதன் எல்லையை மீறி கருத்துக் கூற முற்பட்டு கோமாளியாக தன்னை இனங்காட்டியுள்ளது.

தமிழ்த் தேசியத்திற்கிருக்கக் கூடிய கடல் வான் பகுதி ஆதிக்கம் பற்றி கருத்துக் கூற முற்பட்டு தன் மூக்கை உடைத்துக் கொண்டுள்ளது. கண்காணிப்புக் குழுவின் உதவி தேவையில்லை என இரண்டில் ஒரு பகுதி தீர்மானித்தாலே கண்காணிப்புக் குழு என்பது பூச்சியமாகிவிடும். 'தனக்கடா வேலை தன் பிடரிக்குச் சேதம்' என்று தமிழில் நல்லதொரு சொற்தொடர் வழக்கிலுள்ளது. இதனை படித்துப் புரிந்து கொள்ளுமாறு நாம் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ்த் தேசிய இனத்தின் எழுச்சியென்பது அது இழந்து விட்ட தன் சுதந்திரத்தை வேண்டி கனன்று கொண்டிருக்கும் அனல் என்பதை கண்காணிப்புக் குழுவும் சர்வதேச சமூகமும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ் ஈழம் என்பது புதிதாக வேண்டப்படும் நாடு அல்ல. காலாதி காலமாக இருந்து கொண்டிருக்கும் நாடு. மக்களின் சுதந்திர வேட்கை என்பதை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதைத் தான் சரித்திரமும் எமக்குக் கற்றுத் தருகின்றது.

*நமக்கு மேலும்*

*ஒருவரிலர்*

*நமக்குக் கீழும்*

*எவருமிலர்.*

Editorial: Eelam Nation

# Rajapakse couldn't have been joking, after all

President Rajapakse, addressing the Guillermo Cano World Press Freedom Prize Awards Ceremony organized by the UNESCO at the BMICH, (*Ceylon Daily News*) said:

"The threat to a people's freedom - and especially to the freedom of expression, the threat to human rights and in particular to the right to disagree, and the challenge to democracy, can come not only from the State and its functionaries."

"It can also come from terrorist groups that have decided to adopt the path of violence. Such groups will direct their violence against multi-ethnic societies as well as against long-standing traditions of democracy,"

In other words the threat to a people's freedom can come from two sources one from the State and its functionaries and the other from terrorist groups.

Being endowed with an excellent sense of humour as evinced in his loud thinking Mahinda Chintanaya one is sometimes at a loss to know whether Rajapakse was actually joking or serious. Mahinda's thoughts unlike Mao's thoughts are tempered with the spice that Sri Lanka is so famous for, usually added to curries and savouries to be taken along with more than a pinch of salt. At the recent Press Freedom Day whether he really meant them or not, the truth in his remarks cannot be overemphasized. We accept them in all sincerity and seriousness.

The above remarks along with others came in the wake of the killing of Jeyaseelan the journalist from Uthayan the Tamil newspaper and in the backdrop of another Tamil newspaper Eelanadu office in Jaffna under siege by the Sri Lankan security forces. It would have been more apt and truer if he had said;" The threat to the (Tamil) people's freedom- and especially to (their) freedom of expression, the threat to (their) human rights and in particular to the right to disagree, and the challenge to democracy, can come not only from the State and its functionaries." Even ignoring the words in parenthesis inserted by the writer, by default, one main source of threat according to Rajapakse himself actually comes from the State. What a Freudian slip!

The message to the journalists has always been: "if you are not with us y-ou are against us" and death could be the price to pay.

In the continuum of state terrorism in Sri Lanka terrorizing or eliminating journalists and the muffling of the freedom of expression have been one of its key facets. The message to the journalists has always been: "if you are not with us you are against us" and death could be the price to pay. The killings of Richard de Soysa (his mother, a Tamil), and the killing of Taraki are some of the instances of state terrorism against Tamil journalists. Sivanayagam the editor of the Saturday Review had to flee the country to escape death.

Referring to the killings of de Soysa and Taraki, Rajapakse went on to say: "We are happy that these are things of the past and that today the media can legitimately criticize anyone holding high office or position,-even the Head of State, - without fear of revenge or retaliation." Perhaps the speech was written before the killing of Jeyaseelan and the siege of the Eelanadu office or he was joking. As both the Head of the State and the Government, he needs to be more discrete when making such confessions.

Since 1970 most of the media in Sri Lanka have been subservient to the governments in power for their survival.

Readers will recall the recent furore created in the Sri Lankan Parliament over the BBC's reporting of the wanton killings of Tamils in Trincomalee. The BBC aptly termed it "genocide". The BBC is indeed a bastion of British democracy and the mother of all modern western democracies. Proud of their democratic freedoms the British people have always striven to preserve and jealously guard their democratic traditions and conventions. With its robust independence and superb professionalism the BBC has always stood by to protect the democratic aspirations of the British people. The BBC is not the Ceylon Daily News (CDN) or the Sri Lanka Broadcasting Corporation (SLBC). BBC is BBC. If the BBC were to source its news from the CDN or the SLBC the entire British nation would die laughing.

We reproduce an excerpt from the letter of 12 March 2003 from the chairman and director general of the BBC Greg Dyke challenging the British prime minister Tony Blair regarding the controversy about the estimate of the number of people who took part in the demonstration against the invasion of Iraq (one million according to the BBC): "…….On many occasions in my time as director general the Downing Street press office under Mr. (Alastair) Campbell denied stories that later turned out to be true. I can list half a dozen. There was never a certainty that a denial from the government director of information meant the story wasn't true. It often meant the Downing Street press office simply didn't want it reported. I can only assure you that under my leadership I will do everything in my power to defend the BBC's fairness, independence and impartiality".


Nothing happened to Greg Dyke or to the BBC

ஒரு பேப்பர்
ORU PAPER

# The Sea Rights of States in Formation

## The International Monitoring Mission in Sri Lanka and International Law

By S. Muthucumaran




The LTTE is an entity in control of territory and cannot be equated with non-state actors, a term reserved for groups such as multinational corporations, international institutions or other agencies such as Amnesty International or the World Wild Life Fund.

The Sri Lanka Monitoring Mission (SLMM) recently made a determination that the LTTE were non-state actors who had no rights in the seas appurtenant to the land area it controls. As such, the SLMM declared that they had no right to intercept the traffic of naval vessels in the seas around Sri Lanka. They gratuitously added that the LTTE had no rights in the air as well, presumably on the same theory. The LTTE has questioned this determination on several grounds.

The SLMM stated : "The sea surrounding the Sri Lanka is a Government Controlled Area. This has been ruled so by the Head of the Sri Lanka Monitoring Mission in line with international law. Non-state actors cannot rule open sea waters or airspace. The LTTE has therefore no rights at sea."

This statement contains fundamental errors of international law. The LTTE is an entity in control of territory and cannot be equated with non-state actors, a term reserved for groups such as multinational corporations, international institutions or other agencies such as Amnesty International or the World Wild Life Fund.

In any event, the view that non-state actors have no rights to open sea waters or airspace has never been a part of international law. In fact, what is considered the first work on international law concerning the sea, De Mare Liberum (Concerning the Freedom of the Seas) by Hugo Grotius, articulated the rights of a non-state actor, the Dutch East India Company, to the freedom of the seas. It asserted the right of this non-state actor to take forcible action to ensure that these rights to the sea are asserted. The immediate context for writing the work was the sinking of the Portuguese vessel, the Santa Catarina, in a naval action by the Dutch East India Company ships in the Malacca Straits off Malaysia. Grotius asserted that the *Santa Catarina* constituted a prize taken by the Dutch Company. A short tract, De Praedium, was the basis of the later longer work, De Mare Liberum.

It is sad that the SLMM has made lofty propositions without a basic knowledge of the origins of the law of the sea and thereby sullied not only its impartiality, but its comprehension of basic tenets of international law.

Let alone history, the statement of the SLMM that "non-state actors cannot rule open sea waters or airspace" is at variance with fundamental legal tenets. In domestic law, one starts discussion of land ownership with the maxim, cuis est solum, eius est usque ad caelum ad inferos. This Latin maxim states that the owner of land owns not only rights to the skies above the land, but also to the land well below the soil level. Though curtailed by modern legislation, the maxim does hold still as a general principle. As a general principle, it is also a part of international law. So, the tacking on of airspace, which is not warranted by the facts of the circumstances, which was confined to the sea, is an unwarranted act of partiality and an attempt to forestall any future action by the LTTE in the airspace above Eelam.

The LTTE is not a non-state actor. In any event, the idea that non-state actors do not have rights in international law is in itself a proposition that is so archaic that it is not taken seriously in modern times. Rights are articulated in modern international law, not on behalf of states, but on behalf of peoples. Self--determination and a series of collective human rights are rights of peoples. But, that apart, the rights of a state which is in the process of formation has always been recognized in international law, both old and new. The facts of the famous Caroline Incident arose out of a civil war situation during the American War of Independence. Rights of revolutionariy states have always been recognized in international law. Otherwise, international law would not be able to accommodate the historically frequent phenomenon of the birth of new states through seccessionist wars.

> Rights of revolutionariy states have always been recognized in international law

Eelam is a state in the process of formation. It has a distinct area, a constant population, an effective administration and definite boundaries. It is administered by the LTTE. As a result, Eelam and - the LTTE as the controlling entity in Eelam - have a distinct identity in terms of international law, with distinct rights and duties in international law. Rights and responsibilities in international law flow from the existence of such a factual situation.

A state in the process of formation has a right to the seas surrounding the land territory over which it has control. Such a right flows from the control of territory. It is control over land territory that gives control over the adjacent sea. The term "territorial sea" itself makes this relationship of the land and the sea clear.

There is also the idea that the link is with the people of the territory. This idea comes from the Anglo-Norwegian Fisheries Case, with which Scandinavians who speak on international law would be expected to have basic familiarity. The International Court of Justice took into account the special relationship which the people of Norway had with the sea in determining the baseline of the territorial sea of Norway. Such a relationship exists between the Tamil fishing people and the seas off the coasts of Eelam. Besides, the defence of Eelam mandates, under the doctrine of necessity, the right of the LTTE to exercise control over the seas that surround Eelam. The failed state of Sri Lanka, which does not control the whole land territory of the island, cannot lay claims to the whole of the appurtenant seas. of the island.

In the ISGA proposals, the LTTE laid clear claims to the maritime areas adjacent to Eelam. This is not without precedent. The Aceh Settlement, which ended the secessionist war between Indonesia and the people of the Aceh Province, contains a clear recognition of the control of the adjacent seas of the province by the people of Aceh. Other peace settlements contain similar principles. The SLMM is far off from the position that is reflected in modern settlements.

The competence of the SLMM to pronounce on the rights to the sea has already been questioned by the LTTE. Whatever competence the SLMM has, it must get its international law right before it makes pronouncements on such vital questions of importance to the Tamil People, lest they be suspected of not holding an even-handed position.

**(S. Muthucumaran is a practicing international lawyer.)**

*Cuis est solum, eius est usque ad caelum ad inferos* ("for whomsoever owns the soil, it is theirs up to the sky and down to the depths").

*Courtesy: sangam.org*

## AN APPEAL TO LORD BUDDHA

Oh Buddha, the enlightened one and an embodiment of peace, why have you become a source of violence in Trincomalee. Since the day you squatted in the heart of Trincomalee town, guarded by murderous, racist, terrorist SriLanka armed forces, the whole area has become a hotbed of arson and murder.I do not understand why on earth did you choose to squat in Trincomalee, when there are several places in the south where you can squat without breaching the peace of the locality, and being cursed by the people.

May I humbly request you to go away from Trincomalee which is the capital city of the Tamil homeland.Judging from the protests of the Tamil people of Trincomalee, you seem to be an unwelcome visitor, and a symbol of Sinhala Budhist hegemony.I feel that the cowardly Sinhala racists who have pushed you in front, are committing atrocities on the Tamil population hiding behind you thereby bringing disrepute to you and your teaching of peace.

I suggest that you go and squat in the center of the cricket pitch of the SSC grounds in Colombo, so that you can be a source of inspiration to the SriLanka cricket team, who seem to be not faring well these days. Else you could squat on the speakers chair in the SriLanka Parliament, so that you could infuse sanity into the brains of racist Sinhala politicians. I am sure that the Tamil people in Trincomalee will be happy if you are gone.

I respect you and your teachings, but not those rabid yellow yeller brigade, who claim to be your desciples. So please go away without being held responsible for any further death and destruction. If you have any mobility problems due to old age affecting your back and limbs, then I could arrange with the Norweigian Government to provide a helicopter to winch you and dump you in a place of your choice in the south.

As an admirer of your lordship, I wish that you go to the south intact voluntarily, rather than being sent by force in pieces in a body bag, just like how the SriLanka armed forces seem to be arriving in the south these days.Please enlighten your followers in SriLanka that Justice is on the side of the Tamil civilians, and that very soon the wrath of Koneswar the almighty deity presiding in Trincomalee will descend on the Sinhala racists who will be driven out of Trincomalee.

*- R.G.S*

Priya Rythms



PRM Institute of Music

Call:

Kangai (Music Director)

020 8204 9076 / 07940 084 453/ 07886 914 375

திரைப்படங்களுக்கு இசை அமைத்து கொடுக்கப்படும்

Keyboard, Guitar, Piano, Drum

Priya Rythms



Students are trained for Trinity College and Royal College of London Examination

130 Taunton Way, Stanmore HA7 1DG

# Labels and pliability

By: K. Sooriyakumaran

As it comes to light that a label of terrorists may be placed on the LTTE by the European Union (EU) thus banning its political activity within EU borders, let's take a step through the history of bans and their effect on the LTTE.

Students of Tamil Nationalism know well that the Tamil Tigers (LTTE) was started by Mr Velupillai Pirabakaran 30 years ago, more precisely on the 5th of May 1972.

In 1978, Sri Lanka banned them under the then Emergency Regulations. At this small beginning the number of full and part time fighters under Mr Pirabakaran's command was less than fifty. The Sri Lankan Tamils used to call them 'our boys', 'extremists' and 'militants'. Mr Pirabakaran was labelled as just another angry young man willing to throw bombs at the Sri Lankan Police when ever there was an opportunity. He was politically insignificant.

Five years later, in 1983, the Tigers were banned again under Sri Lanka's notorious Prevention of Terrorism Act. This time the number of young Tamils under the Mr Pirabakaran's command numbered hundreds. Young Tamils were becoming more aware of this man and his ideals, but his was not yet a politically popular organisation. It remained as a secrefive network of young Tamil men, mainly interested in building up an efficient military machine to resist the counter insurgency forces of the Sri Lankan Government. The popular Tamil dailies, published in Jaffna at that time, continued to call them rebels, militants and extremists (theevira-vaathikal).

During the next four years, the Tigers' military strength grew rapidly. They became the only credible military force to challenge the Sri Lankan state's authority. But even at this point the political platform they were standing on was shaky and unstable.

At this time the Indian Army came into the picture. That's when the Sri Lankan state was on the verge of collapse due to both LTTE and the JVP. Soon the Indians found themselves playing a 'cat and mouse game' in the jungles and villages of the Northeast of Sri Lanka. The LTTE suffered terribly with almost all the LTTE commanders and fighters with middle class back ground, deserting and many emigrating to the West.

When finally the Indians left Sri Lanka, Mr Pirabakaran ventured out of the Vanni jungles. That's when it was decided, by many Tamils, that he was the political and military leader of Tamil Nationalism.

On the 14th of May 1992, India labelled the Tigers as terrorists. As a consequence, the Tigers rear base and their extensive networks, that had been systematically built over the years in South India, were destroyed.

Soon after the LTTE suffered a major military blow in conventional war fighting, when it tried to over run the Elephant Pass military complex.

> What happened in Operation Jayasikurui, Elephant Pass military complex, Sri Lanka's Air Force Base and Airport etc we all know.

Sri Lanka watchers pointed out that the blow in Elephant Pass was as a direct consequence of LTTE losing its rear base in India and discounted the LTTE as a spent force.

However the LTTE bounced back with a string of semi-conventional set piece battles and political programmes.

At this juncture the Sri Lankan Government, headed by Mrs Kumaratunge, started the famous 'war for peace'.

During this war, the LTTE faced its worst political and military crisis. With division after division of Western and Indian trained Sri Lankan Government soldiers knocking at LTTE's front and back doors in the Vanni, the foreign minister, Mr Kadirgamer, was knocking on diplomatic doors which led to the UK and the US banning the Tigers as terrorists within their borders.

With all these blows it was thought that the Tigers would not survive as an independent politico-military force.

However they did not give up their struggle, and what happened in Operation Jayasikurui, Elephant Pass military complex, Sri Lanka's Air Force Base and Airport etc we all know.

Further success was achieved when in the last Sri Lankan general election Tamil National Alliance (the political front of the LTTE) won four electoral districts, Jaffna, Vanni, Trincomalee and Batticaloa, and became the third largest party in the new parliament with twenty two seats.

Thus 30 years from the formation of the LTTE and with multiple international terrorist labels, it had become the mass based political-military organisation, with an extensive over ground and under ground network all over the world, and is celebrated and supported as the vanguard of secular Tamil Nationalism by majority of Tamils in and outside Sri Lanka.

At the same time we find the Sri Lankan nation state almost economically bankrupt, its armed forces trapped in a military quicksand of Jaffna peninsula, its institutions racist and impotent, its media in collective amnesia and hysteria, its elites in denial and the Sinhalese stake holders in tribal exuberance. 'It is the 25th failed state in the world, even worse than Ethiopia' says an American institution *(http://www.fundforpeace.org/programs/fsi/fsindex2006.php?column=rank&#)*.


But with the Canadians and possibly, Europeans following suite with the Indians, British and Americans, by labelling the Tigers as terrorists what does the future hold?

And the question of why can be heard muttered by many Tamil mouths all over the world.

Could it be as one great Tamil said 3 years ago?

*'The sole, ulterior purpose of the US-European-Japan Bloc in trying to influence and manage the LTTE, is to stabilise the Sri Lankan state (25th failed state in the world) in a manner that would make the Tamil Nation sufficiently pliable to accommodate their respective strategic and economic interests' (Sivaram, May 2003).*

# 'EU proscription will seriously damage peace process' - Balasingham



**Further international proscriptions of the Liberation Tigers of Tamil Eelam (LTTE) will seriously impact negatively on the already weakened peace process in Sri Lanka, the LTTE's Chief Negotiator and Political Strategist Anton Balasingham said Thursday. Asked by TamilNet for his comments to press reports that the European Union (EU) would ban the LTTE this week, Mr. Balasingham warned that "the hardliners in the south are urgently seeking the international isolation of the LTTE as a prelude to taking up the military option in earnest."**

"Further proscriptions will invigorate the hardline elements in the south, including those in the present Sri Lankan government urging the military defeat of the LTTE and silence those advocating a negotiated solution," Mr. Balasingham said.

"The more the international community alienates the LTTE, the more the LTTE will be compelled to tread a hardline individualist path," Mr. Balasingham said.

The LTTE's actions and policies are dictated by the deteriorating objective conditions on the ground and not only the international community's preferences, Mr. Balasingham, who has led the LTTE's delegations in several sets of negotiations with different Sri Lankan governments, said.

For at least two years, the Sri Lankan state has been waging a 'shadow war' against the LTTE, Mr. Balasingham pointed out. "This shadow war has now transformed into a low-intensity war."

"Emboldened by international support, and especially by further proscriptions of the LTTE, the Sinhala hardline elements will undoubtedly take steps to further escalate the violence and precipitate a war in which they hope to destroy the LTTE," he said. "If this happens, the LTTE will be compelled to resist."

"As such [an EU ban] is not going to help bring about peace, [but] will only serve to exacerbate the conditions of war and endanger the lives of Tamil civilians entrapped by Sinhala occupation forces," Mr. Balasingham further said.

Reuters Thursday quoted international diplomats in Colombo as saying the EU would include the LTTE on its list of banned organisations with in days, possibly by Friday.

> Sri Lankan state has been waging a 'shadow war' against the LTTE.

"A decision in principle is due within the next couple of days," a EU diplomat said on Wednesday (17 May) according to Reuters.

EU member the UK as well as the United States, Canada and India have already listed the Tamil Tigers as a terrorist group and the reports come soon after a senior US official said Washington had urged the EU to also follow suit.

"We will talk to the EU about this. The EU needs to consult among its 25 members and take a decision," Donald Camp, US principal deputy assistant secretary of state for South and Central Asian affairs was quoted as saying earlier this week.


The EU imposed a travel ban on the Tamil Tigers last October.

But the terror list measure is still awaiting a rubber-stamp from the 25 member states of the bloc, all of which must agree.

*(TamilNet)*



ஸ்ரீ முத்துமாரியம்மன் ஜோதிடம்





(Specialist International Astro Palmist)

சாஸ்திரி இராமகிருஸ்ணகுமரர் அவர்கள்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள இவர் கைரேகை, முகநாடி, ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக தொழில், கல்வி, குடும்பம், திருமணம், குழந்தை பாக்கியம், மற்றும் உங்கள் பிரச்சனைகளைக் கூறுவதுடன் நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை, பற்றிய விபரங்களைத் தெரியப்படுத்தி பரிகாரமும் கூறுகிறார். இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி வாழ்க்கையில் •எல்லா நலன்களும் பெற்று வாழுங்கள். எத்தனையோ சாஸ்திரிகளிடம் உங்கள் பலன்களைக் கேட்டிருப்பீர்கள். இவரிடம் ஒருமுறை கேட்டுப் பாருங்கள்.

Tel: 020 8423 8323 Mob: 07947 371 502

**Sastry Ramakrishnakumar International Astro Palmist**

Reader - New Arrival to London. An expert sastry at your service, past, present & future of your life, will be read over to you from palm reading, face reading & chart reading, prediction in business, education, job, love, marriage, family problem, sickness, promotion. We also undertake shanthi pooja and lakshmi pooja (prayers) etc. We also provide you protection amenities. Tamil, Hindi & English languages

**SRI MUTHUMARIYAMMAN JYOTHIDAM**

New Shanker Superstore (Near South Harrow Tube)

231-233 Northolt Road, South Harrow HA2 8HN

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
சேயோன் - திரு
சிறி - சுஜீத்

பொறுப்பாசிரியர்
- கோபி -

விளம்பரம்
கௌரி - பாலா

அச்சு
ஊர்மிளா

வடிவமைப்பு
jasmine studio

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி - ஹபீப்

இணையத்தள வடிவமைப்பு
ரஜீவன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
செல்வி - முருகானந்தன்

வழங்கல்
உதயகுமார்-கதிர்-கரன்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
020 8640 4604
020 8286 9327

தொலைநகல் (Fax)
020 8640 6972

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3LJ
Surrey

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month. The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# சற்று மாறுதலுக்காக

## காற்றே நீ வீசாதே

**சேயோன்**
*(ஒரு பேப்பர்)*

ஒப்பாரி வைக்கின்ற காலத்தில் இப்போது நாம் நிற்கின்றோம். இப்போது 72 மணித்தியாலங்களுக்குள் 48 ஈழத்தமிழர் கொல்லப்பட்டனர் என்று ஒரு செய்தி சொல்கின்றது அவ்வளவு பேரும் சிங்கள வெறியர்களாலும், அந்த வெறியர்களோடு சேர்ந்தியங்கும் ஈ.பி.டி.பி, கருணா குழு என்கின்ற சொறியர்களாலும் தான் கொல்லப்பட்டனர். அதுபோக காணாமல் போனோர் பட்டியல் மிக மிக நீளமானது.

அல்லைப்பிட்டியில் கொல்லப்பட்டோரின் நிழற்படங்களைப் பார்த்தேன். அதில் ஒன்று: ஒருபுறம் தாய், மறுபுறம் தந்தை. இருவருக்குமிடையில் நான்கு மாதப் பிஞ்சுக் குழந்தை, நான்கு வயதுச் சிறுவன் தந்தையின் மேல் கைபோட்டு அணைத்தபடி அத்தனை பேரும் பிணமாக. அருகில் கும்பியாக இரத்தம்.

இரா படுக்கையில் இப்படி ஆகும் என்று ஒரு சொட்டாவது அவர்கள் நினைத்திருப்பார்களா? இன்னொன்றை நினைத்த போதும் நான் உலுக்கப்படுகின்றேன். அந்த இரண்டு பிள்ளைகளும் நான் பெற்று வளர்த்த மழலையை குறும்பை இரசித்த பிள்ளைகளாக இருந்தால்?

அப்படி ஒரு கற்பனையையே என்னால் சகிக்க முடியாதென்றால் அதுவே நிஜமாக நிகழ்கின்ற போது, எப்படி அதனைத் தாங்க முடியும்? துக்கம் இதயத்திலிருந்து பீறிட்டுப் பாயும்.

எனது நண்பர் ஒருவர் இச்சம்பவம் கேள்விப்பட்ட சில மணி நேரங்களில் கோயில் ஒன்றுக்குப் போயுள்ளார். கோயிலில் நின்ற பக்தர்கள் சிலரிடம் இச்சம்பவத்தைச் சொல்லி வேதனைப்பட்டிருக்கிறார். அந்தப் பக்தர்களுக்கு அச்சம்பவம் குறித்து ஒரு துளி வேதனை கூட வரவில்லை. அது அப்படித்தான் நடக்கும் என்றிருக்கிறார் ஒருவர். 'நல்ல காலம் நாங்கள் இங்காலை வந்திட்டம்' என்றிருக்கிறார் மற்றவர். அதில் நின்ற இன்னொரு பக்தர் இப்படிச் சொன்னார்: 'உவங்களும் ஏதும் சொறிஞ்சிருப்பாங்கள். உவங்கள் சொறியாமல் ஆமி வந்து வெட்டிக் கொல்லுதே? உவங்கள் சொறியிறதை நிப்பாட்டட்டும். பிறகு ஏதும் நடக்குதோ பாருங்கோ'

சொன்னவர்கள் பஞ்சாலாத்தி காட்டியபோது 'பிள்ளையாரப்பா' என்று தலையில் குட்டிக் கும்பிட்டார்கள். இதை நண்பர் எனக்குச் சொன்னபோது கோவிப்பதா, வேதனைப்படுவதா என்ன செய்வதென்றே தெரியவில்லை. 'சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி கிளியே'

வேறொரு நண்பரின் கதை இன்னும் மோசமானது. 'இவங்கள் என்ன செய்யிறாங்கள்? நித்திரை கொள்ளுறாங்களோ?' என்று ஒருநாள் என்னிடம் கேட்டார். அடுத்தநாள் 'இவங்கள் தொடங்கிறதெண்டால் சனங்களுக்குப் பாதுகாப்பு குடுத்திட்டு தொடங்க வேணும். இஞ்சை பாருங்கோ சனங்கள் வீணாச் சாகுது'.

இப்படி நாள்தோறும் முரண்பட்ட மோசமான மனிதத்தன்மையே அற்ற கதைகளைக் கேட்கிறோம். இதே ஆட்களிடம் 'நீங்கள் இரண்டாயிரம் பவுண்ட் குடுத்திட்டீங்களோ?' என்று கேட்டால், 'எனக்கு இருக்கிற பிரச்சினை உவங்களுக்கு விளங்குமே? வீட்டிலை என்ன காசு மரமா காய்ச்சுக் கிடக்கு?' என்று கேட்கிறார்கள்.

இவர்களெல்லோரும் எப்போது எம் மக்களின் துன்பங்களை தம் துன்பங்கள் ஆக்கப் போகிறார்கள்? இத்துயர் அறிகிறபோது எப்போது ஒரு கேவல் எழப் போகிறது? அடித்து புரள வேண்டாம். நெஞ்சில் ஒரு விம்மலாவது வராதா?

எங்கள் மண்ணில் எத்தனை குடிசைகள். அவற்றில் எத்தனை வாழ்க்கைகள். எத்தனை விருப்புகள் வெறுப்புகள், எத்தனை உயிர்ப்புகள் கசப்புகள், எத்தனை வெற்றிகள் விரக்திகள், எத்தனை இன்பங்கள் இன்னல்கள், எத்தனை மகிழ்வுகள் அவலங்கள். அத்தனையையும் தாங்கி எம்மக்கள் நம் மண்ணில் வாழ்கின்றனர். அவர்கள் வாழ்வில் மகத்தான சோகங்கள் இருக்கும். மகிழ்வான கணங்கள் இருக்கும். எல்லோர் வாழ்விலும் அம்மா இருந்திருப்பார். கல்லு வைத்த கோயிலெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டிருப்பார். என் அம்மா போல் உன் அம்மா போல் எல்லோரினதும் அம்மாக்கள் போல் தன் வயிற்றுக்கு வஞ்சகம் செய்து தன் பிள்ளையை வளர்த்திருப்பார்.

இப்படி ஏற்றிப் போற்றி வளர்த்த பிள்ளை காணாமல் போவது என்றால், பொத்திப் பொத்தி வளர்த்த பிள்ளை தெரியாமலே மறைவது என்றால், இல்லாமலே அழிவது என்றால்?

எவரிடம் போய் இத்துயரைச் சொல்வது? எவரிடம் போய்? ஆறுதல் பெறுவது? யாரிடம் போய் குமுறி அழுவது? அழுது ஆற்றக்கூடிய துயரா இது. குமுறி அழுதால் இக்கொடுந்துயர் குறைந்து போகுமா?

எங்களுக்கு அது நடந்தால் உணர்ந்துதான் இருப்போம். எங்கள் மகன், எங்கள் உறவு, எங்களுடன் ஒன்றாக விளையாடிய உயிர் எங்களுடன் ஒன்றாக உண்டு, உடுத்து உறங்கிச் சீவித்த ஆத்துமா. இடையிலே என்ன ஆனார் என்று தெரியாமலே மறைந்து போவதென்றால், இடையில் என்ன நிகழ்ந்தது என்று தெரிய முன்னரே உயிர் பிரிந்து போவதென்றால்,

சொல்லுங்கள் நண்பர்களே அத்துயர் எப்படி இருக்கும்? துயர் என்கின்ற வெற்றுச் சொல்லால் அதை உணர்த்தி விட முடியுமா? எம்மக்கள் துயரை எம் துயராக உணர மாட்டோமா?.

காற்றே நீ வீசாதே
கடலே நீ இரையாதே
நிலவே நீ எறியாதே – எம்
நெஞ்சமெல்லாம் தீயாச்சே!

# தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான தடையும் ஐரோப்பிய ஒன்றியமும்

தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்ய இருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இத்தடைக்கு அமெரிக்காவின் ஊக்குவிப்பே காரணம் என்பது கொழும்பில் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியின்போது அமெரிக்க பிரதிநிதி டொனால்ட் காம்புன் கூற்றிலிருந்து தெரியவருகிறது. ஏனெனில் விடுதலைப் புலிகளினால் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கோ அல்லது வேறு ஐரோப்பிய நாடுகளுக்கோ எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்பதை அனைவரும் அறிவர். அமெரிக்க அரசு மாத்திரமன்றி சிங்கள அரசும் விடுதலைப் புலிகளைத் தடை செய்யும்படி ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அழுத்தம் கொடுத்துக் கொண்டே இருந்து வந்திருக்கிறது. அத்துடன் அரசாங்கப் பிரச்சாரங்களுடன் வலதுசாரி ஊடகங்களும் சேர்ந்து விடுதலைப் புலிகளுக்கெதிராக பாதகமான பக்கச் சார்பான பிரச்சாரங்களையே செய்து வந்திருக்கின்றன.

ஆனால் உண்மை நிலையை ஐரோப்பிய ஒன்றியம் நன்கறியும். ஏனெனில் திட்டமிட்ட விதத்தில், தமிழ் ஊடகவியலாளர்களையும் அரசியல் தலைவர்களையும் இராணுவமும் அதனைச் சார்ந்த கைக்கூலிகளும் கொன்று குவித்ததை முழு உலகமும் அறியும். ஜெனீவாவில் பெப்ரவரி 06இல் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின் 167 அப்பாவித் தமிழர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 36 பேர் காணாமற் போயிருக்கிறார்கள். கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பைச் சாக்காகக் கொண்டு அப்பாவித் தமிழ்க் குடிமக்கள் மீது வானத்திலிருந்தும் தரையிலிருந்தும் கடலிலிருந்தும் குண்டுமாரி பொழிந்து அநியாயமாக பொது மக்களைக் கொன்றதும் உலக நாடுகளுக்கு நன்கு தெரியும். ஏனெனில் இந்த நாடுகளின் பிரதிநிதிகள் கொழும்பில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவற்றைக் கண்டுகொள்ளாத சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாக நினைப்பதும் தடைசெய்ய முற்படுவதும் நியாயத்திற்கு அப்பாற்பட்ட ஒரு விடயமாகும்.

இலங்கை அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகள் தமிழ் மக்களிடையே இன அழிப்பையும், பாலியல் வல்லுறவையும் பயங்கரவாதத்தையும் பரப்பி தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி தமது ஆளுமையின் கீழ் அடிமைகளாக வாழ வைக்கவே எத்தனித்தது. இவைகளைக் கண்டுகொள்ளாது வாய்மூடி மௌனிகளாக இருந்த அமெரிக்காவும் அதனது அடிவருடிகளான பிரித்தானிய அரசாங்கமும் இன்று தமிழ் மக்களின் ஒரேயொரு பாதுகாவலர்களாக விளங்கும் விடுதலைப் புலிகளுக்கு பயங்கரவாதிகள் என பட்டஞ் சூட்ட விழைவது இவ்வரசாங்கங்களின் பாரபட்சமான மனப்போக்கையே காட்டுகிறது.

அதே நேரத்தில் அமெரிக்காவின் மிரட்டல்களுக்கு முகங்கொடுக்கும் துணிவு அற்ற ஐரோப்பிய ஒன்றியம் எதுவித காரணமுமின்றி அமெரிக்காவின் தயவிற்காக நீதியையும், நியாயத்தையும் காற்றில் எறிந்து விட்டு விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய முனைகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் மொத்த நாடுகளும் எவ்வித சுதந்திர செயற்பாடுகளுமின்றி அமெரிக்காவின் உந்துதல்களுக்கு வளைந்து கொடுத்துக்கொண்டு இருப்பது பரிதாபகரமான ஒரு காட்சியாகும்.

ஈராக்கிலும், ஆப்பானிஸ்தானிலும் அமெரிக்காவின் அராஜகத்திற்கு பக்கபலமாக செயற்படும் இந்த ஐரோப்பிய நாடுகளிடமிருந்து வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. ஆனாலும் ஓரிரு நாடுகளாவது அமெரிக்காவின் வேண்டுகோள்களுக்கு வளைந்துகொடுக்காது விடுதலைப் புலிகளின் தடையை மறுக்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

இவர்கள் விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதனால் உண்மையில் நடைபெறப் போவதென்ன? இதனால் விடுதலைப் புலிகள் தம் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு சர்வதேசம் கூறுவதன்படி ஒடுங்கி அடங்கி நடப்பார்கள் என நினைத்தால் இது அவர்களுக்கு ஒரு கனவாகத்தானிருக்க முடியும். இவர்களுடைய தடை விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தி அவர்களுடைய விடுதலைப் போராட்டத்தை வலுப்படுத்தவே செய்யும். ஏனெனில் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் மீது ஏதேச்சாதிகாரமான அக்கிரமமான ஆட்சியை கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. 50 வருட காலமாக போராடியும் கிடைக்காத விடுதலையும் சம அந்தஸ்தும் சர்வதேச சமூகத்தின் வேண்டுதலினால் ஒருபோதும் கிடைத்து விடப் போவதில்லை என்பதை விடுதலைப்புலிகளின் தலைமைத்துவம் நன்கறியும். இதுமட்டுமன்றி சர்வதேச சமூகம் சிங்கள அரசாங்கத்திற்குச் சாதகமாகச் செயற்படுவது சிங்கள அதீதவாதிகளை இன்னும் உற்சாகப்படுத்தி தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளையும் இல்லாமற் செய்துவிடும்.

அதுமட்டுமன்றி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கொலைகளையும், காட்டுமிராண்டித்தனங்களையும் அதிகப்படுத்தி இன்னுமொரு போருக்கு வழிவகுக்கும். எனவே இத்தடை சமாதானத்தைத் உண்டுபண்ணுவதற்குப் பதிலாக போருக்கே வழிவகுக்கும்.

*- இராத*

# இந்த சர்வதேச சமூகம் எண்டால் யார் மச்சான்?

**மயூரன்**
*( 'ம்' மில் )*

கனடாத் தடைக்கு எங்களவர்கள் அங்கே கருத்தாதரவு தேடாததுதான் காரணம் என்கிறார் சிவத்தம்பி.

குழந்தைகளை கொன்றதை சர்வதேச சமூகத்தின் மத்தியில் கொண்டுசென்று பரப்புரைக்குமாறு வேண்டுகின்றன புதினம், நிதர்சனம் உள்ளிட்ட வலைத்தளங்கள்.

சர்வதேச சமூகம் அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்கிறார் தமிழ்செல்வன்.

அதையே தம் பக்கமிருந்து சொல்கிறார் மகிந்த.

எங்கு பார்த்தாலும், யாரைக் கேட்டாலும், ஒருவார்த்தை மிகவும் பிரபலமாகி இருக்கிறது. அதுதான் 'சர்வதேச சமூகம்'.

சர்வதேச சமூகம் என்றால், உலக நாடுகளில் வாழ்கின்ற மக்களா? அவர்கள் எப்படி எமது பிரச்சனைகளில் தலையிட்டு தீர்வு தேடித் தருவார்கள்?

> *சர்வதேச சமூகம் என்பதற்கான சரியான விளக்கம், உலகத்தின் அதிகார வர்க்கங்கள் என்பதாகத்தான் அமைய முடியும்.*

பெரும்பாலும், நாட்டை ஆள்வது மக்கள் இல்லை என்பதாலும், இயல்பிலேயே தேர்தலைத் தவிர மக்களுக்கும் அரசாங்கங்களுக்கும், ஆளும் சபைகளுக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது என்பதாலும், இவ்வாறான நெருக்குவாரங்களை பிரயோகிக்கும் வல்லமையுள்ள சர்வதேச சமூகம் அவர்கள் இல்லை என்று ஆகிறது.

அப்படியானால் சர்வதேச சமூகம் என்பது, உலக நாடுகளை ஆளும் அரசாங்கங்களாகத்தான் இருக்க வேண்டும்.

உலக நாட்டு அரசாங்கங்கள் எல்லாமே சர்வதேச சமூகம் தானா?

கியூபாவும், கென்யாவும் சோமாலியாவும் மாலைதீவும் இலங்கை பிரச்சனையில் கருத்துக்கூறினால் அதற்கு ஏதாவது அர்த்தம் இருப்பதாக யாரேனும் கருதுவார்களா?

ஆக சர்வதேச சமூகம் என்பது படைபலம், உலக, பிராந்திய அரசியல் வல்லாதிக்கம் கொண்ட நாடுகளின் அரசாங்கங்கள். அதிலும் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையில் வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகளின் அரசாங்கங்கள்.

இந்த நாடுகளின் அரசாங்கங்கள் எல்லாம் என்ன? தம்மளவில் சுயாதீனமான, ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளா? ஒருபோதுமில்லை. அந்தந்த நாடுகளின், உலகின் அதிகார வர்க்கத்தின் பிரதிநிதிகள்.

ஆகமொத்தத்தில் சர்வதேச சமூகம் என்பதற்கான சரியான விளக்கம், உலகத்தின் அதிகார வர்க்கங்கள் என்பதாகத்தான் அமைய முடியும்.

இலங்கையை பொறுத்த வரையில், இந்திய பிராந்திய அதிகார வர்க்கத்தையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இந்த 'அதிகார வர்க்கம் = சர்வதேச சமூகத்தின்' உள்ளத்தை கொள்ளை கொள்ளும் பணிகளை முன்னெடுத்துச் செல்லும்படித்தான் இந்த ஊடகங்களும் ஆய்வாளர்களும் பெரும் கூக்குரலும் கூச்சலும் எழுப்பி வருகிறார்கள்.

இந்த 'அதிகார வர்க்கம் = சர்வதேச சமூகம்' தான் இந்த சமாதான பேச்சுவார்த்தைகளை கண்காணித்து நடத்தி வருகிறதாம்.

இவர்கள் எல்லாம் பரப்புரை செய்து, கூக்குரலிட்டு காலில் விழுந்து போட்டோ காட்டினால்தான் இந்த 'அதிகார வர்க்கம் = சர்வதேச சமூகம்' எமது பிரச்சனைகளை புரிந்து கொண்டு சிங்கள பேரினவாதிகளின் குரல்வளையை நெரித்து தீர்வினை பறித்தெடுத்து வெற்றிலை பாக்கோடு கொண்டு வந்து வைக்குமாம்.

அவர்கள் என்ன அன்றாடம் பேப்பர் கூட படிக்காமல் தூங்கிக் கொண்டிருக்கும் ஆட்களா?

இந்த அதிகார வர்க்கத்தின் கையில் தான் சீ ஐ ஏ, கே ஜீ பீ, ரோ உள்ளிட்ட அதியுயர் மூளையும், அதி நவீன தொழிநுட்ப வளங்களும் கொண்ட உளவு நிறுவனங்கள் இருக்கின்றன.

அவை எல்லாம் அவர்களது அதிகாரங்களை தக்க வைத்துக் கொள்வதற்காகவே பணியாற்றுகின்றன.

அவர்களிடமே உலகை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக் கூடிய இராணுவ, ஆயுத பலம் இருக்கிறது. பொருளாதார பலம் இருக்கிறது.

அவர்கள் தான் தமது இருப்புக்காகவும், இலகுவான சுரண்டலுக்காகவும் உலகம் முழுக்க போராட்டங்களை எரியச் செய்த வண்ணமிருக்கின்றனர்.

அவர்களிடத்தில் போட்டோ காட்டி கண்ணீர் சொரிந்து சுலோகம் ஏந்தி 'கருத்தாதரவும்' 'கருணையும்' வேண்டி எமது தீர்வை வாங்கித் தருமாறு மன்றாடச் சொல்கிறார்கள்.

இந்த வலைத்தளங்களுக்கெல்லாம் வருவதற்கு முதல் செய்திகளும் போட்டோக்களும் அவர்களைத்தான் சென்றடைகின்றன. சிலவேளை சம்பவம் நடக்க முன்னரும் கூட சென்றடைந்துவிடுகின்றன.

எமது பத்திரிகைகளின் அரசியல் ஆய்வாளர்களுக்கும், வியூகம் வகுப்பாளர்களுக்கும், பீஷ்மர்களுக்கும், விதுரர்களுக்கும் தகவல் கிடைக்கு முன்னமே, தலைகளை கொய்தவர்கள் யார் என்பதும், விக்கியை சுட்டது எதற்காக என்பதும் அவர்களுக்கு தெரிந்து விடுகின்றது. சுட்ட துப்பாக்கியே அவர்கள் அனுப்பி வைத்ததாகவும் இருக்கக்கூடும்.

இந்த அதிகார வர்க்கம் தனக்கு தேவையான நேரங்களில் தேவையான போராட்டங்களை கைதூக்கிவிடும், தேவையான நேரங்களில் தேவையில்லாத போராட்டங்களை காலடியில் போட்டு நசுக்கும்.

அத்தனையும் தமது இருப்புக்காகவும், சுயநலத்திற்காகவும், அதிகாரத் தக்க வைப்புக்காகவும் செய்யப்படுவது.

இந்த வர்க்கத்திடம் விலைபோன தலைவர்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

சுயநலமும் வஞ்சகமும் கோரமும் வெடித்து ஒழுகும் அதிகாரவர்க்க முகத்தை மறைத்து அழகாக அது அணிந்துகொள்ளும் முகமூடியே, மாய முகமே 'சர்வதேச சமூகம்' என்கிற பெயர்.

இது வெற்று மாயை. தொலைகாட்சிகளாலும், அறிக்கைக் காகிதங்களாலும் மேடைப் பேச்சாளர்களாலும் உருவாக்கப்பட்டு பேணிப் பாதுகாக்கப்படும் மாய்த்தோற்றம்.

BBC, Reuters, CNN போன்ற உலகப் பெரும் ஊடகங்களை பயன்படுத்தி இந்த மாயத்தோற்றத்தை வெகு நுட்பமாக வளர்த்து வைத்திருக்கிறார்கள். அறிக்கை காகிதங்களால் கட்டப்பட்ட தோரணங்களைக்கொண்டு தமது அதிகார முகத்தை திரை போட்டு வைத்திருக்கிறார்கள். இந்த திரையும், மாயமுகமும் கூட சுரண்டலுக்கும், அதிகார தக்கவைப்புக்குமே.

இந்த மாய முகத்திற்கு வளைந்து கொடுக்கும் எமது ஒவ்வொரு செயற்பாடும், அதிகாரத்துக்கு வளைந்து கொடுப்பதாகவே அமையும்.

அழகான, நேர்த்தியான கறுப்பு கோர்ட் போட்டு வந்து உயர் ரக ஒலிவாங்கியில், பட்டும் படாமலும் கருத்துக்களை கூறி ஜாலம் காட்டும் சிறந்த பேச்சாளர்களின் திருவாயால் சிங்களதேசம் கண்டிக்கப்பட்டால் நாம் யாரும் புளகாகிதமடைவோமானால், அந்த அதிகாரக்கோரமுகம் வெற்றி பெற்று விட்டது என்பதுதான் அர்த்தம்.

BBC யே எமது பிரச்சனைகளை இனங்கண்டு சரியாக அறிவிக்கிறது என்று நாம் மார்தட்டி பெருமைப்பட்டுக் கொண்டோமானால், அந்த அதிகார வர்க்கத்திடம், அதன் மாயமுகத்திடம் தோற்றுப்போனோம் என்பதுதான் அர்த்தம்.

இந்த சர்வதேச சமூகம் தான் எங்களை எப்போதும் ஆட்டி வைக்கும் சக்தி.

அவர்களுக்கு எல்லாம் தெரியும். நீங்கள் ஒன்றும் கருத்தாதரவு தேட வேண்டாம்.

புலிகளை அமெரிக்கா கண்டித்தால் எனது நண்பர் ஒருவருக்கு சரியான சந்தோசம். 'நல்ல கப்பல் ஒண்டு புலிக்கு வந்து இறங்கியிருக்கும்' என்று மகிழ்வார்.

யதார்த்தம் இதுதான். இவர்கள் தமது சுயநலன்களுக்கு தேவைப்படும்போது யாரையும் தலையில் வைத்து ஆடவும், காலடியில் போட்டு நசுக்கவும் செய்வார்கள். இரகசிய ஒப்பந்தங்களை செய்துவைத்துக்கொண்டு அறிக்கை வாய்வீச்சு காட்டுவார்கள்.

இவர்களிடம் ஆதரவு தேடுவதையே நோக்காக கொண்டு எவரும் உங்கள் காலத்தையும் உழைப்பினையும் செலவளிக்க வேண்டாம். அதனை ஆக்க பூர்வமான வழியில் செலவிடலாம்.

> *தமது இருப்புக்காகவும், இலகுவான சுரண்டலுக்காகவும் உலகம் முழுக்க போராட்டங்களை எரியச் செய்த வண்ணமிருக்கின்றனர்.*

பயங்கரவாதப் பட்டியல், கண்டன அறிக்கை, மன்மோகன் சிங்கின் தொலைபேசி அழைப்பு, யசூசி அகாஷி யின் வருகை இதெல்லாம் ஒன்றுமில்லை. வெறும் பம்மாத்து. இதையெல்லாம் பெரிதுபடுத்திக் கொண்டு இருக்கும் மூளையற்ற ஊடகங்களை தள்ளி விடலாம்.

இந்த ஊடகங்களும் அதிகாரவர்க்கம் தக்க வைக்க விரும்பும் மாய முகத்தின் பகுதிகளே. இவர்கள் மக்கள் விடுதலைக்கான நேச சக்திகள் அல்லர்.

எந்த ஊடகங்கள் சினிமாச் செய்திகளைப்போல, கிரிக்கட் செய்திகளைப் போல போராட்டத்தையும், மக்கள் சாவுகளையும் படங்காட்டி கிளர்ச்சியூட்டி உங்களுக்கு அறிவிக்கின்றனவோ, அந்த ஊடகங்களை, வலைத்தளங்களை, தொலைக்காட்சிகளை, பத்திரிகைகளை சந்தேகப்படுங்கள்.

இவற்றுக்கும் மூன்றாந்தர சினிமாப் பத்திரிகைகளுக்கும் எந்த வேறுபாடுமில்லை.

இந்த ஊடகங்களின் மூலவர்கள் பாதுகாப்பான நாடுகளில் பாதுகாப்பாக அமர்ந்து கொண்டு செய்தி பெறுபவர்கள். அன்றாடம் சூடான செய்திகள் தேவைப்படும் இவர்களைப் போன்ற மற்றையவர்களுக்காக இவர்கள் விருந்து படைப்பவர்கள்.

ஊடகங்கள் தமது நோக்கத்தில் நிமிர்வுடனும் தெளிவுடனும் இருக்க வேண்டும். மக்களை நெறிப்படுத்தும் பணியை செய்யவேண்டும். வெறும் செய்தி ஊடகங்கள் கூட இதனை அழகாக செய்யலாம்.

பிரசாரங்களின், மாயைகளின் முகமூடிகளை கிழித்து மக்களுக்கு உண்மையை கூறலாம்.

நமது மக்களைப்பற்றியும் அவர்களது எதிர்காலத்தைப் பற்றியும் உரையாடலாம். செயற்படலாம்.

'பிரசாரங்களுக்கூடாகவன்றி அவரவர் சார்ந்த நலன்களுக்கூடாகவேவரலாற்றை எடைபோடுவது அவசியம்.'

*- மு. திருநாவுக்கரசு - சமஷ்டியா தனிநாடா - அறிவு அமுது*

*தாயகம் காப்போரின்*

*தாள் பணிவோம் -*

*யாவும்*

*தமக்கென*

*நினைப்போரை*

*விலத்தி வைப்போம்.*

ஒரு பேப்பர்
ORU PAPER




# குரு சமர்ப்பணம்



சிவசக்தி சிவநேசன்

மனதுந் ஆத்மாவை உருக்கி இசைந்து போவதனாலோ தானோ எமக்குக் கிடைத்த அரும் பொக்கிஷம், கர்நாடக சங்கீதத்திற்கு. கர்நாடக "இசை" என முன்னோர்கள் வைத் தார்கள். எமது கர்நாடக இசை இரு வகைப்பட்டது: ஒன்று "கல்பிதம்" மற்றது "மனோதர்ம சங்கீதம்" முன்னையது ஒரு வரையறைக்குள் உட்பட்டு பாடப்படுவது. சுரளி வரிசைகள், கீதங்கள், கீர்த்தனைகள் போன்றவை. மனோதர்ம சங்கீதமோ, ஒரு கலைஞனின் கற்பனையில் திளைத்து ஆத்மாவுடன் ஒன்று பட்டு இசைப்பது மனோ தர்ம சங்கீதமே எமது இசையை மற்றைய இசையில் இருந்து தனித்துவப்பட்டு விலத்தி நிற்பது. இத்தனித்துவமே இதன் சிறப்பும் அதேநேரத்தில் எழுத்தில் வடிக்கமுடியாத தன்மையால் குருவை சார்ந்து நிற்பதும், தவிர்க்க முடியாத தன்மை கொண்டது. இதனாலேயே இசையைக் கற்பிக்கும் குருவிற்கு எழுத்தில் வடிக்கமுடியாத மனோ தர்ம சங்கீதத்தை வழிமுறை வழிமுறையாக சிஷ்யர்களுக்கு கற்பிப்பதனால் குருவிற்கு தனிச்சிறப்பு.

இசைக்கே தன்னை அர்ப்பணித்து இசையை யே வாழ்வாகக் கொண்டிருக்கும் திருமதி சிவ சக்தி சிவநேசன், இந்த குருவழி காட்டலை நன்கு உணர்ந்த தன்மையினால் "குரு சமர்ப்பணம்" என கடந்த 25Feb திகதியில் பாரதிய வித்யா பவனில் நடந்தேறிய நிகழ்ச்சிக்கு பெயர் சூட்டியது எந்த வகையிலும் ஆச்சரிய ப்படத்தக்கதல்ல.

"சிவசக்தி" London இசைப் பிரியர்களிற்கு புதியவர் அல்ல. பல அரங்கேற்றங்களிலும், தனிப்பட்ட கச்சேரிகளிலும் பல மாணவர்களை அரங்கேற்றியும், தனக்கென்று ஒரு தனியிடம் அமைத்தவர். இந்த "குரு சமர்ப்பணம்" நிகழ்ச்சி, மற்றைய கச்சேரிகளைப் போல் இருக்கும் என எதிர்பார்த்து வந்தவர்களிற்கு ஏமாற்றமோ இசை புரிந்தவர்களிற்கு இன்ப அதிர்ச்சி. அடக்கமுடியாத ஆச்சரியம். காரணம் மற்றைய கச்சேரி போலல்லாது, பாடிய உருப்படிகள் தனித்தன்மையான பாடல்கள் மட்டுமன்றி இசை நுணுக்கமறிந்த இசை மேதைகளால் மட்டுமே கையாளக் கூடிய இராகங்களில் அமைந்தவை.

ஸ்ரீலால்குடி G.ஜெயராமன் சாருகேசி வர்ணத்துடன் தொடங்கி தீட்சிதரின் பிலஹரியில் அமைந்த ஏகதந்தம் பஜேகம் உடன் களைகட்டி, தியாகராஜ சுவாமிகளின் சாவேரியில் அமைந்த, "மாபால வெலசி" உருப்படியூடாக இசைப்பிரியர்களின் மனத்தை உருக்கி, பிழிந்தேவிட்டார். கச்சேரியின் முதற்பாகம், மிகக் கச்சிதமாக துரிதகதியில் பாடிய "நெனருஞ்சரா" உருப்படியுடன் முடிவெய்தியது.

"நாயகி" ராகத்தில் அமைந்த மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ முத்துச்சாமி தீட்சிதரின் "ரங்க நாயகம்" புளகாங்கிதம் அடைய வைத்தது. காரணம் பிரசித்தி பெற்ற இசைக் கலைஞர்களையே குழப்பக்கூடிய ராகம், இந்த நாயகி. சிறிது கவனம் தப்பினால் "தர்பார்" இராகமாக மாறக்கூடிய அபாயம் இந்த நாயகியில் உண்டு.

கச்சேரியின் இரண்டாம் பாகம் தியாகராஜ சுவாமிகளின் மாயாமாளவகௌளையில் அமைந்த "விதுலகு ம்ரொக்கேத" உடன் ஆரம்பித்தது இதுவே கச்சேரியின் பிரதான உருப்படியாக எடுக்கப்பட்டது. தனது இசைத் திறமையை முழுமையாகவே ராக ஆலாபனையிலும் கற்பனா சுரத்திலும் வெளிப்படுத்தினார். தனியாவர்த்தனத்தின்போது திரு.எம்.பாலச் சந்தரும், கடத்தில் பெங்களூர் பிரகாஷ் உம், மோர்சிங்கில் சிதம்பரநாதனும் மேலும் கச்சேரிக்கு மெருகூட்டினார் என்று சொல்லுவதைத் தவிர, இவர்களின் வாசிப்பின் மகிமைக்கு வேறு வார்த்தைகள் கிடையாது. சபையோரின் வேண்டுகோள்களுக்கு ஏற்ப ஒரு மலையாளப் பாடலும், கன்னடப் பாடலும் சாகித்திய சுத்தமாக இசைத்தார். கச்சேரியின் இரண்டாம் பாகத்தில் குறிப்பிடத்தக்க உருப்படி, இசை உலகத்தில் தனக்கென தனியிடம் அமைத்துச் சென்ற சிவசக்தியின் குருவான யாழ்ப்பாணம் ப்ரம்ம ஸ்ரீ வீரமணி அய்யரின் "சாரங்கன் மருகனே" என்ற பதினொரு ராகங்களில் அமைந்த உருப்படி ஒவ்வொரு வரியிலும் இரு ராகங்களை அமைத்து மிகச் சாதுரியமாகப் பின்னியிருந்த இந்த உருப்படி, சிவசக்தியின் இசைத்திறமையில் இன்னும் மெருகேறியது. மகாராஜபுரம் சந்தானம் 60களில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தபோது அய்யரின் இந்த உருப்படியை சங்கீத உலகிற்கு வெளிக்கொணர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

புதுமைக்கவிஞன், புரட்சிக்கவிஞன், மகாகவி எல்லாவுமிருக்கும் சொந்தக்காரனான பாரதியாரின் "சொல்லவல்லாயோ கிளியே" என்ற பாடல், சிவசக்தியின் தற்போதைய குருவான இசைமேதை T.V. கோபால கிருஷ்ணன் கை வண்ணத்தில் அமைத்த கீரவாணியில் அருமையாக மிளிர்ந்தார்.

உணர்ச்சிபூர்வமாக இதயசுத்தியுடன் தனது குருக்களிற்கு நன்றி கூறிய சிவசக்தி, இறுதியில் கடினமான சொற்கோர்வைகள் அடங்கிய, வாழும் சங்கீத பிதாமகன் என்று கூறக்கூடிய எம்.பாலமுரளி கிருஷ்ணாவிடம் கற்ற அவரின் சொந்த உருப்படியான "ப்ருந்தாவனி" இல் அமைந்த தில்லானாவுடன் கச்சேரியை முடிவிற்குக் கொண்டுவந்தார்.

ஒரு முழுமையான இசைமழையில் நனைந்த அனுபவம் கச்சேரிக்கு வந்த ஒவ்வொரு இசைப்பிரியர்களும் உணர்ந்தார்கள், இரசித்தார்கள் என்றால் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

பதஞ்சலி நரேந்திரன்

# கலைஞரே காத்திருக்கிறோம்.

**சேயோன்**
*(ஒரு பேப்பர்)*

கலைஞர் கருணாநிதி 5வது முறையாக தமிழ் நாட்டின் முதல்வர் ஆகியிருக்கிறார். நம் மகிழ்வைச் சொல்லவேண்டியது முதற் கடன். தமிழ் நாட்டுக்கு முதல்வராகத் தெரிவு செய்வதில் இரண்டு தெரிவுகளே தமிழ்நாட்டு மக்களிடம் இருந்தன. கலைஞர் கருணாநிதி, நடிகை ஜெயலலிதா. மூன்றாவது தெரிவாக வைகோ இருந்திருப்பாரேயானால், நாம் மகிழும் சந்தர்ப்பம் குறைந்திருக்கலாம். இப்பொழுதென்றால் தமிழ்நாட்டு மக்களுடன் சேர்ந்து நாம் உள்ளபடி மகிழ்கின்றோம்.

ஏன் என்று சொல்கின்றேன்.

நடிகை ஜெயலலிதா அடிப்படையில் தமிழின விரோதி. பிராமணியத் திமிர் கொண்ட ஒருவர். அரசியலில் அடிப்படைத் தகுதி என்று எதுவுமே இல்லாதவர். எம்.ஜி.ஆரின் 'சின்னவீடா' க இருந்தவர் என்கின்ற ஒரேயொரு வாய்க்காலே தமிழ்நாட்டு அரசியலுக்கு இவரைக் கொண்டு தள்ளிற்று. எம்.ஜி.ஆரும் கூட, தான் செய்த பாவத்திற்குப் பரிகாரமாகத்தான் (ஜெயலலிதாவின் வற்புறுத்தலுக்கிணங்க) ஜெயலலிதாவை அரசியலுக்குள் கொண்டு வந்தார். ஆனால் எம்.ஜீ.ஆர் முதலமைச்சராக இருந்து நோய்வாய்ப்பட்டு இயலாத காலத்தில் இந்த ஜெயலலிதா அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி முன்னிலையில் எம்.ஜீ.ஆர் மீதான ஊழல் புகார்ப்பட்டியலை வாசித்தவர்.

'போ போ' என்று கைகளாலும், கண் சாடையாலும் ஜெயலலிதாவைப் புறம் தள்ளியதைத் தவிர எம்.ஜீ.ஆரால் வேறு ஏதும் செய்யமுடியவில்லை. 91இல் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட அனுதாப அலை ஜெயலிலதாவைத் தூக்கி வந்து முதல்வர் பதவியில் இருத்தியது. அது ஒன்று நிகழ்ந்திருக்காவிடின் தமிழ்நாட்டு மக்கள் பேயின் 10 வருட ஆட்சியிலிருந்து காப்பாற்றப் பட்டிருப்பர்.

எம்.ஜீ.ஆர் செய்த தவறுகளுக்குள் மகா தவறு என்று ஜெயலலிதாவை அரசியலுக்குள் கொண்டு வந்ததையே கூறலாம். எம்.ஜீ.ஆர் பல தவறுகள் இழைத்திருக்கிறார். அவை எல்லாம் இங்கு தேவை இல்லை. ஒரே ஒரு நல்லது செய்திருக்கின்றார் அது நமது தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்தியது.

இவைபற்றியெல்லாம் பிறகு ஒரு சமயம் பேசலாம். கலைஞர் முதல்வரானமை தொடர் பாக, மேலும் சில சொல்ல விரும்புகிறேன்.

அடிப்படையில் கலைஞர் தமிழின உணர்வாளர். அதற்கு ஆதாரங்கள் உண்டு. ஆரம்ப காலங்களில் திராவிட இயக்கச் செயற்பாடுகளில் தீவிர ஈடுபாடு காட்டினார். டால்மியாபுரத்தை கல்லக்குடி என்று தமிழ்ப் பெயராக மாற்றவேண்டி தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்த போராட்டத்தை சிலர் நாடகம் என்று சொல்வார்கள். அப்படியாக நினைக்க முடியவில்லை. அப்பொழுது நிகழ்ந்த பல இந்தி எதிர்ப்புப் போராட்டங் களில் தளபதியாக நின்று கலைஞர் செயற்பட்டிருந்தார். உண்மைகள் பலவற்றை எழுத்தின் வாயிலாகவோ, உரையின் வாயிலாகவோ அறிவது கடினமல்ல. கலைஞர் எழுதிய சுயசரிதை என்று கருதத்தக்க 'நெஞ்சுக்கு நீதி' நூலைப் படிப்போர் பல உண்மைகளை உணர்வர். ஆயினும் பல 'உண்மைகள்' அந்நூலில் மறைக்கப்பட்டுமி ருக்கிறது.

> **கலைஞருக்காக வழக்கில் வாதிட்ட இருவர் யார் என்று தெரியுமா? அந்த இருவரும் ஈழத்துத் தமிழர். தந்தையும் மைந்தனுமாவர்.**

ஈழத்தில் தமிழினம் அடைந்த இன்னல் கண்டு முதன் முதல் கொதித்தவர் குரல் கொடுத்தவர் என்று சொல்ல நமக்கு கலைஞர்தான் இருக்கிறார். சில பல காலங்களில் அவர் இரட்டை வேடம் போட்டிருக்கக்கூடும். அவ்வாறு போடவேண்டி வந்த தேவைகள் பல எம்மால் உணரப்பட முடியாதவை. நாமும் என்ன தவறு செய்தோமோ தெரியாது.

1975 அல்லது 1976 என்று நினைக்கின்றேன். கலைஞர் மீது இந்திராகாந்தி அரசாங்கம் கோதுமைப் பேர ஊழல் என்று ஒரு வழக்கைப் போட்டிருந்தது. கலைஞருக்காக இந்த வழக்கில் வாதிட்ட இருவர் யார் என்று தெரியுமா? அந்த இருவரும் ஈழத்துத் தமிழர். தந்தையும் மைந்தனுமாவர். 'தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா' என்று சொன்ன தமிழர் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களும் அவர் மைந்தன் மாமனிதர் குமார் பொன்னம்பலமும் ஆவார். இடைச் செருகலாக இதை ஏன் சொன்னேனென்றால், கலைஞர் மீது ஈழத் தமிழர் கொண்ட அபிமானமும், ஈழத்தமிழர் மீது கலைஞர் கொண்ட அபிமானமும் பற்றி கூறவே யாகும்.

1987 யூலை 27 இலே அமைதி காக்க என்ற பெயரில் இந்தியப்படை ஈழத்திற்குள் நுழைகிறது. இனிமேல் இல்லை என்ற அளவு அட்டூழியம் அது செய்கிறது. பல்லாயிரக்கணக்கில் ஈழத்தமிழர் கொல்லப் பட்டனர். ஆயிரக்கணக்கில் அங்கவீனர் ஆகினர். நோய்வாய்ப்பட்டனர். சித்திர வதைக்கு ஆளாகினர். போக, பல நூற்றுக் கணக்கில் நமது ஈழத்தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். நமது படை கொடுத்த அடியில் இலட்சத்தைத் தொட்ட கணக்கில் சுருண்டும் வீழ்ந்தனர். எப்படியோ 1990 மார்ச் 25 அன்றுடன் ஈழத்தை விட்டுப்போய் ஒழிந்தனர்.

அப்போது தமிழ் நாட்டில் கலைஞர் முதல்வர். கலைஞரின் நல்லாதரவுடன் வி.பி?. சிங் இந்தியாவின் பிரதமர். கலைஞரின் நெருக்குவாரத்தில் தான் வி.பி.சிங் அரசு இந்தியப்படையை திரும்ப அழைத்தது என்றும் ஒரு கதை. அதன் உண்மை பொய் தெரியாது. ஆனால் வேறொன்றின் உண்மை தெரியும். திரும்பி வருகிற இந்தியப் படையை வரவேற்க முதல்வர் என்கின்ற காரணத்துக்காக கலைஞர் அவர்கள் செல்ல வேண்டும். மறுத்து விட்டார். சொன்ன காரணம் 'தமிழர்களைக் கொன்றுவிட்டு, தமிழினப் பெண்களைக் கற்பழித்து விட்டு வருகின்ற இராணுவத்தை தமிழனாகிய நான் எப்படி வரவேற்பேன்?'

இப்படிக் கலைஞர் சொன்னாரென்றால் இப்படிச் சொல்லும் துணிச்சல் வேறு எவருக்கு வரும்? எம்.ஜீ.ஆருக்குக் கூட வருமா? நான் நம்பவில்லை.

குடும்ப பாசத்தை கலைஞர் அரசியலாக்கு கிறார் என்பது முள்ளு உறுத்துவது போல் நெருடிக் கொண்டேயிருக்கிறது. நடிகர் அரசியலுக்குள் நுழையக் கூடாது என்ற வாதம் எவ்வளவு பலவீனமானதோ அவ்வளவு பலவீனமானது வாரிசு அரசியல் கூடாது என்பது. கலைஞரின் வாரிசாக ஸ்ராலின் இருப்பதால் அரசியலில் நுழையக் கூடாது என்னும் வாதம் ஏற்புடையதல்ல. 35 வருட காலமாக ஸ்ராலின் அரசியலில் இருக்கிறார். இந்திராகாந்தி அரசின் அவசரகால நிலைப் பிரகடனத்தில் 'மிசா'வின் பெயரில் ஸ்ராலின் சிறையில் வசித்திருக்கிறார். எம்.ஜீ.ஆரால் ஜெயலலிதா அரசியலுக்குள் கொண்டு வரப்பட்டே இப்போது வருடம் 22தான். அதற்குள் 10 வருட காலம் 'அவாள்' முதலமைச்சர். ஸ்ராலின் அரசியலுக்கு வருவதில் ஒன்றும் தவறில்லை.

தவறு எங்கேயென்றால், அரசியலில் மேல்நிலைக்கு ஸ்ராலின் வருவதில் கலைஞர் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து விடுகிறார். தனக்குப் பின் தி.மு.க. வின் தலைமையையும், அதனூடாக முதலமைச்சர் பதவியையும் ஸ்ராலின் பெறுவதற்கான அத்தனை தடைகளையும், ஈவிரக்கமின்றி, ஜனநாயக மரபுகளை மீறி அகற்றி விடுகிறார். அத்தகைய ஒரு காரணத்துக்காக வைகோவை அகற்றியபோது தான் அதற்குக் கலைஞர் சொன்ன காரணத்துக்காகத்தான் ஈழத்தமிழர் நாம் மிக நொந்தோம்.

போகட்டும். இப்பொழுது கலைஞர் முதல்வராகியிருக்கிறார். இந்தியப்படை ஈழத்தில் புகுந்த காலத்தில் கலைஞர் அவர்கள் ஈழத்து வேந்தன் பண்டார வன்னியன் பற்றி சரித்திரத் தொடர் கதை எழுதியிருந்தார். அதில் பூடகமாக ஈழத்தமிழரின் விடுதலை வேட்கையை, விறார்ந்த உணர்வை நமது தேசியத் தலைவரின் வீரத்தை, வைகோவை வன்னிக் காட்டுக்குள் தான் அனுப்பிய செய்தியை எல்லாம் எழுதியிருந்தார்.

கலைஞர் அவர்களே காலம் இன்னமும் மாற வில்லை. உங்கள் மீதான உணர்வும் எங்க ளிடமிருந்து ஒரு சொட்டும் குறையவில்லை. நேரடியாகவோ மறைமுகமாகவோ உங்கள் கைப்பற்றுதலுக்காகக் காத்திருக்கிறோம்.

## குருதியில் குளிப்பது எங்களின் விதியா? உலகமே! இதற்கும் மௌனம்தான் பதிலா?



இது
புத்தர்பெருமான் ஞானம் பெற்ற
சித்திரை நாளின் சிறப்புப் பரிசு.
பாவப்பட்ட ஈழத் தமிழருக்கு
பௌத்த தேசம் வழங்கிய விருது.
அன்று
விகாரைகள் தோறும் விளக்குகள் ஒளிர்ந்தன
எங்கள் ஊர்களில் உயிர்கள் அணைந்தன.
பாருங்கள்
எல்லோரும் உற்றுப் பாருங்கள்.
ஈரம் நொதிக்கும் இதயங்களே!
தீர்ப்பு வழங்க வரும் தேசங்களே!
எங்கள் வாழ்வின் அவலத்தை வரைந்து கொள்ளுங்கள்.
ஏதும் அறியாமல்,
ஏன் சாகிறோமென்றும் தெரியாமல்
குருதியில் குளித்துக் கிடக்கிறது ஒரு குடும்ப விருட்சம்.
பிஞ்சை அணைத்தபடி பூவும்,
பூவைப் பிணைந்தபடி காயும்
தமிழருக்குக் காவலென்பதால் நாயும்
எரியுண்டு போவதுதான் எமக்கெழுதிய விதியா?
உலகமே!
இதற்கும் உன் மௌனம்தான் பதிலா?
மரங்களைத் தறியாதீர் என்பவர்களே!
இங்கு மனிதர்களைச் சரிக்கிறார்களே.
மிருகங்களை வதையாதீர் என்பவர்களே!
இங்கு பிள்ளைகளைக் கொல்கிறார்களே.
ஏன் கேள்வி எழுப்பவில்லை?
எமக்கான ஆறதலை ஏன் தரவில்லை?
ஈழத்தமிழர் சாகப் பிறந்தவர்களா?
நாயைப் போல வாழப் பிறந்தவர்களா?
அல்லைப்பிட்டி அழுகைக்கானதல்ல
அடக்குமுறை அதிகாரத்திற்கான முடிவுக்கானது.
இரத்தமும் இரத்தமும் பேசும் மொழியில்
புத்தபெருமான் போதிக்கவில்லை
ஆயினும் பேரினவாதம் அதைத்தானே போஷிக்கிறது.
பொறுமையின் அளவுமட்டம் பெரியதானதல்ல
சின்ன உணர்வுத் திரியில் மூளக்கூடியது.
எம்மை மூட்டாதீர்
மூளாசியெரிய வைக்காதீர்.
இது ஆற்றாது அழுபவரின் கண்ணீர்
அடக்கு முறைக்குள்ளே கிடப்பவரின் மௌனக்குரல்.
உலகமே!
எமக்குப் பதில் வேண்டும்
இப்போது வாருங்கள்
இல்லையெனில் எப்போதும் வரவேண்டாம்
எதற்காகவும் வரவேண்டாம்.
முடியுமெனில்
உங்கள் விழியில் எங்களை எடுங்கள்
இல்லையெனில்
எங்கள் வழியில் எங்களை விடுங்கள்
பாருங்கள்
உற்றுப் பாருங்கள்
அந்தச் சின்னப் பிள்ளையின் சிரசிலிருந்து
பென்னம்பெரிய நெருப்பு மூள்கிறது.
தெரிகிறதா?
இது தணியாது
இனிப் பணியாது

*- புதுவை இரத்தினதுரை*

Dr. சுவாமி ஸ்ரீனிவாச ராமானுஜர்
- பாரம்பரிய ஜோதிடர் லண்டன் வந்துள்ளார்
ஜோதிடம், கைரேகை, ஜாதகம்
வாஸ்து சாஸ்திரம்
அங்குஷ்டா சாஸ்திரம்
பேஷ்ரீடிங்
சாமுத்திரிஹா லட்சணம்,
அங்க அவய சாஸ்திரம்
வைகளின் வாயிலாக
கடந்தகாலம், நிகழ்காலம்,
வருங்காலம் முக்கால
பலன்களை மிக தெளிவாக
அறிய நேரில் வருக.
வேத சாஸ்திரிகள் ஜோதிட பிதாமஹர்

ஓம் நமோ நாராயணா
ஒன்றே குலம் ஒருவரே கடவுள்

Dr. சுவாமி ஸ்ரீனிவாச ராமானுஜர் MA-PHD

முப்பது வருட கால அனுபவம். நவக்கிரகங்களின் ஈர்ப்பும், நவப்பிரம்ஹம் பற்றியும் வாஸ்து சாஸ்திரத்தை பற்றியும் ஆய்வு செய்து ஜோதிடத்திற்கும் சதுர் வேதத்திற்கும் உள்ள சம்பந்தம் பற்றியும் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றவர். மாபெரும் ஜோதிட பிதாமஹர் விருதினை பெற்றவர். தாங்கள் குடும்ப சகிதமாக வந்து ஜோதிட பலாபலன்களை தெரிந்துகொண்டு சுவாமிஜியிடம் ஆசி பெற்றும் ஸ்ரீமன் நாராயணனின் தெய்வானுக்கிரணம் பெறவும் அழைக்கிறோம். வருக வருக.

முக்கிய குறிப்பு:- ஜாதகம், பிறந்த திகதி ,ல்லாதவர்களுக்கு முக அமைப்பு, பேஷ் ரீடிங், கைரேகை வாயிலாக பலாபலன்களை தெரிந்து கொள்ளலாம்.
கீழக்கண்ட நம்பரில் தொடர்புகொண்டு விலாசம் கேட்டு நேரில் வருக.



**Mob: 07930 574 525 / 07932 913 220**

# ஹியூமன் றைற்ஸ்... ஹியூமன் றைற்ஸ்... யார் சொல்வது றைற்?

**இளந்திரையன்**
*(ஒரு பேப்பருக்காக)*

ஹியூமன் றைற்ஸ் வோச் அமைப்பு இருக்கின்றது. சில நாட்களின் முன்பு விடுதலைப் புலிகளைப் பற்றி சில பல புரளிகளைக் கிளப்பியிருந்தது. யார் இதன் மூல கர்த்தாக்கள் என்பது மூடு மந்திரமாக இருந்தது. அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவில் சோவியத் யூனியனுக்கெதிரான பனிப்போரில் அவதூறுகளைக் கிளப்புவதற்காக முதன் முதலில் ஆரம்பித்து பின்னர் முந்நாள் கம்யூனிச நாடுகளின் அரசுகளை ஆட்டங்காண வைத்து ஸ்வாகா செய்வதற்கு பேருதவி செய்த ஒரு தனியார் அமைப்பு இன்று பரிமாண மாற்றங்களைக் கண்டு ஹியூமன் றைற்ஸ் வோச் என்ற அமைப்பாக புரளிகளைக் கிளப்பிக் கொண்டிருக்கின்றது. ஐ.நா போன்ற பொது ஸ்தாபனங்களின் எந்த தொடர்பும் இல்லாது தனியார் ஸ்தாபனமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இது கிளப்பும் புரளிக்கெல்லாம் ஆதாரம் இருக்கின்றதோ இல்லையோ அந்த ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம். ஆனாலும் இதன் தொடர் அறிக்கைகளில் பல சுவாரஸ்யமான சங்கதிகளும் வெளி வந்திருக்கின்றது. அப்படியொரு சுவையான சங்கதி அமெரிக்கா பற்றியது.

அமெரிக்க அதிபர் புஷ்ஷுடன் என்ன கோபமோ என்னவோ அவரையும் அவர் சகா சென்னியையும் வாங்கு வாங்கென்று வாங்கியிருக்கின்றது. அதே நேரம் ஏப்பிரல் 20 இல் சீனத் தலைவர் ஹூ ஜின்ராஓ அமெரிக்காவிற்கு விஜயம் செய்த வேளையில் சீனாவில் நடக்கும் மனித உரிமை மீறலைக் கண்டிக்கும் படியும் புஷ்ஷுக்கு கடிதம் அனுப்பியது. இது எப்படியிருக்கின்றது என்றால் ஒரு துட்டனிடம் இன்னுமொரு துட்டனைப் பற்றி முறைப்பாடு செய்வதைப் போல.

இங்கு கவனிப்புக்குரியதும் நகைப்புக்குரியதும் என்னவென்றால் நீதி நியாயம் ஜனநாயகம் பற்றிக் கதைக்கும் ஒவ்வொரு நாடும் தங்களளவில் முதுகு கொள்ளா அழுக்குகளைச் சுமக்கின்றன என்பது தான். ஊருக்குத் தான் உபதேசம் உனக்கல்ல..... என்று தான் எல்லா நாடுகளும் நடந்து கொள்கின்றன. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் உத்தம வேடம் போடுகின்றன. சர்வதேச சமூகம் என்று அலங்காரக் கொண்டையுடன் திரியும் இவர்கள் கொண்டைக்குள் ஆயிரம் அழுக்கு.

எங்களைக் குற்றம் சொல்லப் புறப்பட்ட சீமான்களை மறித்து ஆயிரம் கேள்வி கேட்கலாம். அத்தனை பட்டியல் இங்கிருக்கின்றது. இந்த ஹியூமன் றைற்ஸ் வோச்சின் அறிக்கையை வைத்துத் தான் விடுதலைப் புலிகளை கனடா தடை செய்தது என்று ஆலாய்ப் பறந்த மனிதர்கள் சிலர் நியாயம் கற்பித்துத் திரிந்தார்கள்.

அப்படியென்றால் இதோ இந்தியா பற்றி அமெரிக்கா பற்றி ஆசிய ஆபிரிக்க இலத்தீன் அமெரிக்க நாடுகளைப் பற்றியெல்லாம் கிழி கிழியென்று கிழித்து அறிக்கை விட்டிருக்கின்றார்களே. இப்போ கனடா என்ன செய்யப் போகின்றது.

விடுதலைப் புலிகளைத் தடை செய்யச் சொல்லப்பட்ட காரணங்களை விட ஆயிரம் மடங்கு நீதிக்குப் புறம்பானதும் மனித உரிமைகளை துச்சம்மெனவும் மதித்து இந்நாடுகள் நடக்கின்றனவே.

இந்த அழகில் ஐ.நாடுகளின் மனித உரிமைக் கவுன்சிலின் ஆசியாவிற்கான 13 அங்கத்துவ நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இலங்கையும் தெரிவு செய்யப் பட்டிருக்கின்றனவே. இந்த இலட்சணத்தில் மனித உரிமைகள் எப்படி காப்பாற்றப்படப் போகின்றன. ஏன் யாரும் இது பற்றிக் கேள்வியெழுப்பவில்லை.

அமெரிக்கா பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற வண்வே ரபிக்கில் ஆயிரக்கணக்கான அப்பாவிகளை அள்ளிக் கொண்டு வந்து வழ்க்கு விசாரணை எதுவுமின்றி ஆண்டுக் கணக்கில் வைத்திருக்கின்றதே.

கனடா என்ன செய்யப் போகின்றது? அமெரிக்கா அண்ணனென்றால் பிரித்தானியா தம்பி.

அமெரிக்காவையும் இந்தியாவையும் ஜப்பானையும் தடை செய்து இராஜதந்திர உறவுகளைத் துண்டிக்கப் போகின்றதா?

இதோ அபூ ஹாரிப் (Abu Gharaib) சிறையில் நிர்வாணமாக கைதிகளை வைத்து சித்திரவதை செய்தார்களே. உலகமே அதிர்ந்து போனதே. இன்றுவரை அதிலீடுபட்டவர்கள் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று இது அறிக்கையில் சொல்லியிருக்கின்றதே. ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் கியூபாவின் குவான்ரனாமோ பே சிறையில் எந்த விசாரணையுமின்றி சித்திரவதையில் உயிரை விட்டுக்கொண்டிருக்கின்றார்களே. அவர்களை நீதியின் முன்பாக நிறுத்துமாறு அறிக்கை மேல் அறிக்கை விடுகின்றதே. இந்த ஹியூமன் றைற்ஸ் வோச். இது மனித உரிமை மீறலாக ஸ்ரீபன் கார்ப்பரின் கொன்ஸ்ரவேற்றிவ் அரசாங்கத்திற்குத் தெரியவில்லையா?

ஈராக்கில் சர்வாதிகாரி சதாம் குஸேனின் சிறையில் இருந்தவர்களை விட அதிகம் பேர் சிறையில் இருக்கின்றார்கள் ஜனநாயகம் போதிக்கும் அமெரிக்கர் ஆட்சியில். எங்கே தப்பு நடந்தது.

அமெரிக்காவான அமெரிக்கா. ஆனானப்பட்ட அமெரிக்கா. ஐ.நாடுகள் சபையை உள்ளங்கைக்குள் வைத்திருக்கும் அமெரிக்கா இவற்றுக்கெல்லாம் என்ன பதில் சொல்லப் போகின்றது?

இந்தியா காஸ்மீரில் இராணுவத்தைப் போட்டு அப்பாவி காஸ்மீரிகளைக் கொன்று குவித்துப்போடுவதை குஜராத்தில் அரசே வலிந்து மதக் கலவரங்களைத் தூண்டி முஸ்லீம் மக்களைத் துடிக்கத் துடிக்க நெருப்பில் போட்டுக் கொல்வதை கண்டித்து அறிக்கை விட்டுள்ளதே. இது வெல்லாம் மனித உரிமை மீறல்கள் இல்லையா?

இரண்டாம் மகாயுத்த காலத்தில் சீனா, கொரியா, வியற்நாம், பிலிப்பைன்ஸ் என்று எல்லா தூரகிழக்கு நாட்டு மக்களையும் கொன்று குவித்துப் பெண்களை தன் இராணுவத்தின் பசிக்குக் கூட்டிக் கொடுத்தும் இன்னும் பாவச் சுமையை முதுகில் சுமந்து கொண்டிருக்கும் ஜப்பானும் புத்தரின் போதனைகள் போல ஏதேதோ பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

அப்பளம் போல பொரிந்து பொடிபட்டுப் போய் அணுகுண்டின் வீரியத்தையும் வேதனையையும் அனுபவித்தவர்கள் அதே அமெரிக்காவின் தாளத்திற்கு ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அமெரிக்காவின் ஆசைக்கு அகாஸி அண்ணாச்சியும் அவுட் ஆப் போகஸில் அலட்டிக் கொண்டிருக்கின்றார்.

அகிம்சையையும் அடாவடியையும் உலகுக்கு ஒரு சேரப் போதித்த இந்தியா. காஸ்மீரயும் பஞ்சாப்பையும் காலடியில் போட்டு நசுக்கிய இந்தியா ஈழத்தமிழனுக்கு மட்டும் அகிம்ஸையைப் பேதி மருந்து போலப் பருக்குகின்றார்கள்.

எங்கே ஹியூமன் றைற்ஸ் .... எங்கே ஹியூமன் றைற்ஸ் என்று தேடத்தான் வேண்டும்.

இதில் யார் சொல்வது? யார் செய்வது? ஹியூமன் றைற்ஸ்.



மட்டைக் கிளப்பானின்....

# அலசுவாரம் -10

நாடு போற போக்கப் பாத்தாப் பெரும் கவலையா இரிக்குது பாருங்கோ ஈழத் தமிழனுக்கு எப்பதான் விமோசனம் வருமோ தெரியாது. சிங்கள அரசாங்கத்தோட அவன் நமக்கு ஒண்டையும் தூக்கித் தரமாட்டான் எண்டு தெரிஞ்சும் பேச்சு வார்த்தைக்குப் போனம். போராடிப் போராடி இழப்புகளோட அரச கட்டுமானப் பணிகளச் செய்யிறதக் காட்டியும் போராடாமக் கட்டுமானத்தச் செய்யக்குள்ள அதிகம் பலனிரிக்குமெண்டதாலதானே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில கையெழுத்து வச்சநாங்க. சிங்கள அரசாங்கத்துக்கு இவனுகள் பச்சத் தண்ணியில பலகாரம் சுடப் பாக்கானுகள் எண்டு விளங்கிப் போச்சுது போல. என்ன மாதிரியோ குழப்பிப் போட்டானுகள். சர்வதேசத்துக்கும் தேள்வையில்லாத கதையளச் சொல்லிச் சொல்லி நம்மளப் பயங்கரவாதியளா ஆக்குற திலதான் முக்கியமா நிக்கானுகள்.

ஒரு காலத்தில! ஹும்!. நினைச்சா இப்பயும் கவல வருகுது. 'இந்தச் சர்வசன வாக்கெடுப்பு வாறத்துக்கு முந்தி, சோல்பரிப் பிரபு வந்து படிச்சாக்கள் தகுதியான ஆக்களுக்குத்தான் வாக்குரிமை, தமிழரில தகுதியான ஆக்கள் கனபேர் இரிக்கிறதால சிறுபான்மை இன மக்களுக்கு நாற்பது வீதமும், எண்பது வீதப் பொரும்பான்மை கொண்ட சிங்கள ஆக்களுக்கு அறுபது வீதமும் வாக்குரிமையக் குடுத்து ஒருவரை ஒருவர் அடக்கி ஆளாம இனங்களெல்லாம் ஒற்றுமையா வாழட்டுமெண்ட எண்ணத்தில காரியங்களச் செய்யப் போன நேரத்தில, எங்களுக்கு ஐம்பது வீதம் தந்தாத்தான் நாங்க இதுக்கு ஒத்து வருவமெண்டு சண்டை புடிச்சிக் கடைசியா இருந்த மயிரும் இழந்தாய் போற்றி எண்ட நிலையில சர்வசன வாக்கெடுப்புக்குள்ள போய் மாட்டுப்பட்டு இப்ப பெரும்பான்மைச் சிங்கள அரசாங்கத்திர கையில கிடந்து கஸ்ரபடவேண்டி இரிக்கிதெண்டு', அந்த நாளையில என்ர தகப்பனார் சொல்லுவார். இனி என்ன செய்யிற? போன புத்தி ஆனைகட்டா எண்டு சொல்லுவாங்க.

**கிழக்கு மாகாணத்தில தரப்படுத்தல் வர முந்தியே சிங்களக் குடியேற்றம் எண்ட பூதம் வந்திற்றுது.**

அப்பிடி அறுபதுக்கு நாப்பது எண்ட பிரதிநிதித்துவம் குடுபட்டிருந்தா மூண்டில் ரெண்டு பெரும்பான்மையால அரசியல் அமைப்பையும் மாத்தி இரிக்க ஏலாது. நாம இப்படிக் கஸ்ரப்படவும் வந்திராது. நம்மட தலைவிதி இப்படி அருமந்த சீவனுகளக் காவு குடுத்துத்தான் தமிழ்த் தேசியத்தைக் கட்டி எழுப்ப வேணுமெண்டு எழுதியிரிக்குதாக்கும். இனிக் கிடைச்சத உடுவாங்களா சிங்கள ஆக்கள்? இந்தத் தேசம் தங்கட சொந்தமெண்டு நிக்காங்க. தங்கட சமூகத்தில அப்பே ஆண்டுவக் கொள்கைய நல்லா ஊதி ஊதி வளர்த்து வச்சிரிக்காங்க. மயிலே மயிலே இறகு போடெண்டாப் போடுமா? புடிச்சிப் புடுங்கித்தான் எடுக்கோணும். ஆனா நம்மில கனபேருக்கு ஒரு நப்பாசை. சிங்கள ஆக்கள் பேச்சு வார்த்தையில எதையாவது தூக்கித் தருவாங்க எண்டு.

ஒற்றுமைப்பட்ட இந்தியாவிலயே பக்கத்து மானிலம் தமிழனுக்குத் தண்ணி கூடத் தரமாட்டமெண்ணக்குள்ள இலங்கையில அரசியல் அதிகாரத்தையா பேச்சு வார்த்தையில தரப்போறானுகள். எல்லாம் சும்மா வெறும் புருடா பாருங்கோ. எப்பிடியோ கஸ்ரப்பட்டு ஊடுருவி இடவெடுத்திற்றானுகள். எடுத்திரிக்கிற ஓட்டையப் பெரிசாக்குவம் எண்டுதான் பார்ப்பானுகள். மற்றப்படி ஒண்டும் நடக்கப் போறல்ல. நம்மட புள்ளையளுக்கு இது நல்லாத் தெரியும். இந்த அப்பாவிச் சனங்களுக்குத்தான் சரியா ஒண்டும் விளங்குதில்ல. இலவு காத்த கிளியள் மாதிரி, அன்னா வருகுது சமாதானம், இன்னா வருகுது சமாதானம், அன்னா சமாதானப் பணியாரம்பிக்கப் போறானுகள், இன்னா அபிவிருத்திப் பணியாரம் விக்கப் போறானுகள் எண்ட எண்ணத்தில கொழும்புக்கு ஓடுறதும் பிளாட் வாங்குறதும் வீடுகட்டிறதும் எண்டு திரியிதுகள். ஏதோ கடவுள் நல்லதக் கொண்டு வந்து சேர்க்கோணும். நல்லது நடந்தா எல்லாருக்கும் தானே. நானும் விரக்தியில எதை எதையோ எல்லாம் பிசத்திப் போட்டன்.

போன முறை கிழக்கு மாகாணத் தமிழர்ர அரசியல் ஈடுபா? தொடர்பாச் சில உதாரணங்களோட குறிப்பா தமிழ்த் தேசியத்தில அவர்களுடைய பங்களிப்பைக் கோடிட்டுக்காட்டின நான் பாருங்கோ. அரசியல் எண்டிறது சும்மா தேர்தலில நிக்கிறதும், வோட்டுப் போடுறதும், கொடி புடிக்கிறதும், கோசம் போடுறதும் எண்ட நிலையில இருந்து உருமாறிப் போர்முனைப்போட அன்னிய ஆட்சிக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து கருவி கொண்டு போராடுற நிலைக்கு இண்டைக்கு வந்திரிக்கிறதுக்கு சிங்கள அரசாங்கங்கள் செய்த தவறுகள்தான் காரணம். அதில ஒரு தவறு அதாவது வடபகுதி இளைஞர்களை விழத்தெழச் செய்த காரணி தரப்படுத்தலெண்டத நான் போன முறை குறிப்பிட்ட நான். ஆனாக் குறிக்கோளற்ற கல்வியமைப்பைக் கொண்டிருந்த கிழக்கு மாகாணத்தில தரப்படுத்தல் வர முந்தியே சிங்களக் குடியேற்றம் எண்ட பூதம் வந்திற்றுது.

அல்லை, கந்தளாய், சேருவில, அம்பாறை எண்டு கிழக்கு மாகாண எல்லைப் பிரசேங்களேல்லாம் பறி போகப் பறிபோகத்தான் கிராமத்து இளைஞர்களுக்குத் தங்கட பூமியக் காப்பாத்த வேணுமெண்ட எண்ணம் புடிச்சது.

மட்டக்களப்புட படுவான் கரைப்பிரதேசத்தை எடுத்த மெண்டா அதிர தெற்குப் பகுதியில குறிப்பா மண்டுர் பழுகாமப் பிரதேசங்களில வாழ்ந்த மக்களுடைய மேய்ச்சல் நிலமாயிருந்தது தற்போதைய அம்பாரைப் பிரதேசம்தான் பாருங்கோ. அத அந்த நாளையில ஆத்துவா வட்டை எண்டுதான் சொல்லியிரிக்காங்க. தங்கட மாடுகளை அங்க கொண்டு போய்க் கட்டி அதில வந்த வருமானத்தில சீவனம் பண்ணிக் கொண்டிருந்த மக்களுடைய வயித்தில விழுந்த அடியாகத்தான் கல்லோயாக் குடியேற்றத்தை நாங்க எடுக்க வேண்டியிரிக்குது. கல்லோயா எண்ட குளம் கட்டப்பட்டதால அம்பாரைப் பிரதேசம் நீர்வளம் பெற்று இண்டைக்கு இலங்கையிர தானியக் களஞ்சியமாக மாறி இருந்தாலும்.. குளத்திர இடது கை வாய்க்கால் பிரதேசம் முழுவதையும் விவசாய நிலங்களாக மாற்றிச் சிங்களக் குடியேற்றத்தையும் செய்ததால தமிழர்ர காலநடைச் செல்வம் மேயச்சல் நிலமில்லாமல் முழுதாக அழிந்து போனதொடு மண்ணையும் இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுப் போயிற்றுது.

இடது கை வாய்க்காலில கிட்டத்தட்ட 50 குடியேற்றக் கிராமங்கள் அதாவது கொலனிகள் உண்டாக்கப்பட்டு காலி மாத்தறை, கண்டிப் பிரதேசங்களிலிருந்தெல்லாம் சிங்கள மக்களைக் கொண்டுவந்து குடியேற்றின அரசாங்கம் ஆண்டாண்டு காலமாக தங்கட மண் என்று ஆதிக்கம் செலுத்தி அருகில வாழ்ந்த தமிழ் மக்களைப் புறக்கணிச்சுப் போட்டுது. தமிழர்களுக்குக் கொடுக்கப்பட்ட குடியேற்றக் கிராமங்கள் ஐந்திற்கும் குறைவாகத்தான் இருந்தது. அந்தக் கிராமங்களும் வாய்க்காலின் வாற்பகுதியிலதான் கொடுக்கப்பட்டன. அதனால சிங்கள மக்கள் தங்கள் தேவைக்கும் அதிகமாகப் பாவித்துக்கழிச்ச மிகச் சொற்ப நீரைத்தான் தமிழர்கள் தங்கள் நீர்ப்பாசனத் தேவைக்காகப் பாவிக்க வேண்டி ஏற்பட்டது. இந்த அனியாயத்தால தானோ என்னவோ கல்லோயாக் குடியேற்றத்திட்டம் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. இப்படித்தான் பொருளாதார நிபுணர்கள் பலர் அந்தத் திட்டத்தை விமர்சித்திரிக்காங்க.

*- தொடரும்.*

# இல்லந்தோறும் இனிய வாழ்வு

## பயம் ஒரு நோயா?

**Dr. பாலேந்திரன்**

*(ஒரு பேப்பருக்காக)*

நாமனைவரும் பய உணர்வினை அனுபவித்துள்ளோம். யாரும் இந்த உணர்வினை விரும்புவதில்லை. இவ்வுணர்வின் தாக்கம், பரிமாணம், விளைவு, நோக்கம் ஆகியவற்றினைப் பொறுத்து பின்வரும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படும். அவையாவன அச்சம், திகில், மருட்சி, வெருட்சி போன்றனவாகும். இவை அனைத்தும் பயஉணர்வின் வெவ்வேறு பரிமாணங்களே.

பயஉணர்வின் அடிப்படை உளவியல் விளக்கமானது Fear of the unknown ஒருவருக்கு பரீட்சயமில்லாத இடம், பொருள், மக்கள் அனைத்தையும் கண்டு அல்லது நினைத்து பயப்படலாகும். இது இயற்கையான ஒரு உணர்வு. இவ்வுணர்வுதான் ஒருவகையில் எங்களை பாதுகாப்பாக வாழவைக்கின்றது. சட்டத்தைப் பற்றிய பயம் அதை மதித்து வாழ உதவுகின்றது. சமுதாயத்தைப் பற்றிய பயம் எங்கள் மரபு கலாச்சாரம் ஆகியவற்றை மதித்து வாழ உதவுகின்றது.

அனேகமான பயஉணர்வுகள் அன்றாட வாழ்க்கையுடன் இணைந்தவை. இவை தவிர இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் பயம், ஒரு விபத்தில் ஏற்படும் பயம் என்பன சூழ்நிலை சுமூகமாக மாறிய பின்னர் பூரணமாக கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். ஆனால் பிறரால் ஏற்படுத்தப்படும் தொடர்ச்சியான பயஉணர்வு, நாட்பட்ட நோய் பற்றிய பயஉணர்வு போன்றன மனிதரிலும் விலங்குகளிலும் ஆழமான உளரீதியான அல்லது உடல்ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தும்.

பயஉணர்வு திடீரென ஏற்படும்போது உடலில் தொழிலியல் மாற்றங்களை ஏற்படுத்தும். அவையாவன இருதயம் வேகமாக தொழிற்படல், சுவாசம் வேகம் அதிகரித்தல், வியர்த்தல், குருதியில் சில கார்மோன்கள் சுரந்து உடல் துரிதமாக செயற்பட உதவுதல், கண்மணிகள் விரிவடைந்து பார்வை துல்லியமடைதல் போன்றன சிலவாகும்.

பயஉணர்வின் தாக்கம் அதிகரிக்கும்போது எதிர்மாறான விளைவுகள் ஏற்படும். அவையாவன கைகால் துரிதமாக செயற்பட முடியாது தடுமாறுதல், கண்பார்வை மங்குதல், மூளை செயற்பாட்டினை ஒருங்கிணைக்க முடியாது போதலாகும்.

சாதாரண வாழ்க்கையில் மோசமான பெற்றோரின் பிள்ளைகள் தொடர்ச்சியாக பயஉணர்வில் வாழ்வர், மோசமான கணவனின் மனைவி பயஉணர்வில் வாழ்வார், கொடுமையான ஆட்சியில் வாழும் மக்கள் தொடர்ச்சியான பய உணர்வுடன் வாழ்வர்.

எப்பொழுது பய உணர்வு ஒருவருடைய உளரீதியாகப் பாதித்து அதன் தொடர்ச்சியாக பய உணர்வின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு ஒருவர் நிரந்தரமாக அல்லது அதிக மாதங்கள் வாழ்கிறாரோ அப்போது பயஉணர்வு ஒரு நோயாகின்றது. இதன் விளைவுகள் பலவாகும். பாதிக்கப்பட்டவர் அதற்கு காரணமான சூழல், மனிதர், பொருட்கள் அல்லது சம்பவங்களை மறக்க முயற்சிப்பார். ஆனால் எதை மறக்க முயற்சிக்கிறார்களோ அதன் நினைவு அதிகரிக்கும். இதனால் பாதிக்கப்பட்டவர் தன்னம்பிக்கை, தைரியம் ஆகியவற்றை இழக்க ஆரம்பிப்பார். நாளாந்த காரியங்களை நிறைவேற்றும் திறன் படிப்படியாக அற்றுப்போகும். இதனால் இவரின் மனக்குழப்பம் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும். விளைவாக பல அனுமானங்கள் ஊகங்கள் பிறக்கும். இதனால் நண்பர்கள் உறவினர்கள் எடுக்கும் கவனம் பாதிக்கப்பட்டவரை மேலும் குழப்பத்துள்ளாக்கும். உடன் தகுந்த சிகிச்சை செய்யாது போனால் நிரந்தர மனநோய் ஏற்பட வாய்ப்புண்டு.


முடிவாக பயம் என்னும் நோய் மாற்றமுடியாத ஒன்று அல்ல. பாதிக்கப்பட்டவர்கள் யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு விரைவில் பொருத்தமான சிகிச்சையை நாடவேண்டும். அனுபவம் பெற்றவரிடம் கவுன்சிலிங் சிகிச்சை பெறுவது நல்ல முன்னேற்றத்தைத் தரும்.

உறவினர் நண்பர்களின் பொறுப்பான அணுகுமுறை மிக அவசியம். அவர்களின் அன்பும் ஆறுதலும் நல்ல விளைவுகளைத் தரும். மேலும் தொடர்ந்து கவுன்சிலிங் சிகிச்சை பெற்று நிலைமையை முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது மிக அவசியம்.

சிகிச்சை எடுக்கத்தவறும்போது மனநோய், உடல்நோய், ஆகிய இரண்டும் ஏற்படும். சிலர் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவது உண்டு. சிலர் மிக வெறுப்படைந்து மற்றவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்த முனைவதுமுண்டு.

S. Satha & Co Solicitors

We are always at your service



* Injunction
* Family Law
* Immigration
* Criminal Law
* Conveyancing
* Legal Aid Work

Community Legal Service

Criminal Defence Service

Principal Partner

S.Sathananthan

Tel: 020 8471 9484

Fax: 020 8471 9485

Property Department Fax: 020 8471 1887

376-378 High Street North,
Manor Park
London E12 6PH

Emergency No
07956 288 671
DX: 133012 Upton Park 2

## The Horse and the Two Men

One day there was a black horse called "Susanna", she was very kind and affectionate and was nice to you if you treated her with some respect. She had to go through a lot of trauma, her old owners Apollo a 15 year old boy in Italy died of poverty after 5 homeless begging years. Susanna missed Apollo because Apollo always respected her and Susanna was played many parts for him , Susanna was like a mother, father , sister and faithful transport to him. But now Susanna was spotted lying around in a stable and was picked by a 27 Italian called Fabio who was as poor as Apollo but did not have the same kind nature.

Fabio beat her when he was frustrated and there were spots and severe bruises everywhere. Fabio was never nice and always angry. One day he was so angry he decided to sell Susanna but the day before he had his last torture, he was hung and beat with a whip. Susanna groaned gloomily and begged sadly but unfortunately Fabio didn't understand Horse. She was sold to a rich 12year old called Antonio. He lived in a mansion and you might of that he was spoiled but he respected people more than wealth. Every day he would wake up and put special creams on his back to help ease the pain of his bruises, he even arrested Fabio to the RSPCA ( Royal Society of Protection of Cruelty to Animals.) Susanna treated Antonio as nice Antonio did to her and Susanna even rode him to the most beautiful sceneries especially the Anton S'izuanna mountain in Rome at evening sunset.

**Moral: Treat other as you wish to be treated.**

Don't expect animals to do everything they can't understand human language!

*- By Cheran Gobi ( Age 10)*

## Be as a Human

By: Kirusanth Murugaiah

*A wonderful morning,*
*I sat on the*
*bank of river Thames,*

*A golden fire ball*
*rise up from the east,*
*Its not fire*
*just born baby Sun,*
*when blooming flowers*
*are dancing and*
*running river make*
*band with shining,*
*moving air was*
*forward to east*
*with perfumes dust*
*for welcome to baby sun*
*then*
*it touch me smoothly*
*I was feeling,*
*Its not a river bank*
*Its a part of heaven*
*I feel my mum's heeling,*
*in that air breech*
*Its all pleasant*

*every day Sun born*
*every day Sun die*
*Its life less than*
*twelve hours*
*we live more than Sun*
*but*
*we could not*
*be as a baby Sun*
*So*
*not infortant*
*how long we live*
*think about*
*how is live*
*at least*
*be as a human.....*

## Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to our *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.


The winner will be published in the next issue.

Last week's winner: ***Janesh. S*** (8 Yrs.) from Harrow.

Last week's runners up -

***Srini T*** (Age 7) *from Ilford*
***Nivethan Rajasingham*** *from Redbridge*
***Varun Kularaj*** - (Age 8) *from Toronto*
***Atchutha K*** - (Age 9) *from Hamilton*
***Jana G*** - (Age 10) *from Toronto*


## Tamil Musical Instruments



NADHASWARAM The gottu or the nadaswaram is a south Indian wind instrument. It is very similar to the nadaswaram or the shehnai in its construction. It has a bell, usually of metal like the shehnai. It has four or five holes for the air to pass through when the user blows, which are not fingered but merely occluded with wax to bring the instrument to the shruti or pitch correct. This instrument does not have melody, but merely provides the drone for temple ensemble.


*- By Tharshia Ravindrakumaran (Age 10)*

## Spot the Difference



**Answers.**

1. Door handle, Right window, Left flower, Bee's Suitcase, Chimney, one Continuing bee missing, Door rug/mat, Big bee's stinger




*By: Thifyan Ravinehru. (Age 5)*

## Jokes

Q: Why do you always walk with the right foot first?
**A: Because when you put one foot forward the other is always left behind!**

Q: What word is always pronounced wrong?
**A: Wrong!**

Doctor, doctor, my daughter thinks she's an actress.
**Don't worry - it's just a stage she's going through**

Q: What is full of holes yet can still hold water?
**A: A sponge!**

Q: What happens after a dry spell?
**A: It rains!**

Q: Which is the fastest, cold or heat?
**A: Heat; you can catch a cold!**

Teacher: Mike, stop showing off. Do you think you are the teacher of this class?
**Mike: No, Miss.**
Teacher: Then stop acting the fool!

Q: What do sea monsters eat?
**A: Fish and ships!**

Q: How do electric eels taste?
**A: Shocking!**

*- By Chloe Cook (Age 10)*

## Tongue Twister

***Hi Kids,***

**SHE SELLS SEA SHELLS ON THE SEA SHORE ,**
**BUT THE SEA SHELLS THAT SHE SELLS,**
**ON THE SEA SHORE ARE NOT THE REAL ONES**
(FASTER!!!)
**(Even faster!!!)**

*- Tharshia R*

## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| R | U | N | G | R | E | E | N | B | R |
| E | Y | A | I | N | B | W | S | O | H |
| D | E | I | G | O | L | D | Q | Y | Z |
| A | L | I | B | I | U | L | M | A | D |
| P | L | E | O | E | E | N | I | L | M |
| A | O | P | O | D | E | L | J | E | U |
| A | W | P | I | N | K | R | S | M | R |
| D | V | F | T | N | G | E | Q | Y | Z |
| A | I | U | W | S | O | H | I | B | N |
| J | E | U | O | P | C | X | T | U | K |

**Hidden Words:**
**Subject:** Colours
RED, BLUE, GREEN, PINK, YELLOW, GOLD

***Submitted by:*** *Ahaghara.B from New Malden.*

# PEN PALS

**Yes kids.**

This is something new which is going to start. This is a new section for pen pals and this will be run by RISHIYAN RAVI. This section works like this. British and Canadian kids write little letters to each other. (E.g. British kids send to Canadian kids and Canadian kids send a little letter asking question about Britain and saying how it is there. Just make a friend from another country and it will be great. When you write a letter write to e-mail *kids@orupaper.com* or to the normal postal address.

This is the chance or the time to ask about each other's country and say about your country. Also there is something more you need to do when you send a little letter; you have to attach a picture of yourself about how you look now. Good-luck and keep this running well.

# LETTER

[ By Tharshia. R ]



Hello, I am Tharshia Ravindrakumaran!!!!

I have a family with mum, dad & two older brothers. I live in a house. I am aged 11. I was born on the 13th of May 1995. My two brothers are older than me. They are ever so lucky!!!! I wish I was older. My parents are from Srilanka. My mother came from Point Petro and my father came from Jaffna. My eldest brother is named Tharanian and he is 14 on the 21st of May. My other older brother Rishiyan, is now 12 and his birthday is on the 5th of January. They can really be so annoying at times, but coming to the loving part, they are so nice!!!! I really get mad at them when they annoy me. Well, I guess that's just life. I bet you have got annoyed with your mum, dad, sister, brother….etc!!!! Am I right?

So, lately I've been doing my SATs. SATs are taken in year's 2, 6 & 9. I took it on year 2 & on year 6. I took this year's SATs on year 6. My SATs only finished on Friday the 12th of May. It was great fun. I really kind of enjoyed it. Sitting on a comfy table surrounded with no others makes me feel so comfortable. I honestly loved it.

My eldest brother Tharanian had his SATs as well. Year 9 SATs. He told me he liked it too. I often get a lot of homework from school as well. I go to Houndsfield Primary school and my secondary school is Enfield Country. I'm really looking forward to moving into secondary school. The amount of strictness they have at that school makes me jump off a cliff!!!! They are so awfully strict. Fingers crossed your secondary schools aren't going to be as strict as mine!

So, I wish you all the best for the future. How many ever tests you have…make sure you do well in all of them….! Good luck!

All the best,


*Tharshia Ravindrakumaran(11)*

PS: now kids, you know a lot about me, but I don't really know much about you….so come on keep writing and them sending in…..send it to *kids@orupaper.com*!!!!

I love to see them coming in…the more you send the more we'll put it up for you in the next issue of Orupaper….. Good luck!!!

# Game & Film

## King Kong



It is a thrilling game to play a gorilla the jungle fantastic game. You had to get through many difficult levels through the jungle and try out your action skills.

Nothing can follow The Lord of the Rings trilogy. Peter Jackson will continue to make great movies, but for many of us, The Lord of The Rings will always be King.

This Christmas he will release his first film since the Rings conclusion – King Kong. Early clips and teaser trailers sent our anticipation meter through the roof. We could only dream about the intense battles that await Kong and his most lethal adversary, T-Rex. Or will his most lethal adversary turn out to be man?

With the whole world stoked the return of King Kong, we knew it wouldn't be long before a video game was announced. Then Ubisoft made it official – Peter Jackson's King Kong: The Official Game of The Movie was born.


Whereas most games cast you as a powerful hero, King Kong casts you as the quiet screenwriter Jack Driscoll. Jack doesn't say much, partially because he isn't given the chance since director Carl Denham won't shut up. Carl is the island-obsessed filmmaker who brings everyone there in the first place. No doubt you'll notice how much he looks like the actor who plays him in the film, Jack Black. Every time something happens he pulls out his camera and starts rolling. Life? Death? Who cares about those things when you could be filming a real-life phenomenon. At least that's how he looks at it.

Playing as a screenwriter and not a superhero means sacrificing many of the things we're used to having in a game. There's no jumping, running leaves you breathless (in sound effect only), and the magical crosshairs that appear in every FPS are nowhere to be found. This is a game of survival. Ammo is not unlimited, and you can forget what a health bar looks like because it's not a part of the experience either. The game defaults to a widescreen view designed for the 4/3 aspect ratio TVs, reinforcing the idea that you're interacting with a movie. (The picture may be changed to 16/9 got widescreen TVs or normal 4/3 for viewing on a standard TV without the black bars.)

# Book

## THE GATEKEEPERS

**Series by Anthony Horowitz (Horror/Fantasy)**




This gripping series from the author of the bestselling Alex Rider novels pits good against evil and past against present in a battle that will determine the course of future civilization. In book one, RAVEN'S GATE, a troubled young boy finds himself at the heart of a strange and sinister plot hatched by the bizarre inhabitants of a remote English village.

On June 1st, Teenreads.com will be posting a review of EVIL STAR, the second book in The Gatekeepers series, in addition to an excerpt, an interview with Anthony Horowitz, and a special contest from Scholastic where 15 lucky readers will win a free copy of the book. Stay tuned for more details!


# சிறு விளம்பரங்கள்

## Job vacancies

### Web developer

We are looking for an experience web developer. The successful candidate will work in building new web sites and maintaining existing web applications. Candidate must have proven experience and possess the desire to learn new web technologies.

*Skills required include:* **Linux, Apache, MySQL, PHP, (X)HTML/CSS,** and knowledge of web-based development best-practices.

*Other skills that would be helpful are:* **Photoshop (basic), Illustrator (basic), Flash, Flash Remoting, Actionscript, .NET, Windows 2003**

Please send your CV *info@orupaper.com.*

### Graphic designer / Layout artist

We are looking for a graphics/layout designer to work as part of a creative team. Candidate must have good working knowledge of **Photoshop, Indesign** and **Illustrator**. Knowledge and experince in web design is desirable.

Proficiency in Tamil language and Tamil typing are essential.

Apply with your CV.

**Creative director,** *cd@orupaper.com.*

### Sale Coordinator - For Estate Agency


If you are a female with a good knowledge of English, inter personal & communication skills, a well informed, and capable of handling, brokering & negotiations, then we are ready to offer you a job.

Experience in 'real estate' is an advantage, not a necessity.

Please send your CV to *info@orupaper.com*

## வீடு வாடகைக்கு

Thornton Heath (Croydon, Surrey) இல் 3 அறை வீடு வாடகைக்கு உண்டு. மாத வாடகை £950 (2 Receptions, Fitted Kitchen & Drive way தொடர்புகளுக்கு: 020 8684 1026 / 07960 761 606.




ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £20 மட்டுமே!

**SUBSCRIPTION FORM**

Name: ____________________

Address : ____________________

____________________

____________________

Postcode: ____________________

Telephone: ____________________

Email: ____________________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £20 க்கு "Jasmine Studio Ltd." ன் பெயரில் காசோலையினையும், Oru Paper, 45'B' Crusoe Road, Mitcham, Surrey CR4 3LJ, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# பரீட்சை தொடர்கிறது

**கே.எஸ். பாலச்சந்திரன்**
*( ஒரு பேப்பருக்காக )*

'உங்களுடைய Blood ஐ கொடுத்திட்டு போங்கோ.. Results வந்தாப் பிறகு கூப்பிடுகிறன்' என்று சர்வ சாதாரணமாக துண்டொன்றை எனது கையில் திணித்து விட்டு, எனது குடும்ப மருத்துவர் அடுத்த நோயாளியை அழைத்துக் கொண்டு போனார். அவரது உதவியாளர்கள் இரத்ததானம் செய்கிறோமோ என்று சந்தேகப்படுமளவிற்கு எனது இரத்தத்தை தாராளமாகவே எடுத்துக் கொண்டார்கள். பிறகுதான் results எப்படி வருமோ என்று யோசிக்கத் தொடங்கினேன்.

அதற்குப் பிறகு ஒரு வார காலமாக, வீட்டில் போன் அடித்தால், அல்லது கைத்தொலைபேசி சற்று சிணுங்கினாலும் பாய்ந்து விழுந்து எடுத்து - ஒரு நாள் இப்படித்தான் எடுக்க - அது யாரோ இன்சூரன்ஸ் முகவர் - 'நீங்கள் இதுவரையில் இன்சூரன்ஸ் எடுக்கவில்லையா.. இந்தக் காலத்திலை எதுவும் நடக்கலாம். சொல்லிக் கொள்ள முடியாது' - என்ற ரீதியில் இருக்கிற பயத்தை அதிகரிக்கும் வகையில் அடுக்கிக் கொண்டே போக, சடாரென்று போனை அடித்து வைத்து அடுத்த நிமிசமே இன்னமொரு தொலைபேசி அழைப்பு - 'பாவம் அந்த பொடியனுக்கு நடந்தது தெரியுமே.. வயசும் கனக்கயில்லை'. போன் வயரை அறுத்தெறியலாம் போலிருந்தது. தற்செயலாக எனது மருத்துவரிடமிருந்து முடிவு (பாருங்கள்.. வரும் வார்த்தைகள் கூட அபசகுனமாக வருகின்றன) வந்தால், இந்த போனில்தானே வரவேண்டும் என்ற நினைப்பில் (வயர் அறுக்கிற) அந்த யோசனையை கைவிட்டு அந்த போனின் ஒவ்வொரு சிறு ஓசைக்கும் எல்லாத் தெய்வங்களையும் மனதிற்குள் பிரார்த்தனை செய்து கொண்டு காத்திருந்தேன்.

> அகதி அந்தஸ்து கோரும் சிலரின் கடவுச்சீட்டுக்கு நிகழும் கதியைப்போல எனது றிப்போர்ட் கார்ட்டும் கிழிக்கப்பட்டு, புளிய மரத்துக்குப் பின்னால் உள்ள ஈச்சம் பத்தைக்குள் சங்கமமாகும்.

'சோதனை மேல் சோதனை போதுமடா சாமி' என்று உரத்த குரல் எடுத்து பாடினால் பரவாயில்லை என்று தோன்றினாலும், அப்படிப் பாடப் போக, ஏற்கெனவே என் பேச்சு, நடை, உடை, பாவனைகளை சந்தேகக் கண்ணுடன் பார்த்துக் கொண்டு திரியும் என் மைத்துனன் என்னை அந்தப் (மண்டைப்) பரீட்சைக்கு வலுக்கட்டாயமாக அழைத்துச் (இழுத்துச்) சென்றாலும் என்ற பயத்தில் நான் பாட முயற்சிக்கவில்லை.

சின்ன வயதில் இருந்தே சோதனை என்றால் போதும். பள்ளிக்கூடச் சோதனையைச் சொன்னேன். சோதனைகள் நடத்தினால் பரவாயில்லை. பெறுபேறுகள் (Results) வாராமல் விட்டால் போதும் என்ற நிலை எனக்கு. நான் எழுதிய விடைத்தாள் ஏதோ காரணத்தால் காணாமல் போய், வெள்ளம் அடித்து வந்து அதை மாத்திரம் அள்ளிக் கொண்டு போய், பயங்கரப் புயல் அடித்து மாஸ்டரின் கையில் இருந்து அதை பிடுங்கி திக்கு திக்காய் வீசி - இப்பிடி பயங்கர இயற்கை அனர்த்தங்கள் நடந்தாவது நான் தப்புவேனோ என்று பார்த்தால் ஒன்றும் நடக்காது. 'டாண்' என்று குறித்த திகதியில் பரீட்சை முடிவுகள் வரப் போவதாக கரும்பலகையில் எழுதிப் போடுவார்கள். பிறகென்ன. பெரிய கோயில்கள், சிறு தெய்வங்கள் என்று பேதம் காட்டாமல் சூலம் நட்ட இடமெல்லாம் நின்று கும்பிட்டு, ஏற்கெனவே எழுதிக் கொடுத்து கட்டோடு கட்டாக யாரோ பரீட்சகர் வீட்டு மேசையில் கிடக்கும் எனது விடைப் பேப்பரை கடவுள் தேடிக் கண்டுபிடித்து, சரியான மறுமொழிகளை எழுதி வைத்து என்னைக் கரையேற்றப் போகிறார் என்று நம்பினேன். என் நிலை அப்படி.

சோதனை முடிவு வரும்போதுதானே வீட்டில் சோதனை தொடங்குகிறது. ஒரு முடிவில் ஒரு தொடக்கம். (பெரிய தத்துவம் - போதுமையா என்று நீங்கள் சொல்வது கேட்கிறது)

'முள்முருக்கு.. புத்தகங்கள், கொப்பிகள் வாங்கி வடிவாக கலர் பேப்பரிலை மட்டை போட்டு மேசையிலை அடுக்கி வைச்சால் சரியே.. ஒருநாள் புத்தகம் திறந்து பார்த்ததை நான் காணயில்லை. சோதனை எப்பிடி பாஸ் பண்ணும் எ..மை' என்று மரத்தில் தொடங்கி அஃறிணையில் முடிப்பார் அப்பா.

பேச்சோடு நின்றால் பரவாயில்லையே. அநேகமாக றிப்போர்ட் கொப்பி முகத்தில் விட்டு எறியப்படும். சிலவேளைகளில் என் மேல் தாளவாத்தியக் கச்சேரியும் நடக்கும். அம்மா இடையில் நுழைந்து மங்களம் (எனக்கும், அப்பாவுக்கும்) பாடிக் கச்சேரியை முடித்து வைக்காவிடின் என் கதி அதோ கதிதான்.

## நடந்தது... நடந்தது...

வகுப்பேற்றம் நடக்காத முதலாந் தவணைப் பரீட்சைக்கே இத்தகைய புயல் வீசுமென்றால், இறுதிப் பரீட்சை நடந்து முடிந்ததின் பின்னர் எத்தகைய சூறாவளி எங்கள் வீட்டில் வீசும் என்பதை யூகித்துக் கொள்ளுங்கள்.

வகுப்பாசிரியர் தனது தொட்டெழுதும் பேனாவினால், உருண்டை எழுத்துக்களில் - இவர் சித்திரம், பன்னவேலை, தோட்டப்பாடம் ஆகிய மூன்று பாடங்களில் மட்டும் சித்தி பெற்றுள்ளார். இதனால் இவர் வகுப்பேற்றப் படவில்லை - என்று ஈவிரக்கமின்றி எழுதி விடுவார். அருகில் 'பெற்றார் கையொப்பம்' என்று அச்சிட்டு வெற்றிடமும் இருக்கும். பெற்றார் என்றால் இந்த விஷயத்தில் அப்பா தான் என்பது எங்கள் வீட்டில் முடிந்த முடிபு. மேற்குறித்த ஆசிரியத் தலையங்கத்துடன் (குறிப்புடன்) றிப்போர்ட் கார்ட்டை நீட்டி அப்பாவிடம் எட்டி நின்றே கையெழுத்துக் கேட்டாலும், அப்பாவின் கைகள் கர்ணனின் கைகளைப் போல 'கொடுத்துச் சிவந்து விடும்' என்று எனக்குத் தெரியும்.

இதை தவிர்த்துக் கொள்வதற்காக, என்னைப் போன்ற 'வகுப்பேற்றம்' (பிற்காலத்தில் இதற்காகவே பல பேர் 'குதிரையேற்றம்' பயின்றார்கள் என்பது தனிக் கதை) பெறாத அபாக்கியவான்களாகிய இரண்டு, மூன்று பேர் பள்ளிக்கூடம் முடிந்து மற்றவர்கள் சந்தோசமாக வீடுகள் போய்ச் சேர்ந்த பின்னரும், எங்கள் வீடுகளுக்கு போக மனமில்லாமல், வழியில் உள்ள புளிய மர நிழலில் குந்தியிருந்து, மந்திராலோசனை நடத்துவோம். அடிக்கடி றிப்போர்ட் கார்ட்டை விரித்துப் பார்த்துக் கொள்வோம். ஒவ்வொரு முறை திறக்கும் போதும், 'வகுப்பேற்றப்படவில்லை' என்ற வாசகமே 'பளிச்'சென்று தெரியும்.

திடீரென்று எங்கள் கூட்டத்தில் ஒரு பிரேரணை முன் வைக்கப்பட்டது. 'படவில்லை' என்ற சொல்லை 'பட்டார்' என்று மாற்றிக்கொண்டால் என்ன என்பதுதான் அந்தப் பிரேரணை. ஏகமனதாக எற்றுக் கொள்ளப்பட்டபின், முதலாவது காரியமாக 'படவில்லை' யை எப்படியாவது அழிக்கவேண்டும் என்று தொடங்கினோம். எனது றிப்போர்ட் கொப்பியில் தான் ஆரம்பித்தார்கள். இந்தக்காலத்தைப் போல, மையழிக்கும் சாதனங்கள் எதுவும் அக்காலத்தில் இல்லையென்பதினால், 'முரட்டு அழிறப்பர்' (Eraser) ஒன்றினால் அமுத்தி, அழிக்கப்போக எழுத்துக்களோடு, றிப்போர்ட் கொப்பியின் மெல்லிய தாளும் (பேப்பர் என்பதின் மறு பெயர்) கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து போய், 'டே.. போதுமடா' என்று நான் கத்தி, நிறுத்துவதற்கிடையில், அழித்த இடத்தில், (ஆகாயத்தில் 'ஓஷோன்' படலத்தில் வருவதாகச் சொல்லப்படும் துவாரத்தைப் போல) துவாரம் விழுந்து, முன்பக்கத்திலுள்ள இரண்டாம் தவணைக்குரிய 'ஆசிரியக் குறிப்பு' தெரிய ஆரம்பிக்கும். அழுகை, அழுகையாக வரும். எல்லோருக்குந்தான்.

அழுது முடிந்தபின், 'தேவதாஸ்' படத்தில் வரும் 'துணிந்தபின் மனமே துயரம் கொல்லாதே' (கண்டசாலா அப்படித்தான் பாடினார்) என்ற பாட்டை நினைத்து, ஆறுதல் அடைந்து துணிவடைந்தேன். அகதி அந்தஸ்து கோரும் சிலரின் கடவுச்சீட்டுக்கு நிகழும் கதியைப்போல எனது றிப்போர்ட் - கார்ட்டும் கிழிக்கப்பட்டு, புளிய மரத்துக்குப் பின்னால் உள்ள ஈச்சம் பத்தைக்குள் சங்கமமாகும்.

வீட்டுக்குப் போனவுடன் அப்பா கேட்ட 'எங்கையடா.. றிப்போர்ட்?' என்ற கேள்விக்கு நான் பதில் தயாராக வைத்திருந்தேன். 'லீவு முடியத்தான் தருவினம்'

மார்கழி விடுமுறை முடிய ஒரு மாதத்துக்கு மேலாகும். அதற்குள் என்னவென்னவெல்லாமோ நடந்து முடிந்து விடும். அவகாசம் ஒன்று தேவை. அவ்வளவுதான்.

போன் அடித்தது. அவசரமாக எடுக்க, எனது குடும்ப மருத்துவரின் வரவேற்பாளர் கதைத்தார். 'இன்னமொரு Test எடுக்க வேணும். வர முடியுமா?'.

பரீட்சை தொடர்கிறது.

உங்கள் எண்ணம் உயர்வானது!
உங்கள் உழைப்பும் உயர்வானது!
உங்களின் நிகழ்வுகள் உயர்வானதாக இருக்கவேண்டுமா?
எம்மை நாடுங்கள்
Crane available for hire to video graphers & Film Makers
FILM & VIDEO PRODUCTION
VIDEO CRANE - STEADICAM
Tel: 0208 684 5207 / 0208 952 0599 / 05600 462 860
Mob: 07850 776 224 / 07810 543 146

**SRINIVASANS SOLICITORS**
169, Tooting High Street, London, SW17 0SY
Tel: 020 8767 1151 Fax: 020 8767 1388
**K. Chelva Nayagam L.L.B.**
Solicitor
(Former Principal of Nathan & Chelva)
Please contact him for all your matters in particular Commercial & Residential Conveyances, Family Proceedings, Civil Litigation & Immigration
He always works for clients' interest & takes more care in dealing with his clients' matters
Mob: 07956 466 708
email: chelva@hotmail.co.uk

**PERMA**
**INTERNATIONAL SHIPPING LTD**
உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?
இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும். தரமான பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்
**தொடர்புகளுக்கு: சிவம்**
45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: 020 8646 5222, Mobile: 07939 550397

**A S KUGANN**
**Photogaraphy**
"A Reason to Smile"



Arangetrams
Weddings
Birthdays
Community Events
Parties
Portraits
Commercial
admin@askugann.com / askugann@googlemail.com
www.askugann.com
020 8686 9368 / 07899 811 402
3/15 St. Peters Road, Croydon Surrey CR0 1HL

**AIR SAVERS** Travel Agents
நம்பிக்கை, நேர்மை, உத்தரவாதம் உங்களுக்கு திருப்திகரமான துரித சேவை
குறைந்த செலவில் உலகின் எப்பகுதிக்கும் பயணம் செய்ய அழையுங்கள்...
Tel: 0871 855 0916
Fax: 0871 8550 917
020 8540 2226
Open 7 days week
All major credit cards accepted
near by South Wimbledon Tube Station
ATOL 4848
36 Merton High Street, South Wimbledon, London SW17 4AU
visit: http://virtual.towns.com email: bparam@aol.com

# AADORAA
ACCOUNTANTS & BUSINESS ADVISORS

உங்கள் வியாபார நிறுவனங்களின் கணக்கியல், வரி சம்பந்தப்பட்ட அனைத்து நிர்வாக தேவைகளுக்கும் எம்மை நாடுங்கள், இலவச ஆரம்ப ஆலோசனையுடன், நட்புடன் கூடிய சேவைகள் மிகக் குறைந்த கட்டணத்துக்கு வழங்கப்படும்

- Payroll
- VAT Returns
- Book-Keeping
- Business Startup Advice
- Self Assessment Tax Returns
- Management & Statutory Accounts
- Business Plans & Cash Flow Forecasts
- Data Processing and General Outsourcing



'தமிழியல்: திணையும் தளமும் நிலையும்' மாநாடு. இந்த மாநாட்டை கனடாவின் டொராண்டோ பல்கலைக்கழகம், வின்சர் பல்கலைக்கழகம், தமிழ்க் கலைத் தொழிற் நுட்பக் கல்லூரி ஆகியன இணைந்து ஒழுங்கு செய்திருந்தன. ஒன்பது அமர்வுகளில் 27 ஆய்வுக் கட்டுரைகள் தமிழியலை ஒட்டிய பல்வேறு தலைப்புகளில் வாசிக்கப்பட்டன. இந்தியா, இலங்கை, அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து, சுவீடன், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இருந்து பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் கட்டுரை வாசித்தார்கள். தமிழர்களின் சமகால வாழ்வியலைச் சித்திரிக்கும் நவீன ஓவியக் கண்காட்சியும் மாநாட்டில் இடம்பெற்றது. ஓவியக் கண்காட்சியில் கனடாவைச் சேர்ந்த ஓவியர்களான நந்தா கந்தசாமி (ஜீவன்), கருணா ஆகியோரின் ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ஓவியர்களுடனான கலந்துரையாடல் ஒன்றும் சிறப்பு அமர்வாக நடைபெற்றது. 250 பேர் வரையில் கலந்து கொண்ட இந்த மாநாட்டின் முதல் இரண்டு நாட்களும் ஆங்கில மொழியிலும் மூன்றாவது நாள் அமர்வுகள் தமிழ் மொழியிலும் இடம்பெற்றன.

முதலாவது அமர்வாக இடம்பெற்றது வரலாறும் இலக்கியமும். இந்த அமர்வில் பேராசிரியர்கள் இந்திரா பீட்டர்சன் (மவுண்ட் ஹோலியோ கல்லூரி, அமெரிக்கா), தமிழ் நாட்டில் குறவஞ்சி நாடகங்கள் பற்றிய கட்டுரையை வாசித்தார். நியூயார்க், செயிண்ட் லாரன்ஸ் பல்கலைக்கழக பேராசிரியர் அர்ச்சனா வெங்கடேசன் திருமங்கை ஆழ்வாரின் மடல் பாடல்களில் தலைவியின் நிலை குறித்த ஆய்வுகளைப் பகிர்ந்து கொண்டார். தமிழர் வரலாற்றை எழுதுதல்: தேசியத்துக்கு அப்பால் என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் பொ.ரகுபதி கட்டுரை படைத்தார்.

தற்காலத் தமிழ் இலக்கியம் என்ற தலைப்பில் இரண்டாவது அமர்வு இடம்பெற்றது. இந்த அமர்வில் 'நவீன தமிழ் இலக்கியம் எதிர்கொள்ளும் மொழியின் சவால்கள்' என்ற தலைப்பில் யேல் பல்கலைக்கழக பேராசிரியர் அண்ணாமலையும் 'நம் காலத்து தலித் இலக்கியம்' என்ற தலைப்பில் பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவன ஆய்வாளர் என்.கண்ணனும், 'தற்கால ஈழத்து இலக்கியத்தில் திணை/வெளி/வகைப்பாடுகள்' என்ற தலைப்பில் ரொறான்ரோ பல்கலைக்கழக பேராசிரியர் செல்வா கனகநாயகமும், 'தமிழ் யதார்த்த நாவலும் சாதியமும் பாலினமும்' என்னும் தலைப்பில் எழுத்தாளர வ.கீதாவும் ஆய்வுக் கட்டுரைகள் வாசித்தனர்.

மூன்றாவது அமர்வு அலைந்துழல்வியல். இதில் நியூயார்க் சிற்றி பல்கலைக்கழக பேராசிரியர் சுரேஷ் கனகராஜா ஆங்கில மொழிக் கூடாக அலைந்துழல்வின் அடையாளத்தை உருவாக்குதல் என்பது குறித்த ஆய்வைப் படைத்தார். சவுத் கரோலைனா பல்கலைக்கழக பேராசிரியர் மார்க் விட்டேக்கர் 'சிவராமின் மரணமும் புகலிடத் தமிழரும்' என்ற தலைப்பில் கட்டுரை வாசித்தார். 'ரொறான்ரோ தமிழ் இளையர்களும் பண்பாட்டுப் பரிமாற்றங்களும்' என்ற தலைப்பில் ஹார்வர்ட் பல்கலைக் கழக பேராசிரியர் எஸ்.ஜே. தம்பையா கட்டுரை வாசித்தார். ஜோசப் சந்திரகாந்தன் புலம் பெயர்ந்த சூழலில் மருத்துவத் துறையில் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் கலாச்சார பண்பாட்டு சிக்கல்கள் குறித்து உரையாற்றினார். வின்சர் பல்கலைக்கழக பேராசிரியர் சேரன் 'அலைந்துழல்வின் கோட்பாட்டியல்' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை படைத்தார்.

நான்காவது அமர்வு, அண்ணன்மார் கதை பற்றியது. நாட்டார் இலக்கியப் படைப்பான அண்ணன்மார் கதை எழுதப்பட்ட வரலாற்றுச் சூழலை ஆய்வு செய்து பிரான்டா பெக் கட்டுரை படைத்தார். பிரெண்டா பெக் தயாரித்த அண்ணன்மார் கதை திரைப்படத்தின் சில காட்சிகளும் திரையிடப்பட்டன.

மறுநாள் சனிக்கிழமை 'காலணித்துவத்திற்கு முன்பு' என்ற தலைப்பின் முதல் அமர்வு நடைபெற்றது. உப்சாலா பல்கலைக்கழக பேராசிரியர் பீட்டர் ஷாக் (வரலாற்றியலும் இலங்கை யுத்தமும்), இங்கிலாந்து, ஸ்கூல் ஒப் ஓரியண்டல் அண்ட் ஆப்ரிக்கன் ஸ்டடிஸ் விரிவுரையாளர் தாவுத் அலி (சோழர் காலக் கல்வெட்டுக்களில் வேழம் என்னும் சொல் பற்றிய ஆய்வு), மாக்கில் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் கத்ரின் யங் (பறையடிப்போரும் மாறி வரும் தமிழ் அடையாளமும்: சங்கக் கவிதைகளில் இருந்து பக்தி இலக்கியம் வரை), கொன்கோடியா பல்கலைக்கழகர் லெஸ்லி ஓர் (மத்திய காலத் தமிழ்நாட்டில் பறையடிப்போரின் சமூக நிலை) ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகள் வாசித்தனர்.

வட அமெரிக்காவில் தமிழியல் கல்வியின் எதிர்காலம் என்பது பற்றியும் ஓர் அமர் இடம்பெற்றது. இந்த அமர்வில் அமெரிக்க, கனேடிய பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள் தமிழ் மொழியையும் தமிழியலையும் அமெரிக்காவிலும் கனடாவிலும் கற்பிப்பதற்கும் மேம்பாட்டிற்கும் எத்தகைய வழிகளில் திட்டமிட்டுச் செயல்பட வேண்டுமென்பது குறித்து விவாதித்தனர்.

அடுத்த அமர்வு காலனித்துவ, பின்காலனித்துவ வரலாறு பற்றி அமைந்தது. இந்த அமர்வில் யேல் பல்கலைக்கழக பேராசிரியர் பெர்னாட் பேட்ஸ், 19ம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்தின் சமூக மாற்றங்கள் என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வாசித்தார். ஸ்வார்த்மோர் கல்லூரி பேராசிரியர் சூசன் ஸ்கூம்பர்க் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறும் இஸ்லாமிய தமிழ் மரபுகளில் பெண்களும் என்ற தலைப்பில் கட்டுரை வாசித்தார். 'தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையும் இலங்கையின் இடதுசாரி இயக்கமும்' என்னும் தலைப்பில் மனிடோபா பல்கலைக்கழக பேராசிரியர் ரவீந்திரன் வைத்தீஸ்வரா கட்டுரை வாசித்தர். 'விராலிமலை முருகன் ஆலயத்தின் தேவதாசி ஆடல் மரபு' பற்றி மாக்கில் பல்கலைக்கழக பேராசிரியர் தவேஷ் சொனேஜி கட்டுரை வாசித்தார்.

மாலை அமர்வு மானுடவியல் என்ற பொதுத் தலைப்பில் இடம்பெற்றது. 'இடம்பெயர்வை எதிர்கொள்ளல்: அங்கீகாரத்திற்கான அறவியலா அல்லது அதிகாரத்திற்கான வேட்கையா' என்னும் தலைப்பில் பேராசிரியர் வலண்டைன் டானியல் (கொலம்பியா பல்கலைக்கழகம்), இனவாதமும் 'பயங்கரவாதமும்' என்ற தலைப்பில் பேராசிரியர் யமுனா சங்கரசிவம் (நாஸரெத் கல்லூரி), துட்டகாமினியும் செங்குட்டுவனும் என்னும் தலைப்பில் பேராசிரியர் மார்கிரெட் ட்ரேவிக் (மாஸ) பல்கலைக்கழகம்), தமிழ் நாட்டில் பண்பாடு, பண்படுத்துதல், நாகரிகம் என்ற தலைப்பில் பேராசிரியர் ஆனந்த் பாண்டியன் (பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம்) ஆகியோர் கட்டுரைகள் வாசித்தனர்.

பிற்பகல் அமர்வு, ஈழத்து இலக்கியம்: படைப்பின் கவித்துவம், திறனாய்வின் நெறிமுறைகள், வெளியீட்டின் தொழில்நுட்பம் என்ற தலைப்பில் இடம்பெற்றது.

அனைத்து அமர்வுகளிலும் பயனுள்ள கருத்துப் பரிமாற்றங்களும் விவாதங்களும் இடம்பெற்றன. சிலவேளைகளில் காரசாரமான ஆனால் ஆய்வு நிலை தவறாத விவாதங்கள் இடம்பெற்றன. இந்த மாநாடு ஆண்டுதோறும் மே மாதம் நடைபெற உள்ளது. மாநாட்டில் சமர்பிக்கப்பட்ட ஆய்வுகளின் தொகுப்பு நூலாக வெளிவரும். மாநாடு பற்றிய மேலதிக விவரங்களை http://www.chass.utoronto.ca/~tamils/main.html என்ற இணையத் தளத்தில் பார்க்கலாம்.

*- எஸ். கிருஸ்ணசாமி*


# Kerala Ayurvedic Health Clinic



Free Consultation | Authentic and effective Kerala ayurvedic treatments

Qualified and registered Ayurvedic Physicians | Affordable Prices

**Call 020 8902 1104 or 020 8902 1707**

உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும், மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுற்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்



Massage therapies by experienced and highly skilled therapists

Treatment is designed around your individual health needs

Only natural herbal medicines are used

No side effects at all

Wide range of therapies

- ✓ Frozen Shoulder
- ✓ Digestive Disorders
- ✓ High Blood Pressure
- ✓ Pulled Muscles
- ✓ High Cholestrol
- ✓ Trapped Nerve
- ✓ Paralytic Conditions

- ✓ Stress and Strain
- ✓ Back Pain
- ✓ Joint Pain
- ✓ Diabetes
- ✓ Migraine
- ✓ Stiffness
- ✓ Arthritis

Male & Female Therapists available

We can also speak in Hindi Tamil & Malayalam




**Open 7 Days a Week**

**1 Odeon Parade, Sudbury Heights Avenue, Greenford, Middlesex, UB6 0NA**

**5 mins walk from Sudbury Town - Piccadily Line www.kahc.co.uk**

# Sinhalese Heritage, A Historical Note

**By Kalaignar M Karunanithy**

What is the root of the Sinhala race? What do we find in the history books approved by the government?

It is this. In Bengal (in India) there was a kingdom, and there was a queen whose name was Subadevi. She was a termagant; she was vain and flamboyant. She was not fit to be a housewife. They were trying to correct her; but of no avail. Angered by the efforts made to mend her manners she left the palace; she walked and walked day and night. On the way she saw a ruffian called Singam who was a cannibal. He set his eyes on her. Because of her beauty he did not feel like killing her. Instead he expressed his desire to marry her. Fearing that her refusal might result in her death, she consented to marry him. Singan the ruffian took her to a cave and confined her there closing the mouth of the cave with a boulder. He would go out during the day time and come back in the evening to sleep with her. During the cohabitation the woman gave birth to two children, one male called Singabahu and a female named Singavalli. The children also grew up shut up in the cave. When the boy reached adolescence he asked his mother as to why his father had kept them in the cave as captives. His mother narrated every thing in detail to her son. "How long are we to live like this, confined in the cave? I am as strong as my father; come with me; we wil go out" said the son. Without waiting for a reply from his mother he placed his mother on one shoulder and the sister on the other and left the cave pushing the boulder at the mouth of the cave aside. Singan the ruffian father returned to the cave only to see that his wife and children had bolted away. He searched for them high and dry. Having failed to see them he headed towards a place called LALA. The pangs of separation from his family drove him mad and he killed all and sundry he met on the way. He created anarchy and confusion at Lala. The people of Lala promised a reward to anyone who would subjugate Singan the unruly. When Singabahu learnt of the announcement he traced his father, killed him and took the chopped off head of Singan to the king of Lala. The king was so pleased that he crowned Singabahu as the king of Lala.

The fact that he was crowned did not satisfy him. He wanted a queen also. He did not want any body else to be his wife. Therefore he married his own sister and made her the queen. Singavalli gave birth to sixteen twins. One of the thirty two children was Vijaya. Vijaya inherited all the qualities of his grand father. He had about 700 equally riotous friends. Vijaya and his friends ran riot in the country marauding all and sundry. He indulged in all kinds of orgies. Unable to bear the atrocities of Vijaya and his companions Singabahu banished Vijaya and his friends, putting them in a ship, after drifting aimlessly for some time in mid ocean, finally reached the shores of an island. That island was Lanka. Vijaya became the king of Lanka. The Sinhalese of today in Sri Lanka are the descendants of that notorious Vijaya the rowdy whose grandfather was a cannibal.

The foregoing is not my creation. I have quoted this from the history text book prescribed for the Tamil students of Sri Lanka. I have simply paraphrased that story for the benefit of others.

*[Courtesy: KUNKUMAM 20-26 July 1990. – A translation of Tamil article of the Chief Minister of Tamil Nadu.]*

Tamil International Magazine – Information By I.A.Sivanantham (1/08/1990)

# தன்னம்பிக்கை- மகிழ்ச்சி

மனிதனின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் கண்ணாடியாக முகம் உள்ளது. சோகம், மகிழ்ச்சி, விரக்தி, கோபம், அருவருப்பு என பல வகையான உணர்வுகளை ஒருவன் பூட்டிக் கொள்ள நினைத்தாலும் அது முடியாது. இப்படிப்பட்ட முகத்துக்கு அழகு தருவது எது? சிரிப்பு தான்.

சிரிப்பு இல்லாத முகம் தெய்வம் இல்லாத கோவில் போன்றது என்று சொல்லலாம்.

கள்ள கபடமற்ற குழந்தைகள் சிரிப்பதை பார்த்தால் சகல சோகங்களும் ஓடி விடும். அதை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றும். அதுபோல சிலர் எப்போதும் சிரித்த முகத்துடன் பொலிவுடன் காணப்படுவர். இத்தகைய நபர்களிடம் பழகுவதற்கும் அனைவரும் விரும்புவர். சிரித்த முகம் தன்னம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் கொண்டு வருகிறது.

சிரிப்பை பொறுத்தவரை பல வகைகள் உண்டு. இருப்பினும் வாய் விட்டு, பல் ஈறுகள் தெரிய சிரிப்பது உடம்புக்கு ஆரோக்கியமானது என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். காரை படிந்த மஞ்சள் நிறம், ஒன்றிரண்டு பற்கள் காணாமல் போதல், பற்கள் அரித்து காணப்படுவது, பற்குழி, துர்நாற்றம் போன்ற பிரச்சினைகள் இருப்பவர்களால் இதுபோல சிரிக்க முடியுமா? அவர்கள் உண்மையிலேயே சிரிக்க வேண்டும் என்றும் நினைத்தாலும், பல் பிரச்சினைகள் நினைத்து, வாயை மூடிக் கொள்வார்கள். அல்லது நமுட்டு சிரிப்பு சிரிப்பார்கள். இதுபோன்ற நமுட்டு சிரிப்பால் ஒரு பயனும் இல்லை.

வாய் விட்டு சிரிக்கும் போது முகத்தில் உள்ள தசைகள் நன்றாக இயக்கப்படுவதால் முகம் பொலிவடைகிறது. தோற்றத்தில் நன்றாக இருப்பவர்கள், தங்களைப் பற்றி நல்லவிதமாக உணர்கிறார்கள்.

இதனால் சமுதாயத்தில் உள்ளவர்களிடம சகஜமாக பழக முடிகிறது. தன்னம்பிக்கையுடன் இருப்பதால் வாழ்க்கையில் உயர்வான நிலையை அடைகிறார்கள். ஆனால் வாய் விட்டு சிரிக்காதவர்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படுவதால், சமுதாயத்துடன் இணைந்து பழகுவதில் பின்தங்கி இருப்பார்கள்.

ஒருவேளை அவர்களுடைய பல் பிரச்சினைகள் சரி செய்யப்பட்டால், எல்லாம் நார்மலாகி விடும். தன்னம்பிக்கை அதிகரித்து, நிலையும் உயரும். வாழ்க்கையில் தன்னம்பிக்கை அதிகரிக்க முதலில் பற்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுங்கள். பின்னர் வாய் விட்டு சிரியுங்கள்.

- உமா

# விருந்தினர் வந்தால் . . .

ராதா
(ஒரு பேப்பருக்காக)

## இறால் குழம்பு

**தேவையான பொருட்கள்:**

இறால் - 1Kg
பெரிய வெங்காயம் - 2 வெட்டியது
நீளமாக வெட்டிய ப.மிளகாய் - 5
பால் - 1½ கப்
வெந்தயம் - 1 தே.கரண்டி
உள்ளி [அரைத்தது] - 4 பல்லு
இஞ்சி [அரைத்தது] - 1 அங்குலம்
பழப்புளி - தேசிக்காய் அளவு
எண்ணெய் - சிறிதளவு
கறிவேப்பிலை - சிறிதளவு
உப்பு - சுவைக்கேற்ப
மிளகாய்த்தூள் - 1½ -2 மே.கரண்டி

**செய்முறை:**

இறாலை துப்புரவு செய்து மஞ்சள், உப்பு, மிளகாய்த்தூள் பூசி வைக்கவும். வெட்டிய வெங்காயம் ப.மிளகாய் இரண்டையும் வதக்கி வெந்தயம் சேர்த்துக் கொள்ளவும். பின் பிரட்டி வைத்திருக்கும் இறாலைப் போட்டு மூடி மெல்லிய நெருப்பில் வைக்கவும். இறால் அவிந்து நிறம் மாறும் போது இஞ்சி, உள்ளி சேர்த்து, கரைத்து வைத்திருக்கும் புளியையும் விட்டு பாலையும் சேர்த்து உப்பு, கறிவேப்பிலை போட்டு கறி நன்றாக தடித்து வரும்போது இறக்கிக் கொள்ளவும்.

# Grace அக்கா வீட்டு Kitchen . . .

கிரேஸ் அக்கா
(ஒரு பேப்பருக்காக)

## வட்டிலப்பம்

**தேவையான பொருட்கள்**

7 முட்டை
1 Pint பால்
1½ சர்க்கரை [Kithul jaggery]
4 மே.க.தேங்காய்ப்பால் பவுடர்
1 தே.க. Nutmeg Powder
சிறிது கஜு

**செய்முறை:-**

கித்துல் சர்க்கரையில் 2 பாதியில் 1½ பாதியை துருவி 1 பைன்ற் பாலில் நன்கு கரைத்தெடுக்கவும். முட்டையை நன்கு நுரைக்க அடித்ததும், ஏற்கனவே சர்க்கரை கரைத்த பால் கலவையை சேர்த்து நன்கு அடிக்கவும். இறுதியில் தேங்காய்ப்பால் பவுடர், Nutmeg பவுடர் கலந்து ஓர் கண்ணாடி பாத்திரத்தில் (Bowl) ஊற்றி கஜு துண்டுகளை மேலாக தூவி விடவும். ஓர் வாயகன்ற பாத்திரத்தில் தண்ணீர் வைத்து அதற்குள் கலவை ஊற்றிய பாத்திரத்தை வைத்து மூடி வேகவிடவும். தண்ணீர் வைக்கும் போது உள்ளே வைத்திருக்கும் பாத்திரத்தின் அரைவாசிக்கு இருக்கும் படியாக பார்த்துக் கொள்ளவும். நீர் அதிகமானால் கொதிக்க ஆரம்பித்ததும் கலவைக்கு உள்ளே போக ஆரம்பித்துவிடும். விரும்பினால் அவனில் (oven) வைத்தும் வேக வைத்து எடுக்கலாம். வெந்து எடுத்ததும் அப்படியே நிரம்பி ஒரு பாத்திரத்தில் எடுத்து குளிரூட்டியில் வைத்துப் பரிமாறவும்.


பாயாசத்திற்கு, திராட்சைக்கு பதிலாக பேரிச்சம் பழத்தை பொடியாக நறுக்கி வைத்து நெய்யில் பொரித்து போட்டால் சுவையாக இருக்கும்.

சக்கரைப் பொங்கல் செய்யும்போது அரை கப் தேங்காய் பால் ஊற்றிக் கிளறி இறக்கினால் பொங்கல் மிகவும் சுவையாக இருக்கும்.


பாகற்காயுடன் உப்பு மஞ்சள்தூள் வெல்லம் எலுமிச்சை சாறு ஆகியவை சேர்த்து கலந்து அரை மணி நேரம் வைத்திருந்தால் கசப்பு காணாமல் போய்விடும்.

உளுந்துவடை செய்யும் போது மாவுடன் வேகவைத்த உருளைக் கிழங்கை மசித்து கலந்து வடை செய்தால் வடை எண்ணெய் குடிக்காமல் மொறு மொறுவென்று ருசியாக இருக்கும்.

- வசம்பு



Indian famous Astrologist newly arrived to London
**SRI SIVAPARVATHI JOTHIDAM**
இந்தியாவில் இருந்து முதன் முறை வருகை தந்துள்ள பண்டித் சித்ததார்த் சாஸ்திரி
அவர்கள் சிவாபார்வதி அருள் கொண்டு கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.



An expert pandit at service, past, present and future of your life, will be read over to you from your numerology, face reading, palm reading & horoscope reading prediction in business, education, job, love, marriage, family problem, sickness, promotion, abroad money, removal of enemy. Spoken languages, Tamil, Hindi & English. We write your horoscopes from 1906 to 2006.

துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் கணவன் மனைவி ஒற்றுமை, கைரேகை, திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், லட்சுமீகர விடயம், கண் திருஷ்டி, கோட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பிறந்த பிள்ளைகளின் ஜாதகம் கணித்துக் கொடுக்கப்படும். தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். 1905 - 2006 வரை குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்

**SONIA**
(Near VB & Sons)
141 Ealing Road, Wembley, Middx HA0 4BP
Mob: **07949 161 555**
Opening Hours: 10.00am to 8.00pm 7 days a week

# ஒரு அடிமுட்டாளுக்கு அடியேனின் பதில்

சென்ற 'ஒரு பேப்பரில்' ஒரு அடிமுட்டாள் எழுதிய கட்டுரையை வாசித்த ஆத்திரம் தாளாமல் இதனை எழுதுகிறேன்.

டார்வினின் பரிணாமத் தத்துவத்தின் ஒரு துளி கூடத் தெரியாமல் எழுதப்பட்டிருக்கிறது அந்தக் கட்டுரை. யார் இந்தக் கவனப்பிரியன்? தெரியாத விடயங்களில் ஏன் கை வைக்கிறார்? இவரிடம் யார் இதைப் பற்றியெல்லாம் எழுது என்று கேட்டது?

மருத்துவ விஞ்ஞானத்தில் பெரும் பாய்ச்சல் நிகழக் காரணமாக இருந்ததே டார்வினின் பரிணாமக் கொள்கைதான். மருத்துவ விஞ்ஞானத்தில் பெரும் சாதனை என்று சொல்லத்தக்க விசயமே சத்திர சிகிச்சையினைத்தான். குரங்கும் மனிதரும் அடிப்படையிலே ஓர் இனம் என்று நிறுவிய படியால், குரங்கினை பரிசோதனைப் பொரு ளாக வைத்து, ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

சில முட்டாள்க்ளைத் திருத்த முடியாது. அடிமுட்டாள்களை ஒருபோதும் திருத்த முடியாது. கவனப்பிரியனை திருத்த இதை ஒன்றும் நான் எழுதவில்லை. முட்டாள் தனமான முடிவுகளை ஒரு பேப்பர் வாசகர்கள் எடுக்கக் கூடாது என்பதற்காகவே இதனை எழுதுகிறேன்.

குரங்கிலிருந்து மனிதர் தோன்றியவர் அல்லர். அப்படி டார்வின் சொல்லவுமில்லை. ஓர் இனத்திலிருந்து கிளைத்த இரு இனங்கள் தாம் மனிதரும், குரங்குகளும். ஆயினும் மனிதரினதும் குரங்குகளினதும் உடலமைப் பில் 98.2% ஒத்துப் போவதாக உள்ளது.

பல குரங்குளுக்கு வால் உண்டு. சில குரங்குகளுக்கு வால் இல்லை. மனிதர் களுக்கும் இல்லை. ஆனாலும், முதுகுத் தண்டு முடிகிற இடத்தில் கைகளால் அமத்திப் பாருங்கள் வால் தொடங்கிய இடம் தட்டுப்படும்.

சிங்கம், புலி, பூனை ஓரினம் என்பது போல, ஓநாய், நாய், நரி, ஓரினம் என்பது போல முதலை, கபரகொய்யா, உடும்பு, ஓணான் ஓரினம் என்பது போல மனிதர், கொரில்லா, குரங்கு என்பன ஓரினம். இதனை டார்வின் ஊகத்துடன் அல்ல ஆதாரத்துடன் மிகத் தெளிவாகச் சொல்லி விடுகிறார்.

இயற்கைத் தேர்வின் (Natural Selection) அடிப்படையிலேயே உயிரினங்கள் பரிணாமம் பெறுகின்றன என்பது டார்வினின் கண்டு பிடிப்பு. உதாரணம் மூலம் இதை விளக்குவ தென்றால், ஒட்டகச் சிவிங்கியின் கழுத்து ஏன் நீண்டிருக்கிறதென்றால் உயரமான மரங் களில் கொப்புகளை வளைத்து குழை தின்பதற்காக.

யானைக்கு தும்பிக்கை ஏன் வந்ததென்றால் நீருக்குள் அமிழ்ந்து பயணம் செய்கிறபோது மூச்சு விடுவதற்காக. இவை ஒரு நாளிலேயோ ஒரு மாதத்திலேயோ, ஒரு வருடத்திலேயோ நிகழ்ந்து விடுகிற காரியம் அல்ல. இவ்வாறான மாற்றங்கள் நிகழ இலட்சக்கணக்கான வருடங்கள் செல்லும்.

உதாரணத்திற்கு ஒட்டகச் சிவிங்கியை எடுப்போமென்றால், ஆரம்பத்தில் கட்டையான கழுத்துக் கொண்டதாகவே அந்த விலங்கு இருந்திருக்கும். அந்த விலங்கு உணவு தேடுகிறபோது, உயரமான கொப்புகளின் குழைகள் அவைக்கு எட்டவில்லை. எட்டி எட்டி முயற்சி செய்தன. அவ்வாறு முயற்சி செய்ய கழுத்து சில அங்குலம் நீண்டது. ஒரு ஒட்டகச் சிவிங்கிக்கு அப்படி நீண்டதல்ல. அப்படி நீள வேண்டும் என்ற செய்தி பரம்பரை அலகுகளினூடாக (Genes) பின்னர் வரும் சந்ததிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. அப்படி இலட்சக்கணக்கான வருடங்கள் போக, ஒட்டகச் சிவிங்கியின் கழுத்து யார் கணக்கில் நீண்டது.

ஒன்றைக் கவனியுங்கள். மனிதர்களுக்கு தலை வழுக்கை ஆவது ஏன்? மயிரின் தேவைகள் இப்போது இல்லாமல் போகின்றன. குளிரிலிருந்து உடலைக் காக்கவே மயிர் பயன்பட்டது. குளிரிலிருந்து உடலைக் காக்க மனிதன் பழகிவிட்டதால் மயிரின் தேவை அற்றுப் போகிறது. வழுக்கை விழும் காரணம் ஏன் என்று புரிகிறதா? ஒரு பரிணாம வளர்ச்சிதான் வழுக்கை.

இப்பொழுது விஞ்ஞானிகள் ஒன்றினைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். மனிதரின் கைகளில் ஐந்து விரல்கள். அனைத்து விலங்கு களுக்கும் ஐந்து விரல்கள் தாம். பறவைகளின் செட்டைகளை ஐந்து எலும்புகள்தான் இணைக்கின்றன. அதேபோல திமிங்கிலம் அல்லது சுறா போன்ற நீர்வாழ் உயிரினங்களின் செதில்களையும் ஐந்து எலும்புகள்தான் இணைக்கின்றன.

அதில் வேறொன்றையும் கவனியுங்கள். பறவைகளோ நீர்வாழ் உயிரினங்களோ நகர் வதற்கு செட்டைகளும்தான் உதவுகின்றன. ஏன் நீங்கள் ஓடிப் பாருங்கள். காற்றை வலிப்பதற்கு இந்த ஐந்து விரல்களும் உதவுவதை அறிவீர்கள். இதிலிருந்து கூட கூர்ப்பின் உண்மையை நாம் உணரமுடியாதா?

டார்வினின் கூர்ப்புக் கொள்கை தொடர்பாகச் சொல்ல மிக நீண்ட வகுப்பு எடுக்க வேண்டும். அதற்கு இங்கு இப்போது இடமும் நேரமும் இல்லை. ஒரு கல விலங்கு, இரு கல விலங்கு, பல கல விலங்கு என்று பரிணாமத் தத்துவங்களை ஆரம்ப வகுப்புகளி லேயே படித்திருக்கிறோம். விஞ்ஞான பூர்வ மான சிந்தனை வளர்ச்சி இல்லாது போனால் கவனப்பிரியன் போல் அடிமுட்டாள்கள் தான் உருவாவார்கள்.


மனிதகுலம் மீட்சி பெற, எழுச்சி பெற, உயர்ச்சி பெற முட்டாள்களைத் தூக்கித் தூர எறிந்து விட்டு பகுத்தறிவுடன் உலகை, பொருளாய் பார்க்கப் பழக வேண்டும். அதுவே முக்கியம். ஏன் என்ற கேள்வியையே எதற்கும் நாம் முன்வைப்போம்.

*- ஜோசப் ஸ்ராலின்*

## விவேகமாய் விரைந்திடு...

பொங்கு தமிழ் கொண்டு
பொங்கு கடலென
ஆர்ப்பரித்த தமிழினமே
அணை திறந்த வெள்ளமென
அணி திரண்ட
கனடிய தமிழினமே
என்ன செய்து கொண்டிருக்கிறாய்
தாய் மண்ணில் சிங்களம்
எம் தமிழரை கொல்ல —வந்த
மண்ணில் உன் அரசு
தமிழனை தடை செய்ய
தடைகள் கண்டு அஞ்சிடலாகுமோ
தர்மம் நம் பக்கம் அதில்
தடைகள் ஏதென நீ
எழுந்து கேட்க வேண்டாமோ?
எரிகின்ற தேசத்தை
பிரிந்து நீ வந்த போதும்
துடிக்கும் இரத்த உறவல்லோ—அவர்
துயர் கண்டு நீயும்
துடித்தெழ வேண்டாமோ?
ஆதிக்கம் என்பது தமிழனுக்குமில்லை
தமிழனிடமும் இல்லையேன்று
தட்டியிவர் காதில் — நீ
முரசறைய வேண்டாமோ?
விர்தகம் செய்கின்றாய்
வியாபாரமும் செய்கின்றாய்
வினை தீர்க்க ஏன் நீ
விளையாட்டாய் மறந்தாய்
பிழைதனை விட்டதாய்
உனைத் தினம் எதிர்காலம்
பழி யொன்று சொல்ல
விழி தன்னில் பயம் வேண்டாம்
விரைந்து நீ எழுந்திடு
பகைவெல்ல பாசறையில்
தலைவன் படையிருக்கிறது
தடை வெல்ல புகலிடத்தில்
நீ ஏன் மௌனமாயிருக்கிறாய்?
விடுகதையாய் — எம்
விடுதலை போகமால்
விளைநிலத்து முளையென
விருட்சம் பெறட்டும்
விரைவாக எழுந்திடு
விவேகமாய் விரைந்திடு

*- நிதர்சன்*

# காப்பாளர் கண்ணில் தூவிய மண்.......

வார்த்தைகளால் மட்டும் சொல்லி விட முடியாத அழுச் சுகம் அந்த அந்த நாட்களுக்குள் இருந்தது. நாட்பட்டுப் போனாலும் பட்டுப் போகதாக பசுமைகள் அந்த நினைவுகள்.

கடந்த கோலத்தின் தொடர்ச்சியாக.......

இடைவெளி விட்டு வீதி வழியாக நடந்து கொண்டிருந்தோம். எனக்கு இதுதான் முதல் தடவை. முன்பு செய்திருந்த குறும்புகளை விட, இது என்னவோ பெரிய பயத்தை ஏற்படுத்தியிருந்தது. படம் பார்க்க வேண்டும் என்ற ஆசையை விட, மதில் பாயும் அனுபவம் எத்தகையது என்பதைத் தெரிந்து கொள்வதிலேயே எனக்கு அர்வம் அதிகமாக இருந்தது.

படம் ஓடிக்கொண்டிருந்தது. கூட வந்த பலரும் படத்தை ரசித்துக் கொண்டிருந்தனர்.; படம் பார்க்கக் கன்னிப் பயணம் நிகழ்த்திய என்னைப் போன்ற சிலருக்கு உள்ளார ஒரு பயம் இருக்கவே செய்தது.

விடுதியில் படுக்கையில் நான் தேடப்பட்டிருப்பேனோ?.

என் இளவல் என்னைத் தேடியிருப்பானோ?

இப்படியான வினாக்கள் அடிக்கடி எழுந்து கொண்டேயிருந்தன.

படம் முடிவடைந்தது. இருள் சூழ்ந்த இடத்தில் அனைவரும் ஒன்று சேர்ந்தோம். அணித் தலைவர் எண்ணப்படி. கூட்டம் குறைந்த பின் வீதியில் இறங்கினோம்.

என் படபடப்பு அதிகமாகிக்கொண்டேயிருந்தது. படுக்கையருகே செல்கின்றவரை நிச்சயமாய் இது இருக்கத்தான் போகின்றது.

இப் பதட்டம் காரணமாக இனி இப்படிப் படம் பார்க்கக் கூடாது என்ற எண்ணமும் எழுந்தது.

கல்லூரியின் மதிலை நெருங்கிவிட்டிருந்தோம். நாங்கள் பாய்ந்து வந்த அதே மதில்.

எம் படப் பயணத்தின் மிக அவதானமான பாகம் இது. அணித்தலைவர் முன்பே எச்சரிக்கை செய்திருந்தார்.

அனுபம் மிக்க ஒருவர் முதலில் மதில் மேல் தாவினார். உள்ளே சென்று நிலைமையை அவதானித்து எழுப்பும் ஒலிக்குப் பின்தான் ஏனையோர் பாய வேண்டும்.

மதிலில் தாவியவர் முகத்தில் சட்டெனப் பாய்ந்தது உள்ளே இருந்து எழுந்த டோச் லைட். தொப் என மீண்டும் வீதியில் விழுந்தார் அவர்.

எம்மைப் பிடிப்பதற்காக உள்ளே யாரோ காத்திருக்கின்றார்கள். விபரம் புரிந்த வேளை உடல் எங்கும் நடுங்கியது.

துரிதமாகச் செயற்பட்டார் அணித்தலைவர். அனுபவம் மூவரை அழைத்து காதில் ஏதோ குசுகுசுத்தார். சொல்லும் வேளையில் ஏக காலத்தில் அனைவரும் மதில் பாய வேண்டும். அவரவர் சாரத்தை அவிழ்த்து தலையை மூடிக் கொண்டு மிக வேகமாக படுக்கைக்குச் சென்ற விட வேண்டும். கடும் நித்திரை போல் பாசாங்கு செய்ய வேண்டும்.

இவ்வேளை உள்ளே இருந்து ஒரு குரல் எழுந்தது. யார் அது? உள்ள வாங்கடா. விடுதிக் காப்பாளரின் குரல். எனக்கு சிறுசீர் முட்டியது. அப்போது எம் தைரியத்தையும் அணித்தலைவரையும் தவிர வேறு துணை எமக்கு இல்லை.

தேர்ந்தெடுக்கப்பட்ட மூவரும் சாரத்தை அவிழ்த்து முக்காடு போட்டனர். கண் இமைப் பொழுதில் மதில் கடந்தனர். தடபுட வென ஒலிகள் கேட்டன. டேய் ஆரது..? பிடி பிடி.... டேய் என்னை விடு.. விடடா.... விடுதிக் காப்பாளரின் குரல்..

தொடர்ந்து உள்ளே இருந்து வந்தது எமக்கான சைகை.

- இருவத்திமூண்டு -

எல்லாரும் பாயுங்கோ.. அணித்லைவர் பாய்ந்தார். நாமும் பாய்ந்தோம். எல்லாரும் சாரத்தால முகத்தை மூடிக் கொண்டு ஒடுங்கோ..

நாம் ஓடத் தொடங்கினோாம்.

டேய்.. ஆரடா நீங்கள்? நில்லுங்கடா... ஐயோ... கடவுளே..... சிறிய பற்றையின் பக்கமாக விடுதிக்காப்பாளரின் குரல் கேட்டது.

நாம் காற்றாய்க் கடுகினோம். இறுதியாய் ஒடி வந்தார் அணித் தலைவர்.

முன்னால் பாய்ந்த மூவரும் முக்காடு போட்டபடி விடுதிக் காப்பாளரை வீழ்த்தி அவர் டோச் லைட்டை பறித்திருக்க வேண்டும்.

இவையனைத்தும் சில கணப்பொழுதுக்குள் நடந்தேறியிருந்தன.

15 நிமிடங்கள் கழித்து விடுதியின் அத்தனை விளக்குகளும் ஏற்றப்பட்டன. எல்லோரும் எழுப்பப்பட்டனர். ஏறக்குறைய 400 மாணவர்கள். அத்தனை பேரும் கடும் உறக்கத்தில் இருந்து எழுந்தனர்.

ஆரடா படத்துக்குப் போயிட்டு வந்தது? கோபத்தோடு நொண்டியபடி வந்தார் விடுதிக் காப்பாளர்.

பலரும் கொட்டாவி விட்டனர்; படத்திற்குப் போனவர்கள் ஆழமாய்க் கொட்டாவி விட்டனர்.

யாரையும் அவரால் கண்டு கொள்ள முடியவில்லை.

மறுநாள் இக் கதை பெரிதாகப் பேசப்பட்டது. எனினும் யாரும் பிடிபடவில்லை என்பதுதான் ஆச்சரியமான செய்தி. சூழலை புரிந்து கொண்டு மிகத் துரிதமாகச் செயற்பட்ட அணித்தலைவர் அன்று முதல் எம் பெரு மதிப்புக்கு உரியவராக மாறியிருந்தார்.

இதற்குப் பின்னால் எவ்வித பதட்டமும் இன்றி மதில் பாய்ந்து ஏகப்பட்ட படங்கள் பார்த்திருக்கின்றேன். இக் கலையைக் கற்றுக் கொடுப்பவனாகவும் இருந்திருக்கின்றேன்.

- கரிச்சான் குஞ்சன்.

### கௌபோய் கந்தசாமியின்

# ரெயின்போ கேக்கும் நாய்ப் பார்வையும்

தெரிந்தவர் ஒருவர் வீட்டில் நடந்த சம்பவம் இது. அவரது ஐந்து வயது மகனுக்கு பிறந்த நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. பிறந்த நாள் என்றால் சிறு பிள்ளைகளைப் பற்றித் தெரியும் தானே.

பலவித கற்பனைகளிலும் ஓயாத நச்சரிப்பிலும் தாய் தந்தையை அரித் தெடுத்து விடுவார்கள். ஸ்பைடர்மான், பாட் மான் டிசைன் போட்ட உடுப்புகளிலிருந்து வின்னி த பூ, ரெயின்போ கேக் வரை அவர்களது கற்பனை விரிந்து செல்லும். எதைத் தெரிவு செய்வதென்பதில் இலகுவில் திருப்திப் பட்டு விட மாட்டார்கள்.

அப்படித்தான் அவர் வீட்டிலும் நடந்தது. கண்கள் கனவுகளில் விரிந்திருக்க கைகளை ஆட்டி ஆட்டி மகன் கதை சொல்லிக் கொண்டிருந்தான். தனது பிறந்த நாளின் நிகழ்வுகள் எப்படியிருக்க வேண்டும் என்ற அவன் கனவின் கதையை சொல்லிக் கொண்டிருந்தான். அவரும் உம் கொட்டியபடி தனது அலுவல்களைப் பார்த்தபடி கேட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது தான் அவன் சொன்னான். தனக்கு இந்த முறை ரெயின்போ கேக் வேண்டுமென்று. அவரும் மகனின் கனவுகளில் லயித்திருந்தாலும் மகனுடன் விளையாடும் எண்ணம் வந்தது.

அதுக்கென்ன அப்பா பிரெட்டுகளை அடுக்கி வைத்து மேலால் ரெயின்போ மாதிரி கலர் எல்லாம் அடித்து தருவேன் என்று விளையாட்டாகச் சொன்னார். மகனுக்கு வந்ததே கோபம்.

ஆங்கிலத்திலேயே படித்துக் கொண்டி ருந்தாலும் அப்பாவிற்கு தனது கோபம் உறைக்க வேண்டுமென்று தட்டித் தட்டிக் கதைக்கும் தமிழ் வார்த்தைகளை ஒன்று சேர்த்தான். தனது கனவைக் கலைத்த தந்தை மேல் அடங்காத கோபம். பிரெட்டை அடுக்கியும் யாரும் கேக் செய்வார்களா? அப்பாவின் முட்டாள் தனம் கோபத்தை கிளறியிருக்க வேண்டும்.

மகன் ஒரு கோபப் பார்வை பார்த்து விட்டுத் தந்தையிடம் சொன்னான். 'அப்பா உங்களை ஆக்களெல்லாம் நாய் மாதிரித் தான் பார்ப்பார்கள்.'

என்னிடம் கதையைச் சொல்லி விட்டு அவர்கள் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தார்கள். அசட்டு அப்பாவை நன்றாக உறைப்பதற்கு கேள்வி கேட்ட திருப்தி ஐந்து வயது மகனுக்கு.

அவர்கள் சிரித்துக் கொண்டிருக்க எனக்குள் இன்னுமொரு கேள்வி ஓடிக் கொண்டி ருந்தது.

ஒரு காரியத்தையும் சரியாகச் செய்யாத சரியாகப் புரிந்து கொள்ளாத (மகனின் பார்வையில்) இந்த அப்பா இன்னுமொரு முறை இதே ஏச்சை மகனிடம் இருந்து வாங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை..

இவரைப் போல பல புலம் பெயர் தேசங் களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இன்றைய அப்பாக்கள் தங்கள் பிள்ளைகளிடம் இதே ஏச்சை வாங்கத்தான் போகின்றார்கள்.

அழகான ரெயின்போ கேக் போன்ற ஈழத்தை அமைக்கும் முயற்சியில் தங்கள் பங்களிப்பை சரியாக அளிக்காது தாம் வாழ்ந்து கொண்டிருக்கும் நாடுகளில் எல்லாம் தமிழ்த் தேசியத்தின் போராட்டத் திற்கு வரும் தடைகளைப் பார்த்தும் ஒன்றும் செய்யாது கைகளை பிசைந்து கொண்டி ருக்கும் அப்பாவி அப்பாக்கள் பிள்ளைகளி டம் ஏச்சு வாங்கத் தான் போகின்றார்கள்.

நாங்கள் என்ன தான் கனடியனாக பிரித்தானியனாக ஐரோப்பியனாக என்று சொல்லிக் கொண்டு திரிந்தாலும் எங்கள் தோலின் நிறம் கறுப்பாக இருக்கும் வரை வெள்ளையருக்கு நாங்கள் ஈழத் தமிழர்களே.

1858 இல் முதல் முதல் கனடாவிற்கு வரத் தொடங்கி இன்று கனடாவில் பெரும் இனக் குழுமமாக இருக்கும் சீனர்கள் இன்றும் 'yellow peril' தான்.

இவர்களின் முன்னால் 300000 இற்கும் குறைவான ஈழத் தமிழர்கள் எம்மாத்திரம். இப்போதிருக்கும் எங்களிற்கு சொந்த நாடு மட்டும் தான் இல்லை. ஆனால் எமது சந்ததிக்கு சொந்த நாடு மட்டுமில்லாது சொந்த மொழி கலாச்சாரம் பண்பாடு என்பனவும் இல்லாது போகக் கூடும்.

ஆமாம், தமிழ் ஈழம் என்பது அழகான ரெயின்போ கேக்.

இவை எதனையும் பாதுகாத்துக் கொடுக்க முடியாத அசட்டு அப்பாக்களை பிள்ளைகள் வேறு எவ்வாறு தான் ஏசிவார்கள். யோசித்து வைத்திருங்கள். அடுத்த முறை சந்திப்போம்.

### கல்லூரி கீதை

எதை நீ படித்தாய்
அது மறந்து போவதற்கு

எதை நீ புரிந்து கொண்டாய்
பரீட்சையில் கேள்விகள் புரிவதற்கு

என்று நீ ஒழுங்காக கல்லூரி வந்தாய்
வரவு அறிக்கை சரியாக இருப்பதற்கு

எந்த ஃபிகரை நீ காதலித்தாயோ
அவளிடமே நீ செருப்படி வாங்குவாய்

எந்த ஃபிகரை நீ மகா மட்டமாக திட்டுவாயோ
அவளிடமிருந்தே காதல் கடிதம் பெறுவாய்

எந்த ஃபிகர் இன்று உன்னுடையதாயிருக்கிறதோ
அது நாளை மற்றொருவனுடையதாகி விடும்
மற்றொரு நாள் அது வேறொருவனுடையதாகி விடும்

இதுவே கல்லூரி நியதியும்.
ஃபிகர்களின் குணாம்சமுமாகும்.

— யோசிப்பவர்

## கானக்குயில் 2006

லண்டனில் 14வது ஆண்டாக வெற்றிகரமாக மேடையேறுகிறது

ஸ்ரீமதி யோகா தில்லைநாதனின் "கானக்குயில் 2006" ஐங்கரன் International ஆதரவில், July மாதம் 1ம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு

Logan Hall, University of London, Russell Square, 20 Bedford way, London WC1 இடம்பெறுகின்றது.

இசைவல்லுனர்களடங்கிய லண்டனில் பிரசித்தி பெற்ற "சித்திராலயா" இசைக் குழுவினர் பின்னணி இசை வழங்குகிறார்கள்.

உங்கள் வாக்குகளால் 2006 ஆண்டிற்குரிய கானக்குயில்களை தெரிவுசெய்ய July 1ம் திகதி சனி மாலை 6 மணிக்கு முன்னதாக வாருங்கள்.

டிக்கெற் £10, £15 (12 வயதிற்குட்பட்டவர்களுக்கு) £5

டிக்கெற் கிடைக்குமிடங்கள்
ஸ்ரீமதி யோகா தில்லைநாதன்
020 8390 5823/07956 133 528
Eastham - Rasam Gayathri Silks 020 8552 6060
Tooting - Ambal Jewellers 020 8672 9955
Wembley - Tharany Jewellers 020 8902 6777
Wembley - All in one Super Market
537, High Road Wembley 020 8902 4590

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 8286 9327
Fax: 020 8640 6972

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

email: info@orupaper.com



## மணமகள் தேவை

1. Jaffna Parents looking for their son a Graduate 37 years 5'7"tall, living in London a suitable bride in UK/ Canada/Australia with Permanent resident. *Ref:758*

2.Jaffna Parents living in Canada looking for their son 29 years old,6' tall, a professional, born in Sri Lanka, brought up in Canada, a suitable educated bride willing to live in Canada. *Ref:757*

3.Jaffna born groom 39 years old 5'9" tall, a vegetarian & a Graduate working in UK on Work Permit seeks a suitable bride. *Ref:756*

4.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்போது கிளிநொச்சியில் வசிக்கும் 24 வயது 5'7" உயரமுடைய, உயர்தரம் கல்வி கற்ற மணமகனுக்கு லண்டனில் இருக்கும் சகோதரி ஸ்பொன்சர் செய்யக் கூடிய மணமகளைத் தேடுகிறார். *Ref: 755*

5. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 37 வயது 6' உயரமுடைய UK பிரஜாவுரிமையுள்ள படித்த மணமகனுக்கு படித்த மணமகளை கனடாவில் வசிக்கும் பெற்றோர் தேடுகின்றனர்.*Ref:754*

6. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 43 வயது 5'9" உயரமுள்ள, கனடா பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றார். *Ref:753*

7. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 46 வயது 5'7" உயரமுள்ள, நல்ல தொழில் புரியும் தாரமிழந்த மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். விவாகரத்து செய்தவர்களும் விரும்பத்தக்கது. *Ref:752*

8. Jaffna Parents looking for their son 29 years old 5'10" tall, UK educated, employed in civil service, a suitable bride. *Ref:751*

9. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'10" உயரமுள்ள, லண்டனில் Resident Permit உள்ள மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். *Ref:750*

10. Jaffna Parents living in the UK looking for their UK born son, a Graduate, 34 years old, 5'6" tall, a suitable bride from one of the western countries. *Ref:749*

11. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 53 வயது 5'1" உயரமுள்ள, Physiotherapist ஆக யாழ்ப்பாணத்தில் வேலைசெய்யும் விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு கனடாவில் தகுந்த மணப்பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர். பிள்ளைகள் உள்ள விதவைகளும் விண்ணப்பிக்கலாம். *Ref:748*

12. Vadamarachchi Parents looking for their son 35 years 5'6" tall self-employed as an estate agent, a PR holder, awaiting citizenship, a suitable bride. Ref:747

13. சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'11" உயரமுள்ள லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு லண்டனில் நிரந்தர வதிவிடவுரிமையுள்ள மணப்பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 746*

14. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'11" உயரமுள்ள UK இல் PR உடன் வசிக்கும் மணமகனுக்கு கனடாவில் வசிக்கும் உறவினர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். *Ref: 745*

15.முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட 27 வயது 5'2" உயரமுள்ள, பிரான்சில் வதிவிடவுரிமையுடன் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை உறவினர் கனடாவில் தேடுகின்றனர். *Ref:744*

16. மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட 22 வயது 5'6" உயரமுள்ள, கனடாவில் ஸ்பொன்சர் செய்யக்கூடிய மணமகளை கனடாவில் வசிக்கும் உறவினர் தேடுகின்றனர். *Ref: 743*

17. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 6'2" உயரமுடைய, கனேடிய குடியுரிமையுள்ள படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 742*

18. Jaffna Parents living in Canada are looking for a suitable bride (in UK/ Canada) for their son, age 30, height 5'7" working for a business firm in UK on a work permit. *Ref: 740*

19.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 5'4" உயரமுள்ள, UK பிரஜாவுரிமையுள்ள BSc பட்டதாரி மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை UK யில் தேடுகிறார்கள். *Ref: 739*

20. Sister living in UK, looking for her brother , 34 years, 5'6" height, BEng, qualified working as a teacher a suitable Bride from UK/Canada/ Australia. *Ref.736*

21. தென்மராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'6" உயரமுள்ள, லண்டனில் 5 வருடங்களாக வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகிறார்கள். *Ref:735*

22. Mannar parents seek for their son 28, 5'6", A/L, London AAT qualified, and working at the Off –licence in UK, a sutable bride. *Ref: 734*

23. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'6" உயரமுள்ள, கனேடிய பிரஜாவுரிமையுள்ள பட்டதாரி மகனுக்கு கனடாவில் வசிக்கும் தாயார் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். *Ref: 731*

24. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'11" உயரமுள்ள, கனடாவில் வர்த்தக நிலையம் வைத்திருக்கும் பட்டதாரி மகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். *Ref: 733*

25. Jaffna parents looking for their son, 29 years old, 5'6" tall, MSc student, a suitable bride in Europe or Canada. *Ref:728*

## மணமகன் தேவை

1. Parents living in London a looking for their daughter 25 years old 5'4",a Graduate a Carnatic Music learnt, living in Colombo a suitable groom. *Ref:1020*

2. Jaffna Parents looking for their daughter 29 years old 5'2" tall, A/ L educated in Jaffna, learnt Music in Colombo, a suitable groom. *Ref:1019*

3. Aunt living in Canada seeks for her niece, 32 years old 5'5" tall, studied in Colombo, living in Canada a suitable groom. *Ref:1018*

4. தென்மராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 24 வயது 5'3" உயரமுள்ள, A/L படித்த மணமகளுக்கு வெளிநாட்டில் ஸ்பொன்சர் செய்யக் கூடிய மணமகனை கனடாவில் இருக்கும் உறவினர் தேடுகின்றனர். *Ref:1017*

5. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட 35 வயது 5'2" உயரமுள்ள, ஆசிரியராகக் கடமைபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனை உறவினர் தேடுகின்றனர். *Ref:1016*

6. முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5'6" உயரமுள்ள, 3 வருடங்களாக லண்டனில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். *Ref:1015*

7.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 42 வயது 5'4" உயரமுள்ள, வாழ்விழந்த படித்த மணமகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். *Ref: 1014*

8.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 44 வயது 5'7" உயரமுள்ள, Hotel Management படித்த கனடாவில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த வரனை லண்டனில் வசிக்கும் சகோதரன் தேடுகின்றார். *Ref: 1013*

9.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'2" உயரமுள்ள, இலங்கைப் பட்டதாரியும், அமெரிக்காவில் வசிக்கும் மணமகளுக்கு பெற்றோர் தகுந்த வரனை அமெரிக்கா/கனடாவில் தேடுகின்றனர். *Ref: 1012*

10.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 23 வயது 5'5" உயரமுள்ள, தற்போது கொழும்பில் வசிக்கும் பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 1011*

11.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'7" உயரமுள்ள, தற்போது பிரான்சில் வசிக்கும் மணப்பெண்ணுக்கு தகுந்த வரனை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 1010*

12.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'5" உயரமுள்ள, தற்போது பிரான்சில் வசிக்கும் மணப்பெண்ணுக்கு தகுந்த வரனை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 1009*

13. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது 5'1" உயரமுள்ள, தற்போது கனடாவில் வசிக்கும் Finance Accountant ஆக வேலை செய்யும் மணமகளுக்கு ஜேர்மனியில் வசிக்கும் சகோதரி தகுந்த மணமகனைத் தேடுகின்றார். *Ref: 1008*

14. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 22 வயது 5'4" உயரமுள்ள, கொழும்பில் AAT படித்துக் கொண்டு தனியார் நிறுவனமொன்றில் வேலை செய்யும் மணமகளுக்கு லண்டனில் வதிவிடவுரிமையுள்ள மணமகனை உறவினர் தேடுகின்றனர். *Ref: 1007*

15. முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட 20 வயது 5'2" உயரமுள்ள, A/L படித்த மணமகளுக்கு லண்டனில் வசிக்கும் தகப்பன் விசா உள்ள மணமகனைத் தேடுகின்றார். *Ref: 1006*

16. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'2" உயரமுள்ள, யாழ்ப்பாணத்தில் வேலை செய்யும் மணமகளுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். *Ref: 1005*

17. கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 27 வயது 5'6" உயரமுள்ள, கொழும்பில் வேலை செய்யும் படித்த மணமகளுக்கு நிரந்தர வதிவிடவுரிமையுள்ள மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரி தேடுகின்றார்.*Ref: 1004*

18. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'2" உயரமுள்ள, தற்போது இந்தியாவில் வசிக்கும் படித்த மணமகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். *Ref: 1003*

19. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5'2" உயரமுள்ள, தற்போது இந்தியாவில் வசிக்கும் படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 1002*

20. Jaffna born 35 years old 5'6" tall, a graduate working in Toronto looking for a suitable groom. contact sister in Canada.. *Ref: 1001*

21. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 21 வயது 5'3" உயரமுள்ள, தற்போது கொழும்பில் வசிக்கும் சகோதரிக்கு கனடாவில் இருக்கும் சகோதரி தகுந்த மணமகனைத் தேடுகின்றார். *Ref: 1000*

22. Sisters, living in London looking for a suitable groom for their sister 42 years old, 5'3" tall, Jaffna Uni Graduate, in UK for the last 5 years. *Ref: 899*

23. Jaffna parents living in colombo looking for a suitable groom for their daughter 29 years 5' tall, ACS qualified worked in UK for 2 years, now in Colombo. *Ref:898*

24. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மலேசியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5' உயரமுள்ள கனேடிய பிரஜாவுரிமையுள்ள ஆசிரியை ஆக வேலை செய்யும் B.Sc, B.T பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். *Ref:897*

25. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5'2" உயரமுள்ள, கொழும்பில் Accountant ஆக பணிபுரியும் பட்டதாரி மணமகளுக்கு கனடா அல்லது UK இல் தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். *Ref:895*

26. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'2" உயரமுள்ள, வவுனியாவில் வேலை செய்யும் பட்டதாரி மணமகளுக்கு இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள். *Ref:894*

27. Jaffna parents living in Canada are looking for a suitable professionally qualified bridegroom for their daughter, height 5'4", B.com Graduate, Major in M.I.S (Management Informaiton Systems). *Ref:893*

28. Jaffna Parents living in Canada looking for their son, 30 years, height 5'4", USA educated, professionally qualified, a suitable bride. Ref: 892

29. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 43 வயது 5'3" உயரமுள்ள, கனேடிய பிரஜாவுரிமையுள்ள கனேடிய அரசாங்கத்தில் வேலை செய்யும் மணமகளுக்கு படித்த மணமகனை கொழும்பிலுள்ள தாயார் தேடுகிறார். லண்டனில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. படித்த தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். *Ref: 891*

30. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'5" உயரமுள்ள, Programme Planning Assistant ஆக யாழ்ப்பாணத்தில் வேலை செய்யும் பட்டதாரி மணமகளுக்கு லண்டனில் இருக்கும் சகோதரி லண்டனில் உள்ள பட்டதாரி மணமகனை தேடுகிறார். *Ref: 890*

31. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'2" உயரமுள்ள, Management பட்டதாரி, யாழ்ப்பாணத்தில் Accountant ஆக வேலை செய்யும் மணமகளுக்கு படித்த, நிரந்தர வதிவிடவுரிமையுடைய மணமகனை UK இல் வசிக்கும் சகோதரி UK/Canada/EU நாடுகளில் தேடுகிறார். *Ref: 889*

32. கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'3" உயரமுள்ள, A/L, Computer உயர்கல்வி கற்ற இலங்கையில் வசிக்கும் மணமகளுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரி தகுந்த மணமகனைத் தேடுகிறார். *Ref: 888*

33. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'2" உயரமுள்ள, வவுனியாவில் வேலை செய்யும் பட்டதாரி மணமகளுக்கு பெற்றோர் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள்.*Ref: 887*

34. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'2" உயரமுள்ள, விவாகரத்துப் பெற்ற யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சகோதரிக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். *Ref: 884*

35. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 37 வயது 5'2" உயரமுள்ள, லண்டனில் 5 வருடங்களாக வசிக்கும் படித்த மகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரன் தேடுகின்றார். *Ref: 885*

36. UK aunts are seeking for their neice age 25 years, 5'3" tall CIMA partly qualified working in the city, looking for a suitable professionally qualified bridgegroom.. *Ref:886*

37. Father seeks for his only daughter 37 yeas old, 5'2" tall, British Citizen holding a senior administrative position in London, a suitable groom. *Ref:877*

38. Jaffna mother looking for a daughter 33 years, 5'2" tall, System Engineer, born & brought up in UK, a suitable groom. *Ref:878*

39. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'4" உயரமுள்ள B.A படித்த கனடா பிரஜாவுரிமையுள்ள மணமகளுக்கு பெற்றோர் தகுந்த வரனைத் தேடுகின்றனர். *Ref:883*

40. Jaffna Parents seek for their Daughter 36 years 5'5" tall U.K educated, M.Sc qualified and well employed, a suitable match. *Ref:871*

41. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசிக்கும் 20 வயது 5'4" உயரமுள்ள B.Sc (Computer Science) படித்த சகோதரிக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரன் EU நாடுகளில் தேடுகின்றார். *Ref:874*

# கவிதை

## வீரமே வியந்து நிற்கும் அதிசயன்

வானோங்கி வளர்ந்த போதி விருட்சம் போல் –
புகழுள்ளவனவன்.
ஈழத்தமிழருக்கு நிழல் தரும் தமிழீழத் –
தலைவனவன்.
விலைமதிக்க முடியாத தமிழ்வீரப் –
பொக்கிசமவன்.
எத்தனை வல்லரசுகள் எதிர்த்தாலும் –
தலைவணங்கா தமிழ் வீரச் செம்மலவன்.
அனாதைச் செல்வங்களுக்கு அன்பான –
தாயவன்.
மாவீரர் பெற்றோர்க்கு ஆதரவளிக்கும் –
அன்பான தந்தையவன்.
போராடும் வீரருக்கு பொறுப்பான –
தோழனவன்.
போராளிகளின் பெரு வெற்றிக்கு –
உரமேற்றும் போராசிரியனவன்.
துணிவென்ற சொல்லுக்கு உரித்தான –
வீரனவன்.
அன்னியன் யாரிடமும் அடிபணியா –
உயிருள்ள அடங்காப்பற்றவன்.
நீதி என்ற சொல்லுக்கு நெறிதவறா –
நீதவானவன்.
மண்மீட்பில் மரணித்த மாவீரர்க்கு –
உயர்வான மதிப்பளிக்கும் உத்தமனவன்.
ஒழிந்துபோன தமிழுக்கு ஒளியூட்டிய –
சூரியனவன்.
இராணுவத் தலைமைகளின் ஆய்வுக்கே –
அடங்காத புதிரவன்.
சாதனை சாதித்தால் தமிழன் சந்தித்துப் –
பாராட்டும் பண்பானவன்.
வருங்காலச் சந்ததிக்கு வழிதேடும் –
வள்ளலவன்.

- *கணேஷ்*

## இவன்தான் புலி...!

குழலூத ஆடுகின்ற பாம்புமல்லன்
கொக்கரித்து முட்டையிடும் கோழியல்லன்
விழலாகப் போகுமந்த நீருமல்லன்
விட்டுவிட்டு திரும்பிவரும் கோழையல்லன்
பழகாமல் புரிந்துகொள்ள சாதும் அல்லன்
பார்த்தவனை மறந்துவிட பேதை அல்லன்
தளராமல் இத்தனையும் ஏனோ சொன்னேன்
எம்மறவர் செயலனைத்தும் இதுபோற்தானேஞ்

கும்மிருட்டில் இருந்தாலும் குறிகள் தப்பா
கூலிகளின் பாசறைகள் மதியில் தப்பா
தம்மடியின் வெடிமருந்தும் தவறிப் போகா
தாம் நடத்தும் காரியங்கள் பிழையில் போகா
பம்பருகள் பீரங்கி திரும்பிப்போகா
பார்த்து விட்டால் செயல் வடிவம் முடங்கிப் போகா
தெம்புடனே தெருவேட்டை விலகிப் போகா
தெரிந்திருந்தும் தேடுகுதே பனிப்போர் ஒன்றுஞ்

படுத்து புலி தூங்குதல்போல் பாங்கும் காட்ட
பார்த்திருந்த சிங்களங்கள் பயமே எண்ண
விடுத்த கதை புலிகாதில் நன்றே வீழ
விக்கினமாய் தலைதிருப்பி சற்றே தூங்க
அடுத்திருந்து வாழுமந்த எச்சில் சேனை
அழிப்பதற்காய் அவரிடத்தை நாடியோட
படுத்த புலி முடித்தகதை சற்றே நாழி
பற்றைகளில் தூங்குகிதே முண்டம் கொஞ்சம்...

- *த.சு.மணியம்*

## பயம்



முதியோர் இல்லங்களின்
வாசல்தாண்டி
பயணப்படும் பொழுதெல்லாம் ...

அனிச்சை செயலாய்
மகனின் கைகளை ...
அழுத்திப்பிடிக்கிறது கரங்கள்!

- *ரசிகவ் ஞானியார்*

## old is gold

**மக்கட் பேற்றின் சிறப்பைக் கூறும் சிறந்த செய்யுள்**

படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப் பெருஞ் செல்வர் ஆயினும், இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி,
இட்டும் தொட்டும், கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே.

*– புறநானூறு (கி.மு.500 – கி.பி.200 வரை)*

பலவற்றைப் படைத்துப் பலரோடும் அமர்ந்து உண்ணும் 'உடைமை' எனப்படும் பெருஞ்செல்வம் பெற்றவராயினும் என்ன? மெல்ல மெல்லக் குறுகுறு நடந்து சென்று தம் சிறிய கையை நீட்டி உண்ணும் பாத்திரத்தினுள் நெய்யுடைச் சோற்றிலே இட்டும், அக்கையாலேயே பெற்றோரைக் கட்டிக் கொண்டும், வாயாற் கவ்வியும், கைகளால் துழாவியும் தம் மேலெல்லாம் சிதறியும் அக்குறும்புகளால் உணவு வீணாகிறதே என்ற நினைவை மயக்கிப் பெற்றோரை இன்பத்தால் மகிழச்செய்யும் மக்கள் இல்லாதவர்க்குத் தம் வாழ்நாளெல்லாம் பயனற்ற நாட்களே.

கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சும்
சொல்லால் உருக்கி அழுது ஓடித் தொடர்ந்துபற்றி
மல்லார் புயத்தில் விளையாடும் மகிழ்ச்சி மைந்தா
இல்லார்க்கு மனை வாழ்வில் இனிமை என்னாம்

*– வில்லிபுத்தூராரின் மகாபாரதம்*

அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

*– திருக்குறள்*

*அனுப்பியவர். நா.தூரி*

## கருவறை காதல்

கடலும் கண்ணீரும் தாண்டி –
என்னை
நினைத்துக்கொண்டிருப்பவளே !
கருவறை முதலாய் என்னை
காதலிப்பவளே... அம்மா !

நான்
கருப்பையில் விக்கியபோதே நீ
தண்ணீர் குடித்தாய் !
என்மீது
ஈக்கள் மொய்த்தால் கூட நீ
கண்ணீர் வடித்தாய் !

என் கைகளில் குத்திய
ஊசியின் வலியை
மூளை உணர்த்தும் !

என் வயிற்றில் வருகின்ற
பசியின் நிலையை
நீயே உணர்வாய் தாயே !
என் இரண்டாம் மூளையே !

நான்
பசியோடு படுத்தால்
உணவுக்குழாயுக்குள் வந்து
ஊட்டி விடுவாய் !

எனக்கு
காய்ச்சல் என்றால்
நீயுமல்லவா
கஞ்சி குடிப்பாய் !

என்னை
தடவிக் கொடுக்கின்ற
எல்லாகைகளுமே
விரல்நுனியில் ...
விஷத்தை வைத்திருக்கிறது !

உன்
விரல்கள் மட்டும்தானம்மா –
இந்தப் பாலையில்
என் பாதம்
பொசுங்கு முன்னே...
தோலாய் வந்து நிற்கிறது !

உன் சமையலை
குறைகூறியே சாப்பிட்ட நான்
இங்கே
குறைகளை மட்டுதானம்மா
சாப்பிடுகிறேன்
தயவுசெய்து
நீ அனுப்புகின்ற
கடிதத்தில் ஒரே ஒரு
சோற்று பருக்கையாவது ஒட்டு !

நானும் ஒரு
அன்னப்பறவைதானம்மா
ஆம்
நீ அனுப்புகின்ற
இனிப்பு பொட்டலங்களிலிருந்து
– உன்
இதயத்தை பிரித்தெடுக்கிறேன் !

உன்
கருப்பை மூலம் எனக்கு
இரப்பை கொடுத்தவளே !

உன் மீது
வெறுப்பை கொடுக்குமுன் –
இறைவன் எனக்கு
இறப்பை கொடுக்கட்டும் !

ஆம்
நான் இறைவனிடம்
பிரார்த்திப்பதும் அதுதான்.

நான் கேட்டு
நீ மறுத்த நாட்களை
நான் சந்தித்ததேயில்லை...

அதுபோல
நீ கேட்டு
நான் மறுக்கும் நாளொன்றில்
என் பெயர் பிணம் !

- *ரசிகவ் கே.ஞானியார்*

(மே –14க்குள் அன்னையர் தினத்திற்கான கவிதை)

**Free Computer Training**
[Evening & Weekend Classes]
Word, Excel, Access, Power point, Outlook, Internet, Computer fundamentals, CV writing

**இலவச கணிணி பயிற்சி நெறிகள்**

**Courses**

**Microsoft office 2003 Applications**
Word, Excel, Access, Powerpoint, Internet & Email
(ECDL Qualification)

**Computer installation & maintenance**
(Installing, configuring, upgrading, troubleshooting and repairing computer hardware and operating system) (A+ Service Technician)

**General Network Training**
Home, Office, Wireless Networking (CompTIA Network + Qualification)

**Advance Network Training**
Implement, Manage, and Troubleshooting Windows 2000 Server based corporate network (Microsoft Certified System Administrator - MCSA Qualification)

**Programming Languages**
Visual C++, ASP.Net, ADO.Net, Vb.Net, C#, Visual Basic 6.0, php

**Website design**
Dreamweaver, Flash, Fireworks

**Graphic Design**
Photoshop, Illustrator, InDesign, Quark Xpress

**Video Production**
Introduction to film & video production, script writing, filming, lighting, editing, sound - both theory & practical

**020 8715 4775**
science-centre.com

SCIENCE CENTRE
45 B Crusoe Road, Mitcham CR4 3LJ

# என் ஞாபகப் பதிவிலிருந்து...

**சுதந்திரா**
*( ஒரு பேப்பருக்காக )*

1986 இறுதியாண்டுப் பரீட்சைகள் முடிந்து புதிய வகுப்புக்கள் போகும் கனவோடு வீடு சென்றோம். ஆனால் புதிய ஆண்டில் நமது பாடசாலையின் நிழலைக் கூடக் காண முடியாது ஒரு இரவோடு இரவாக பலாலியிலிருந்த ராணுவப் பேய்களின் ஒருபகுதி எங்கள் கல்விக் கூடத்தை ஆக்கிர மித்துவிட்டது.

அந்தவொரு இரவு அதிர்ந்த வேட்டுக்கள் , ஆட்களைத் தின்ற எறிகணைகள் எல்லாமே அடுத்தநாள் சமாதிகோவிலடி, குரும்பசிட்டி, கட்டுவன் பகுதிகளையும் இராணுவம் ஆக்கிர மித்துக் கொள்ள எங்கள் ஊரில் வடக்குப் பகுதியும் வெறிச்சோடியது.

புதுமைகளையெல்லாம் அள்ளித்தந்ததாகச் சொல்லப்படும்சிவகாமியம்மனும், வயிரவரும், நாகபூசணியம்மனும் தனித்து நிற்க நாங்கள் பிரிந்து தூரமாகிப் போனோம்.

அன்று காலையே வசாவிளானிலிருந்து எறிகணைகள் ஏவப்பட்டுக் கொண்டிருந்தது. அம்மா கடையைத் திறந்தபடியேயிருந்தா. நாங்கள் தட்டுக்குக் கீழ் குந்தியிருந்தோம்.

எறிகணை ஏவும் சத்தம் 'சக்' என முன்னம் அடுத்த சத்தம் எந்த உயிரையாவது அல்லது ஏதாவது ஒரு வீட்டில் அல்லது எங்காவது ஒரு நிலத்தில் வீழ்ந்து வெடிக்கும்.

முத்தர்வளவு, காளிகோவிலடியெல்லாம் எறிகணைகள் விழுவதாக அந்தப்பக்கத்து மக்கள் தயிலங்கடவைக்கும், கொலனி, சுன்னாகம், இணுவில், உடுவில் என ஓடிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு எறிகணை யின் சத்தமும் எம் இதயத்தில் விழுவது போலான தவிப்பும் அச்சமும்.....காலை சாப்பிட்ட பாணைத் தவிர வேறு எதுவும் இல்லை.

மதியம் தாண்டி மூன்றுமணி 45 நிமிடம். கொஞ்சம் சத்தங்கள் ஓய்வு காணத் தொடங்கியது. வியர்வையில் குளித்து பயத்தில் பிதுங்கிய விழிகளும் கொஞ்சம் சிரிக்க வீதி ஆட்களால் ஆரவாரித்துக் கொண்டிருந்தது.

இளையதம்பியும், இளையதம்பியின்ரை மூத்தபெட்டையும் செல் விழுந்து செத்துப் போட்டுதுகளாம்.....!

அந்தச் செய்தி என் செவிகளிலும் வந்து விழுந்தது. புன்னாலைக் கட்டுவன் நாச்சிமார் கோவிலடிக்குச் சற்றுத்தள்ளியிருக்கும் அந்த ஒழுங்கையும் பதுமநிதியும் அவள் அக்காவும் என் கண்ணில் வந்து நின்றார்கள். என்தோழி பதுமநிதியின் வீட்டிலும் இடிவிழுந்து அவள் அக்காவும், அப்பாவும் செல்லடியில் செத்துப்போனார்கள்.

பதுமநிதியும் அவள் குடும்பமும் இந்நேரம் செத்தவீடு கொண்டாடிக் கொண்டிருக்கும்.

அந்தச் சாவுச் செய்தியிலிருந்து மீண்டெள முன்னம் அடுத்தொரு துயர் எங்களைக் காவு கொண்டது. அதுவொரு மதியம் வானவெளியை உலங்கு வானூர்தியொன்று உழுது கொண்டி ருந்தது. அழகிய நீலவானம் அந்த வானூர்தியின் இரைச்சலால் அமைதியிழந்து கொண்டிருந்தது. வானையுழுத உலங்கு வானூர்தி தான் சுமந்து வந்த துப்பாக்கிகளால் வானைத்துளையிட்டுக் கொண்டிருந்தது.

இடையிடையே டொம்.....டொம்....என்ற பெருவெடியோசைச் சத்தமும் கேட்டுக் கொண்டிருந்தது. வழமை போல் அம்மா எங்களை தட்டுக்குக் கீழ் இருத்திவிட்டா.

தயிலங்கடவைப் பக்கமாக உலங்கு வானூர்தி பதிந்து வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருந்தது. வானூர்தி தயிலங்கடவைத் தோட்ட வெளியில் இறங்கிறதோவென்று கூட எண்ணத் தோன்றயது. அந்தளவுக்கு உலங்கு வானூர்தியின் இரைச்சல் கேட்டுக் கொண்டி ருந்தது. கடவுளே.....எங்களைக் காப்பாற்று.... கடவுளே....கேணியடிவயிரவா.....எங்களைக் காப்பாற்று.....

உதடுகளிலிருந்து எழுந்த அந்த வேண்டுதல் பொய்க்காது உயிர்தப்ப வேண்டுமென்ற அந்த நேரத்து அந்தரிப்பு எந்தக்கணங்களாலும் உணரப்படாத தவிப்பு அது.

வான் அமைதியையும் குலைத்து எங்கள் இதயங்களையும் கலங்கவைத்த உலங்கு வானூர்தி பலாலி நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தது. வெறிச்சுக் கிடந்த வீதி உயிர்த்துக் கொண்டது. தயிலங்கடவை நோக்கி ஆட்கள் ஆரவாரித்து ஓடுவது தெரிந்தது. கடைக்கு வந்த முத்தனின் மனைவி சொன்னாள். மனோன்மணியும் பிள்ளையளும் கெலிகுண்டு போட்டுச் செத்துப் போச்சுதாம். ஏன்.....? என்னண்டு.....? கேட்ட அம்மாவுக்கு அவள் சொன்னாள்.

தோட்ட வேலைக்குப் போன மனோன் மத்தியானம் பிள்ளையளுக்குச் சாப்பாடு குடுக்க வந்து சமைச்சுக் கொண்டிருந்ததாம் இளையபொடியன் கெலியைக் கண்டவுடனும் உலக்கையைத் தூக்கிக் காட்டினவனாம். அதைக்கண்ட கெலிக்காறன் சுத்தியடிச்சுச் சுட்டுக்குண்டு போட்டிட்டான். தனக்குத் தெரிந்த தகவலை அவள் சொன்னாள்.

மனோன்....! அந்தப்பெயரின் பின்னாலும் அந்தப்பெயருக்குரிய மனோனன்ரியின் இதய ஆழத்தின் கீழ் உறைந்திருக்கும் துயரும் வலியும் அழுத விழியோடு துயர்களையும் துணிந்து சுமந்து தன் பிள்ளைகளையும் இயலாத கணவனையும் தன்தோழிலேற்றி வாழ்ந்த மனோன் என்ற அந்தப் பெண்ணின் வாழ்வு ஈழத்துப் பெண்கள் பலரது வாழ்விலிருந்து ஒருதுளிதான். ஆனால் அந்த வாழ்வுடன் போராடிய மனோனன்ரியின் வேகமும் சுறுசுறுப்பும் என்னையே ஆச்சரியப் பட வைத்துள்ளது.

மனோனன்ரியின் கணவர் பரஞ்சோதி. குடிக்கே அடிமையானவர். அந்தக் குடியே அந்தப் பரஞ்சோதிமாமாவின் ஈரலைத் தின்று வயிறும் வீங்கி நோயாளியாகி மனோனன்ரிக்குச் சுமையைக் கொடுத்து இயந்திரமாய் மனோனன்ரியின் சில மணித்தி யால ஓய்வையும் வாங்கி விட்டது. மனோனன்ரியின் மூத்தவள் நாகேஸ்வரி என் வயது. என்னுடன்தான் குப்பிளான் விக்னேஸ் வராவில் படிக்கிறாள். அம்மாவிடம் கடனுக்குச் சாமான் வாங்கும் மனோனன்ரியில் அம்மாவுக்கு நல்ல விருப்பம்.

கடன் வாங்கினாலும் சொன்ன திகதிக்குத் தந்து விடும் நாவு மனோனன்ரியினது. சொல்லில் நாணயம் செயலில் துணிவு என எல்லாம் சேர்ந்த மனோனன்ரியின் குடும்பம் சிதைக்கப்பட்டு மனோனன்ரியும் அவரது இளைய மகனும் செத்துவிட்டார்கள்.

ஐயோ என்ர பிள்ளையள்....என்ர பிள்ளயளைக் காப்பாற்றுங்கோ.....! தன் காயத்தின் வலியையும் மறந்து தன் பிள்ளைகளையே காக்க நினைத்த அந்தத் தாய்.....ஊர் அவர்களைத் தெல்லிப்பழை மருத்துவமனைக்குக் கொண்டு போன வழியில்.....


மனோனன்ரியின் கடைசி மகன் கண்களை மூடி இவ்வுலகிலிருந்து நிரந்தரமாய் பிரிந்து.....

மனோனன்ரியும் மருத்துவமனையில் தன்னுயிர்த் துளியை விடுவித்து விழிமூட.., ஒருவீட்டில் இருசாவு....மகள் நாகேஸ்வரி தன் காலொன்றை இழந்து..... மருத்துவமனையில்......

உறவுகள் எனச்சொல்ல எத்தனையோ பேர் இருந்தும் மனோனன்ரியும் அவரது கடைசி மகனும் வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டு கிரியைகள் செய்யப்படாது நேரே கொலனிச் சுடலையில் தீயோடு எரிந்து சாம்பராகி..... அம்மாவை இழந்து நாகேஸ்வரியும் அவள் தம்பியும்.....நாகேஸ்வரியின் கை ஊன்றுதடியுடன்.....


# MARKANDAN & CO
## SOLICITORS & ESTATE AGENTS

We have moved... to
**845 Romford Road**




குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்

விவாக விண்ணப்பங்கள்

அகதி விண்ணப்பங்கள்

14, 10 அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணப்பங்கள்

பிரித்தானிய பிரஜாவுரிமை

வீதிப் போக்குவரத்து சம்பந்தமான வழக்குகள்

We also Specialise in....

- ஒப்பந்த தகராறுகள்
- நுகர்வோர் பிரச்சினைகள்
- மரண சாசனம் உறுதி தயாரித்தல்
- Bankruptcy Problems
- மதுபான அனுமதிகள்
- கட்டட அனுமதிகள்
- Cafe அனுமதிகள்

- House/Flat Purchase or Sale
- Remortgages
- Right to Buy
- Highly skilled migration
- Power of Attorney
- Sponsorship for UK Visas
- Work Permit application
- Civil Litigation

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

No win – No fee

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்

**எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்**

845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: 020 8514 8188 Fax: 020 8514 8303
web: www.markandan-solicitors.com
e-mail: mm@markandan-solicitors.com

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.

ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.

வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

சாத்திரியின்

# குட்டி நாடகம்

## அங்கம் - 3

திரை விலகுகிறது

*[சமையல்காரன் சின்னா சங்கிலிகளால் பிணைத்தபடி மன்னன் முன் நிறுத்தபடுகிறான்]*

டண்கன்: மன்னா இதோ சின்னா ஊர் எல்லையில் சோமபானம் அருந்தி கொண்டிருந்தார் பிளாவும் கையுமாய் பிடித்து வந்தேன்

மன்னன்: ஓ நீர்தான் சமையல் சின்னாவோ

சின்னா: ஆ நீர்தான் மங்களாபுரி மக்கு மன்னரோ?

மன்னன்: உமக்கு கொழுப்பு அதிகம்

சின்னா: என்றுதான் வைத்தியரும் சொன்னார் அதனால் தான் உணவில் நான் எண்ணெய் சேர்ப்பதில்லை

மன்னர்: ஆ நான் யார் தெரியுமா?

சின்னா: எனக்கென்ன கண்பார்வை குறைவா அதுதான் சொன்னேனெ மக்கு மன்னர் என்று

மன்னர்: நக்கல் நளினம் உமக்கு

சின்னா: அது என் கூட பிறந்த குணம் அதை மாற்ற மனைவி சின்னாச்சியால் கூட முடியாது

மன்னர்: என் தோள்கள் துடி துடிக்கிறது கைகள் படபடக்கிறது உம்மை என்ன செய்கிறேன் பாரும்

சின்னா: அது விற்றமின் குறைபாடாக இருக்கும் நல்ல வைத்தியராய் பாரும்

மன்னர்: யாரங்கே இவன் திருடியது மட்டுமல்லாமல் திமிராக வேறு பேசுகிறான் எனவே இவனை தூக்கிலிடுங்கள்

சின்னா: வாழ்வில் புன்னகையை மட்டுமே தெரிந்த எனக்கு பொன்நகை திருடிய குற்றமாயக்கம்மா

மந்திரி: மனைவி பெயர் சின்னாச்சியென்றீர் யாரது யக்கம்மா

சின்னா: பக்கத்து வீட்டுகாரி யோவ் உம்மடை சகா எனக்கு தூக்க எண்டிட்டார் உமக்கு நக்கலா?

மந்திரி: உம்மை தூக்கிலை போட்டாலும் திருந்த மாட்டீர். மன்னா எதை செய்தாலும் நாம் நல்ல நேரம் பாத்து தானே செய்வது வழமை எனவே சின்னாவை தூக்கிலிட சுப நேரம் பார்க்க வேண்டுமே

மன்னர்: அடடா மறந்து விட்டேன் இதுக்குதான் உம்மை மாதிரி அறிவுள்ள மந்திரி அருகில் வேண்டும் என்று சொல்வது எங்கே எமது அரண்மனை சாத்திரியாரை அழைத்து வாருங்கள்

*[சாத்திரியார் கையில் ஒரு வெத்திலை பெட்டி சில ஏடுகள் என்பனவற்றுடன் அரண்மனைக்குள் தாண்டி தாண்டி நுழைகிறார்]*

சாத்திரி: வணக்கம் மன்னா அழைத்தீர்களாமே

மன்னர்: ஆமாம் சாத்திரியாரே ஏன் தாண்டி தாண்டி நடக்கிறீர்கள்

சாத்திரி: ஓ அதுவா வா வாழ்க்கையென்றால் பல துன்பங்கள் வரும் அதையெல்லாம் தாண்டி நடக்கவேண்டும் என்று எனது தந்தை சொன்னார் அதுதான்

மந்திரி: நல்லது இதோ இங்கு நிக்கும் சின்னாவை தூக்கில்போட நீங்கள் ஒரு சுப முகூர்த்தம் குறித்து கொடுங்கள்

சாத்திரி: நல்ல விடயம் (சாத்திரி வெத்திலை பெட்டியை திறந்து ஒரு வெத்திலையை எடுத்து அதில் மையை தடவி உத்து பாக்கிறார்) ஆகா இன்றிரவு சாமம் 12 மணிக்கு ராகுவும் கேதுவும் சந்திக்கின்றனர் நல்ல நேரம் அப்போ தூக்கில் போடலாம்.

> *யாரய்யா அது ராகு கேது அவங்கள் சாமத்திலை சந்திக்கும் வரை நான் நித்திரை முழிக்கேலாது அவன்களை நேரத்திற்கு வரச்சொல்லும்*

மன்னர்: யாரய்யா அது ராகு கேது அவங்கள் சாமத்திலை சந்திக்கும் வரை நான் நித்திரை முழிக்கேலாது அவன்களை நேரத்திற்கு வரச் சொல்லும்

மந்திரி: மன்னா ராகு கேது என்பது கிரகங்கள் அதை தான் நம் மட சாத்திரியார் வெத்திலையிலை பாத்து செல்லுறார்

மன்னன்: ஓ அப்படியா அண்ட வெளியில் உள்ள கிரகங்களை உந்த அழுகின வெத்திலையிலை பாக்கலாமா? அப்ப ஏன் மொக்குதனமா உந்த உலக நாடுகள் கஸ்ர பட்டு காசு செலவழிச்சு விண்வெளிக்கு போகினம்?

சாத்திரி: மன்னா எனது தொழிலை கேவலமாக பேசாதீர்கள். பின்னர் சாமி குத்தம் வந்து உம்மடை கண்ணை அம்மாளாச்சி நோண்டி போடுவா.

மன்னர்: அப்படியா மன்னிக்கவும் *(எழுந்து தோப்புகரணம் போட்டு கடவுளிடம் மன்னிப்பு கேக்கிறார்)*

சாத்திரி: மன்னா உந்த சமையல் சின்னா சரியான கேடி. ஒருமுறை எனக்கு சாம்பாறில் பேதி மருந்து கலந்து கொடுத்தவன். எனவே மன்னித்து விட்டு விடாதீர்கள்.

மன்னர்: ஆகட்டும் யாரங்கே இரவு வரும்வரை சின்னாவை வீதியால் போவோர் வருவோர் எல்லோரும் பாக்கும் படியாக வெளியில் கட்டி வையுங்கள். சின்னா உனது கடைசி ஆசை எதும் இருந்தால் கூறலாம்.

சின்னா: ஆமாம் மன்னா ஒரு அஞ்சு நிமிசம் என்னை அவிட்டுவிடுங்கோ உந்த குறுக்காலை போன சாத்திரியை தொண்டையிலை கடிச்சு கொண்டிட்டு நானும் சாகிறன்.

*(படத்தில் மன்னர் மந்திரி சாத்திரி எல்லோரும் கதிரையின் பின்னால் ஒளிந்து கொள்ள காவலர்கள் சின்னாவை இழுத்து போகிறார்கள்) திரை.....*

தொடரும்..







## இனியேனும் எழுவாயா..?

இன்னமும் குளிர் கால இருள் நினைவி;ல் கிடக்கும்
எனது தமிழினமே..
எழுந்து பார்.. அதோ அங்கே..
ஈழத்தில் எம்மவர்மேல் சிங்களம் ஏவிய வன்முறை..
மாதமொன்றாய், வாரமொன்றாய், இன்று..
தினசரியாகி...வேளைக்கொன்றாகி...
மணிக்கொன்றாயாகும் முன்னாவது
எழுந்து பார்.

ஊருக்கோர் அமைப்பு உருவாக்கியது
உங்கள் சுயநலம் பேணத்தானா..?
உண்மை சொலல் குற்றமென உலக வானொலி முன்
உறுமுகிறது சிங்களப் பேரினவாதம்
ஊரில் எது நடந்தாலும்
எனக்கென்னவென்று எண்ணவும்
கோடைகாலக் குளிர் பியர் குடிக்கவும்
எப்படி வந்தது மனம் உனக்கு..?

அங்கே கொலை தடுக்க
ஐ.நா கண்டிக்க வேண்டும்..
அகில உலகும் முயல வேண்டும்
சிங்களம் சிந்திக்க வேண்டும்
ஆனால் நீ மட்டும் மௌனமாக...
அதே சுயநலப்போர்வைக்குள்
சுருண்டு கொள்வாய்..
அசிங்கத்திலும் அசிங்கமாய்.

போரோய்வுக் காலத்தில் பொங்கியெழுவதும்
புலியென நடிப்பதும்
போர்ப்பறை கேட்டதும் போர்வைக்குள் ஒழிவதும்..
புரிகிறது நீ புலியல்ல தெருநாய்.
தேவையா இந்த தெருநாய் வாழ்வு?
மாற்றமுறு உணர்வுடையோனாய்
மான உணர்வுடையோனாய்
தன்மான உணர்வுடையோனாய்

இதழ்களிலும் இணையத்தளங்களிலும்
இடைவிரிய நீ பார்ப்பவை..
தில், கில்லி, தூள் போல
திரைப்பட விளம்பரமல்ல
உன் உடன் பிறவா உறவுகளும்
ஒன்றுமறியாக் குழந்தைகளும்..
கோரமாய் குருதியில் தோய்ந்து
கொலையுறும் கணப் பதிவுகள்

அவலம் உன்னருகே வரும்வரை உறங்காதே..
அதுவே உன்னையும் கொல்லும்
விலக்கிடு போர்வையை..
விரைந்தெழு பொங்கியெழு
அடுத்தவன் ஆரம்பிக்கட்டும்
அதில் இணைவோமென்றிராமல்..
உலகெங்கும் உள்ளோரை
உசுப்பும் ஒரு உருக்கொள்ளு.

LONDON ACADEMY
DEGREE COURSES THROUGH DISTANCE LEARNING
ANNAMALAI UNIVERSITY, INDIA
OPEN UNIVERSITY SYSTEM

BA, BSC
MA , MSC, MBA
IN ARTS SCIENCE, MATHS, BUSINESS STUDIES
இன்னும் பல வகுப்புகளும் நடைபெறுகின்றன.
LIFE IN UK வகுப்புகளும் (CITIZENSHIP COURSES)
ESOL ENGLISH வகுப்புகளும் நடைபெறுகின்றன


UK NARRIC இன் அங்கீகாரம் பெற்ற பல பட்டப்படிப்புகளை அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் தொலைதூரக் கல்வியாகப் படிப்பதற்கு எம்மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
020 8767 4698
07956 309 426
Fax: 020 8767 8274
e-mail: info@laceuk.com



# அறுவைப் பக்கம்

## கவுண்(டர்)டவுண் 9



அடங்கொக்கமக்கா...வணக்கமுங்க!நேரடியா நிகழ்ச்சிக்குப் போலாண்டா டேய்! கேமரா தலையா! என கவுண்டமணி சவுண்ட்விட, அதிரடி கவுண்ட் டவுன் ஆரம்பமாகிறது.

இந்த வாரம் ஒம்பதாவது இடத்துல இருக்கறது மன்மதன்!

படத்தோட ஹீரோ இருக்கானே, சரியான பம்பைத் தலையன் பிரேமானந்தா. பள்ளிக்கூட வயசுல வாய்லேருந்து பல்பம் எடுத்துத் தர்றேன்னு சொல்லி ஹீரோவை ஏமாத்திடறா ஒரு பொண்ணு. அந்தக் கடுப்புல வளர்ற ஹீரோ பின்னால பெரிய சாமியாராகி, வாய்லேருந்து லிங்கம் எடுக்கறேன்னு டமாஷ் பண்ணி, பல பொண்ணுங்களை உஷார் பண்றான்.

ஒரு நாளு, இந்த லிங்க வாயனை பொசுக்குனு போலீஸ் அமுக்கிருது. கடைசியா கோர்ட்டு கொடுக்கற ஷாக்கிங் தீர்ப்போட முடியுது படம். முடி வளர்த்தேன், முடி வளர்த்தேன்... உன்னால் புள்ள வாயிக்குள்ள லிங்கம் எடுத்தேன்ங்கற பாட்டுல பிரேம்ஸ் அழுது பொரண்டு புழுதி கிளப்புறாரு. அடிக்கடி லிங்கம் எடுக்கும்போது மூக்குல ரத்தம் வர்றதும், அப்பப்போ பேக்கிரவுண்ட்ல ஹேய்... ஹேய்... மன்மதானந்தா! மாட்டப் போற ரனந்தானு வர்ற மியூஸிக்கும் கலக்குதுடா டேய்! மொத்தத்துல மன்மதன்... மண்ணக் கவ்வுன மதன்! என்று அஷ்டகோணலாக முகம் காட்டுகிறார்.

*கவுண்டமணி:* அடுத்ததா எட்டாவது இடத்துல இருக்கறது ஜி! நம்ம கேப்டன் விஜயகாந்து நடிகர் விஜயகாந்தாவே வந்து கலக்கியிருக்காருங்கோ. ஒரு நடிகன் அரசியலுக்கு வந்தா என்னாகும்ங்கறதுதான் கதை. நடிகர் சங்க எலெக்ஷன்ல நிக்கிற விஜயகாந்துக்கு கலைத் துறை மந்திரிகிட்டே இருந்து வாபஸ் வாங்கச் சொல்லி மிரட்டல் வருது. கடுப்பாகிற விஜயகாந்த், சங்க தேர்தல்ல மட்டுமில்லை, உங்க தேர்தல்லயும் நிப்பேன்னு சொல்லி, பொசுக்குனு அரசியல்ல குதிக்கிற கதை. வழக்கமா காலால அடிக்கிற வரு, இதுல அத்தனை பேரையும் வாயால வசனம் பேசியே கொல்றாரு. ஜி... ஓவர் பேச்சு! அந்தக் கண்றாவியை நீங்களும் கொஞ்சம் பாருங்க சாமியோவ்! சுற்றி கரை வேட்டிகள் இருக்க நடுவே கன்னச் சதையாட, கண்கள் சிவக்கப் பேசுகிறார் விஜயகாந்த், என் கையில பட்ட ஒரு திருட்டு வி.சி.டி, நான் பக்கத்துல பார்த்த சி.எம். ஸீட்டு நான் எடுத்துக்கறேன். ஏய்... எனக்கு அரசியல்ல தளும்பு வாங்கவும் தெரியும், அழும்பு பண்ணவும் தெரியும். இப்ப சொல்றேன் கேட்டுக்க... தமிழ் நாட்டுல மொத்தம் முப்பத் தோராயிரம் ஊராட்சி... சட்டென்று கட் ஆகிறது ஸீன்.

*கவுண்டமணி:* அடங்குங்க புள்ளிவிவரத் தலையரே. ச்சீ... தலைவரே! ஓகே., இப்ப ஏழாவது இடத்துல ஒரு திகில் படம் ராம். படத்தோட ஓபனிங்கே ஒரு கொலை ஸீன். அந்தக் கொலை கேஸ்ல ஹீரோ ஜெயேந்திரரு கைதாகிற அதிர்ச்சியோட படத்தை ஆரம்பிக்கிறானுங்க. அப்புறம் அந்தக் கொலை கேஸ் விசாரணையைச் சுத்திதான் மொத்த படமும். படம் முழுக்க அப்பு தாதா, ரவி சுப்ரமணியம், ரகு, கதிரவன்னு பல வில்லனுங்க சுத்தற தால... எவன் வில்லன், யாரு ஹீரோன்னே தெரியலைங்கோ. அதுவும் இந்த பிஞ்ச தலையன் ரகு, பூம் பூம் ஷக்கலக்கு பூம் பூம்ம் ஷக்க.. அப்பு அடிச்சிட்டான் ஷக்கலக்குங்கற குத்து பாட்டுக்கு ஆடி கலக்கி இருக்காரு. ராம்... சங்கர்ராம்! இதுல ஓப்பனிங் ஸீன் மிரட்டல். நீங்களும் பாருங்கோ... என்றதும் காட்சி விரிகிறது சிறை காம்பவுண்ட் சுவரின் மேல் காவி வேட்டி வெற்று உடம்போடு ஒற்றைக்காலில் நின்றபடி மந்திரம் சொல்கிறார் ஹீரோ... வானாகி மண்ணாகி, சங்கர்ராமன் மர்டராகி, ஜெயிலாகி பெயிலாகி, காஞ்சி கலவையாகி... என்பதோடு காட்சி கட் ஆகிறது.

*கவுண்டமணி:* சூப்பர்ல! அடுத்து ஆறாவது இடத்துல ஒரு கிளுகிளு படமுங்கோ. காக்கிவாடன் பட்டி மயிலு, எம்.எல்.எம். குயிலு ஜெயலட்சுமி ஹீரோயினா கலக்குற தேவதையைக் கண்டேன். பொதுவா போலீஸ்கிட்டே கேஸ் கொடுப்போம். அந்த போலீஸ் மேலயே ஒரு பொம்பள சரமாரியா கேஸ் போடறாள்னு ரொம்ப வித்தியாசமா திங்க் பண்ணியிருக்கானுங்க. படத்தோட ஓபனிங்லயே பல தொப்பைத் தலையனுங்க சேர்ந்து, துண்டக்காணோம் துணியக் காணோம், தூங்கும்போது துப்பாக்கியக் காணோம்... என்னடி செஞ்சே நீதான் என்னடி செஞ்சே, தொடாமலே தூக்குறியே, சி.பி.ஐடுயில தாக்குறியே என்னடி செஞ்சே நீதான் என்னடி செஞ்சேனு பாடற சோகக் குத்து சூப்பர். தேவதையைக் கண்டேன்... தெருவில் நின்றேன்!

*கவுண்டமணி:* இப்ப நாம அடுத்ததா பார்க்கப் போறது அஞ்சாவது இடத்தைப் பிடிச்ச படம்... ஆட்டோகிராஃப்! படத்தோட ஓபனிங்லயே ட்ராக் ஷலுட் போட்டுட்டு ஞாபகம் வருதே ஞாபகம் வருதே, முதல் முதலா ஸ்கூலில் அழுதது, அண்ட்ராயர் கேட்டு அப்பாவிடம் அழுதது, ஸ்டாலின் தம்பியால் சில முறை அழுதது, கலைஞர் அண்ணனால் பல முறை அழுததுனு பாடிக்கிட்டே அசத்தலா அறிமுகமாகறாரு ஹீரோ. ஸீனுக்கு ஸீன் ஹீரோ கொளுத்தற ஃப்ளாஷ்பக் கொசுவத்தி புகை தாங்கலை. இப்ப இந்தப் படத்திலேயிருந்து அண்ணன் கலைஞரை ஹீரோ மீட் பண்ற ஒரு ஸீன் என்றதும் ஸீன் வருகிறது. குலுங்கிக் குலுங்கி அழுகிறார் ஹீரோ. அதைப் பார்த்துப் பாடுகிறார் கலைஞர், ஒவ்வொரு துளிகளுமே சொல்கிறதே, என் மேல் தம்பி வைத்த பாசத்தை. அழுகைக்கு அர்த்தம் தெரிகிறதே, தம்பி ஸ்டாலின் மேல் நீ வைத்த நேசத்தை. அதைக்கேட்டு உணர்ச்சிவசப் பட்டுக் குமுறிக் குமுறி அழுகிறார் ஹீரோ. ஆட்டோகிராஃப் அழுகைகிராஃப்

*கவுண்டமணி:* நாலாவது இடத்தில் மாயாவி! மர்மத் தலையன் ஜோஷ்வா ஸ்ரீதர்தான் ஹீரோ. நடாஷானு ஒரு அப்பாவிப் பொண்ணு ஹீரோயினு. கதை ஒரு மண்ணும் புரியலீங்கோ. திடீர்னு ஹீரோவும் ஹீரோயினும் காணாமப் போறாங்க. கடத்தல்னு இவனுங்க சொல்றானுங்க, இல்லைனு அவனுங்க சொல்றானுங்க, கல்யாணம் பண்ணிட்டாங்கனு இவனுங்க சொல்றானுங்க, இல்லைனு அவனுங்க சொல்றானுங்க, காதல்னு இவனுங்க சொல்றானுங்க, நட்புனு அவனுங்க சொல்றானுங்க... என்னங்கடா டேய்! விளையாடறீங்களா... என்கிற போதே ஜோஷ்வா நுழைகிறார்.

*கவுண்டமணி:* வா மியூஸிக் வாயா! மாயாவி படம் ஒண்ணும் புரியலியே?

ஜோஷ்வா: நாங்க நல்ல நண்பர்கள்தான்.

கவுண்டமணி: அத நான் உன்கிட்ட கேட்டனா... ஏற்கெனவே இருக்கற இம்சையில ஏண்டா இப்படி எக்ஸ்ட்ரா டார்ச்சர் பண்றீங்க! ஒழுங்கா படத்தோட கதையைச் சொல்லு. படுவா பிச்சுப்புடுவேன் பிச்சு!

ஜோஷ்வா (பயந்து ): கடத்தல் இல்லை. நாங்க விரும்பிதான் டூர் போனோம். கல்யாணம் பண்ணிக்க மாட்டோம். ஆனா...

கவுண்டமணி: டேய்! ஓடிப்போயிரு. இனிமே இந்த ஏரியா பக்கம் உன்னைப் பார்த்தேன், மவனே கடிச்சி வெச்சிருவேன்... ஆமா எனப் பாய, அலறி ஓடுகிறார் ஜோஷ்வா.

கவுண்டமணி: மகா ஜனங்களே! இதுக்கெல்லாம் நான் பொறுப்பு இல்லை. அடுத்ததா மூன்றாவது இடத்தில், கலைஞர் கதை வசனத்துல புன்னகை மன்னன் துரை முருகன் கலக்கும் கண்ணம்மா. படத்துல கதையெல்லாம் கேட்கக் கூடாது. ஸீனுக்கு ஸீன் ஒரு வில்லி அம்மாகிட்டே ஹீரோ ஆவேசமா வசனம் பேசிட்டு வெளிநடப்பு பண்றதுதான் கதை. சரியில்லை நாட்டு நடப்பு, அதனால் செய்கிறேன் வெளிநடப்புங்கற பஞ்ச் டயலாக் வரும்போதெல்லாம் உடன்பிறப்புக் களின் விசிலு காது கிழிக்குது சாமீயோவ். படம் முழுக்க துரைமுருகன் இந்தா இந்தானு ஏகப்பட்ட குத்து டான்ஸை போடறாரு. சபையில என்ன நடந்ததுனு துரைமுருகன் தன் தலைவர்கிட்டே விவரிக்கிற காட்சிகள் சுவாரஸ்யம். அதை நீங்களே பாருங்க என்றதும் ஸீன் வருகிறது. தலைவரே! அந்தம்மா வரும்போது அமைச்சர் களெல்லாம் இந்தா இப்படி ஆடறாங்க. ந்தா... ந்தா... ந்தா! என்றபடி வளைந்து நெளிந்து ஆடுகிறார். வேட்டியை மடித்துக்கட்டி உருள்கிறார். அப்புறம் அந்தம்மா பேசும்போது இப்படி கையத் தட்டி பல்டி அடிக்கிறாங்க! என்றபடி, ஆஹா! மோனோ ஆக்டிங் செஞ்சே முதுகு பழுத்துரும் போலயிருக்கேடா என முனகுவதோடு காட்சி முடிகிறது. கண்ணம்மா... அம்மம்மா!

*கவுண்டமணி:* அடுத்ததா இரண்டாவது இடத்தில் வங்கப் புளி கங்குலியோட ஆக்ஷன் ரீப்ளே ஸ்டோரி திருப்பாச்சி. பேட்ட நேராப் புடிச்சி போல்ட் ஆனாத் தான் அவுட்டு. பேட்ட திருப்பிப் புடிச்சி அவுட்டானா அது டவுட்டுனு பஞ்ச் டயலாக் பேசிக்கிட்டே பேட்ட தலைகீழா பிடிச்சி ஆடி சரமாரியா டக் அவுட் ஆகறாரு ஹீரோ புளி மூட்டை மண்டையன், வாத்துத் தலையன் கங்குலி. பட்டாசு பாலுவா வர்ற சச்சின் டெண்டுல்கரோட லோக்கல் சண்டை, சகட சனியனா வர்ற இன்ஸமாமோட இன்டர்நேஷனல் சண்டைனு வெத்து வாய்லயே மொழம் போட்டுக்கிட்டிருக்காரு ஹீரோ. கடைசியா நாடே கூடி நடத்துற போராட்டத்துல அவரை டீம்லயிருந்து தூக்கறாங்களா... இல்லையாங்கிறதுதான் கதை. திருப்பாச்சி... வெறுப்பாச்சி! என்றபடி, நாக்கைத் துருத்துகிறார்.

*கவுண்டமணி:* முதல் இடத்தைப் பிடிச்சிருக்கிறது... ஆய்த எழுத்து!

சந்திரமுகி, சச்சின், மும்பை எக்ஸ்பிரஸ்னு மூணு ஹீரோக்கள் ஒரே நேரத்தில் சந்திச்சு சவால் விடற கதை. இந்தப் படம் இந்த வாரம்தான் ரிலீஸாகுது. ஆனா, அதுக்குள்ளே பரபரப் பாகிருச்சு. ஒருத்தருக்கு தன்னோட சூப்பர் ஸ்டார் பட்டம் போயிருமோனு பயம். இன்னொருத்தருக்கு அந்த சூப்பர் ஸ்டார் பேரைத் தட்ட முடியுமானு நப்பாசை. மூணா வது ஆளுக்கு, படப் பேரே அடிக்கடி பிரச்னையாகுதேனு கவலை. இப்படி மூணு பேரு தங்களோட வாழ்க்கையில் ஒண்ணா சேர்ந்து நிக்கிறதுதான் ஆய்த எழுந்து... இவங்க தலையெழுத்து! என்கிற கவுண்டமணி, அட! நெத்திலி மீனு ரேயர் தலையனுங்களா, புரோகிராம் முடிஞ்சு போச்சுங் கடா! என்று ஸ்கிரீனிலேயே உதைவிடுகிறார்.

— *வசிசுதா*



ஐம்பெரும் கண்டங்கள்

ஆளவந்தான்

காவாலிபோல் தொப்பி போட்டு

வந்தான்

இடக்கையில் ஓர் ரற்று குத்தி

வந்தான்


ஆள... வந்தான்...

அழவும்... வந்தான்...



# சினித்துளி

## வல்லவன்



வல்லவன் படப்பிடிப்பில் என்ன நடக்கிறது? படத்தின் தயாரிப்பாளருக்கே அதிகம் தெரியாத இந்த ரகசியம்தான் இன்றைய தேதியில் தமிழ் சினிமாவின் ஹாட் டொபிக்! சிம்புவுக்கு டைரக்ட் பண்ணவே தெரியாது என்ற ரீமாசென், "நடிகர் என்ற முறையில் சிம்புவைப் பற்றி சரியாக சொல்லத் தெரியாது. ஆனால், டைரக்ஷனை பொறுத்தவரை ஜீனியஸ்! என்கிறார். "எனக்கு மேக்கப் போட்டால் உடனே நடிக்கணும். சிம்புவோ மூடு வந்தால் மட்டுமே ஸ்டார்ட் கேமரா சொல்கிறவர். இந்த முரண்பாடுதான் சண்டைக்கு காரணம். காட்சி எடுக்க நேரமானாலும், மானிட்டரில் அதன் ரிசல்டை பார்த்தால் கோபம் பறந்துவிடும். அந்தளவுக்கு... ( சிம்பு புராணம் )

## மல்டி பிளெக்ஸ்



சினிமாவில் சம்பாதிப்பதை சினிமாவிலேயே செலவு செய்யும் அபூர்வ கலைஞன் கமல். இவரது பரிசோதனை முயற்சிகள் எப்போதும் பர்சை பதம்பார்ப்பவை. ராஜ்கமல் பிலிம்ஸ், ஆடியோ கம்பெனி இவற்றுடன் மூன்றாவதாக புதியதொரு பிசினஸில் இவர் கால் பதிக்கிறார். மல்டி பிளெக்ஸ் தியேட்டர் கட்டுவதற்காக சென்னை புறநகரில் நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. உயர்ந்த தொழில் நுட்பத்துடன் உருவாகும் இந்த மல்டிபிளெக்ஸில் ரெஸ்டொரண்டுகள், கேளிக்கை விளையாட்டுக்களுக்கான சௌகரியங்கள் இடம்பெறும். சினிமாவில் எந்த புதிய தொழில் நுட்பம் வந்தாலும் உடனே அதனை பரீட்சித்துப்பார்ப்பவர் கமல்.

## இம்சை



"இம்சை அரசன் 23-ம்புலிகேசி" பல வருடங்களுக்குப் பிறகு தமிழில் ஒரு சரித்திரப் படம். ஆனால், ஆன்டெனா மீசையும், அல்வாவாக குழைந்த பாடி லாங்வேஜுமாக வடிவேலுவை பார்க்கும்போது, சிரிக்காமலே தெரிந்துவிடுகிறது, இது ஒரு விகடகவி கதையென்று. இந்தப்படம் படப்பிடிப்பில் இருக்கும்போது வடிவேலுவின் காமெடியை பார்த்து பலமுறை கமராவை கவனிக்காமலே விட்டிருக்கிறார் ஆர்தர் வில்சன் அந்தளவுக்கு அவர் நடிப்பும், காட்சியும் சிரிப்பை வரவழைத்திருக்கிறது. எடிட்டிங் டேபிளிலும் எடிட் பண்ணுவதை விட்டு சிரிப்பு வாயு சுவாசித்த மாதிரி அனைவரும் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். இம்மாதம் திரைக்கு வருகிறான் "இ/ அரசன் 23-ம் புலிகேசி".

## பாராட்டு

குருவிடமிருந்து பாராட்டு வாங்குவதும், மலையில் பயிர் விளைவிப்பதும் ஒன்று. பி.சி. ஸ்ரீராமிடமிருந்து பாராட்டு வார்த்தைகளுடன் பரிசும் கிடைத்திருக்கிறது ஒருவருக்கு! அந்த திறமைசாலி, 'சித்திரம் பேசுதடி' படத்தின் ஒளிப்பதிவாளர் மகேஷ் முத்துசாமி!'சித்திரம் பேசுதடி' படத்தில் தனது சிஷ்யனின் கேமரா வித்தையைப் பார்த்து மகிழ்ந்துப்போன பி.சி. ஸ்ரீராம், வெளிநாடு சென்றபோது மகேஷ் முத்துசாமிக்கு செல்போன் ஒன்று வாங்கி பரிசளித்திருக்கிறார். பரிசும் கிடைத்த நேரம், அதிர்ஷ்டம் வடக்கு திசையிலிருந்து வீசியிருக்கிறது. விரைவில் இந்திப் படம் ஒன்றில் தனது கேமரா வித்தையை காட்டப்போகிறார் இவர்.

## சிறுதுளி !

சிவாஜி படத்தில் ரஜினியை வித்தியாசமாக இளமையுடன் காட்டுவதற்கு திட்டமிட்டார் ஷங்கர். இதற்காக அவருக்கு பல்வேறு உணவு கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டன. இதனால் இப்போது ரஜினி உடல் பருமனாகவும் கன்னம் உப்பிய நிலையிலும் காணப்படுகிறார்.

❖ ❖ ❖

பத்திரிகையாளர்களை சந்திப்பதை சமீபகாலமாக தவிர்த்து வருகிறார் ஜோதிகா. விழாக்களுக்கு சென்றாலும் பத்திரிகையாளர்களை கண்டால் மெதுவாக நழுவி விடுகிறார். இதையும் மீறி யாராவது பேட்டி கேட்டு தொந்தரவு செய்தால், அவருக்கு வேண்டிய நடிகரிடம் சொல்லி விடுகிறாராம்.

❖ ❖ ❖

பிரசாந்த் கைவசம் பல படங்கள் உள்ளன. இதில் தகப்பன்சாமி விரைவில் திரைக்குவர தயாராக இருக்கிறது. நடிகை நிலா பிரச்சினையால் ஏற்பட்ட சிக்கல் தீர்ந்து விட்டதால் ஜாம்பவான் படம் வேகமாக வளர்ந்து வருகிறது. இதுதவிர புலன் விசாரணை பாகம்-2, பெட்ரோல் படங்களிலும் வித்தியாசமான வேடங்களில் பிரசாந்த் நடித்து வருகிறார்.

❖ ❖ ❖

தேசிய விருது பெற்ற மீராஜாஸ்மினும், விருது கனவுகளோடு நடித்து வரும் சினேகாவும் ஒரு படத்தில் சேர்ந்து நடிக்கிறார்கள். பி.வாசு இயக்கத்தில் தெலுங்கில் தயாராகும் இந்த படத்தில் பாலகிருஷ்ணாவுடன் இவர்கள் 2 பேரும் நடிக்க ஒப்பந்தம் ஆகி உள்ளனர்.

❖ ❖ ❖

இப்போது மிகவும் மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் இருக்கிறார் சினேகா. தெலுங்கில் அவர் நடித்த படங்கள் எல்லாமே வெற்றி பெற்றுள்ளன. தமிழில் நடித்துள்ள புதுப்பேட்டை மீதும் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார். இந்தபடம் வெளி வந்த பிறகு என்னைப் பற்றி எல்லோரும் பேசுவார்கள். அதன் பிறகுதான் தமிழில் வேறு படங்களில் நடிப்பேன் என்று அடித்துச் சொல்கிறார் சினேகா. வாழ்க்கையே நம்பிக்கைதானே.

❖ ❖ ❖

விஜய் அடுத்து நடிக்கும் படத்தில் அசின் மீண்டும் நடிக்கப்போகிறார் என்று கூறப்பட்டது. அது என்ன படம் என்பது முடிவு ஆகாமல் இருந்தது. இப்போது பங்காரம் தெலுங்கு படத்தை தமிழில் தயாரிப்பது என்றும், அதில் விஜய் நடிப்பது என்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த படத்தில் விஜயின் ஒரு ஜோடியாக அசினும் மற்றொரு ஜோடியாக மல்லிகாகபூரும் நடிக்கப்போகிறார்கள்.



## "ரகுவரன்"

இப்போது மீண்டும் ஒரு ரவுண்ட் வர ரெடியாகி விட்டார் ரகுவரன். அதற்கு முன்னோட்டமாக 'சிவப்பதிகாரம்' என்ற படத்தில் நடிக்க ஒத்துக் கொண்டிருக்கிறார். இனி அவருடன்...

*ஏன் இந்த இடைவெளி?*

இருபது வருஷம் ஓடிக்கிட்டே இருந்தேன். திடீர்னு, ஏன் ஓடுறோம்? எதுக்கு ஓடுறோம்? இப்போ எங்கே இருக்கோம்? இதுவரைக்கும் வந்த வழி கரெக்ட்டாத்தான் இருக்கா? இல்லே இங்கிருந்து வேற திசைக்கு போனா லைஃப் எப்படி இருக்கும்? நல்லபடியான, ஒரு அர்த்தமுள்ள லைஃபா எப்படி மாத்திக்க முடியுமான்னு ஒரு ஜங்ஷன்ல ஒரு நடிகன் மட்டுமில்ல எல்லோருமே டக்குன்னு யோசிப்பாங்க. நானும் அப்படித்தான் யோசிச்சேன்.

*நீங்க இசை அமைத்து ஒரு ஆல்பம் செய்தீர்களாமே?*

நான் படிக்கும்போதே கிட்டார் வாங்கி வாசிக்க கத்துக்கிட்டவன். மியூசிக்னா எனக்கு ரொம்ப பிடிக்கும். இப்போ டயம் கிடைச்சதால மறுபடியும் அதை எடுத்தேன். ஏதோ தோணிடுச்சு. தோணினதை பதிவு செஞ்சேன்.

*இப்போது வெளியாகும் படங்களைப் பார்க்கிறீர்களா?*

எல்லா படங்களையும் பார்ப்பேன். ஒரு படம் ஓடலைன்னா அது என்ன காரணத்தினால ஓடல, அதில எங்கோ ஒரு சிறு தவறு இருக்கு. அந்த பாயிண்ட் என்ன? அது மாதிரி ஒரு படம் ஹிட் ஆச்சுன்னா அதுக்கும் ஒரு மேட்டர் இருக்கும்னு ஒரு தடவைக்கு நாலு தடவைப் பார்ப்பேன்.

*இன்றைய ரசிகர்களைப் பற்றி?*

அவங்க இப்ப எந்த மாதிரியான படங்களை பார்க்கணும் என்பதில் ரொம்ப தெளிவா இருக்காங்க. காலையில் வாக்கிங் போகும்போது சைக்கிளில் போற பசங்கள் பேசினதை கேட்டிருக்கேன். அவங்க இப்ப போஸ்டர்களை பார்த்துட்டு தியேட்டருக்கு போறவங்க இல்ல. ஆடியன்ஸ் வளர்ந்திருக்காங்க. இப்போ அவங்க டேஸ்ட் தெரிஞ்சுதான் பார்க்குறாங்க.

*சிவப்பதிகாரம் படத்தில் என்ன கேரக்டரில் நடிக்கிறீங்க?*

நான் மறுபடியும் நடிக்கணும்னு முடிவு எடுத்ததும் பல கதைகளைக் கேட்டேன். எதிலும் திருப்தியான கேரக்டரா அமையல. சிவப்பதிகாரம் படத்தோட டைரக்டர் கரு. பழனியப்பன் கதை சொல்லி முடிச்சதும், ஆஹா நான் நினைச்ச கேரக்டர் கிடைச்சாச்சுன்னு ஒத்துக்கிட்டேன். முதல்வன் படத்துக்கு அப்புறம் நல்ல கேரக்டர் கிடைச்சிருக்கு. என்னோட ட்ரீம் கேரக்டர் முதல்வன் கேரக்டர். அதுமாதிரியான கேரக்டர் இப்போ கிடைச்சிருக்கு. எனக்குப் பெருமையா இருக்கு.

LINGA & CO
Legal Advisors and Commissioners for Oaths

தற்போது அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ள சட்டதிட்டங்களில் நீங்கள் சிக்கி தவிக்கிறீர்களா? உங்களுடைய பிரச்சனைகளை கருத்தில் கொண்டு உங்களுக்காக செயல்படும் தகுதியும் திறமையும் வாய்ந்த சட்ட நிபுணர்களை தேடுகிறீர்களா?

WE SPECIALISE IN:
ALL ASPECTS OF IMMIGRATION AND NATIONALITY MATTERS
WORK PERMITS APPLICATIONS - ALL CATEGORIES
HIGHLY SKILLED MIGRATION PROGRAMME,
FAMILY REUNION VISAS FOR SPOUSES AND DEPENDANT RELATIVES,
ASYLUM APPLICATIONS AND HUMAN RIGHTS APPLICATIONS,
APPEALS AND BAIL APPLICATIONS, EEC RESIDENCE PERMITS,
TOURIST VISA EXTENSION, PERSONAL INJURY, EMPLOYMENT LAW

10 ஆண்டுகால அனுபவம் உள்ள, பல சட்ட நிபுணர்களைக் கொண்ட சட்ட நிறுவனத்திடம் இருந்து சேவையை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள் மேலும் பல தமிழ் பேசும் சட்டதரணிகளும் இணைந்து செயற்படுத்துகின்றனர்.

Linga & Co வணிக ஆலோசனைகளையும், book Keeping சேவைகளையும் தகுந்த முறையில் நியாயமான விலையில் வழங்குகிறது. EUROPEல் பிரஜாவுரிமை உள்ளவர்கள் தங்கள் உறவினர்களை Sponsor செய்ய வாய்ப்பு உண்டு


46 HIGH STREET, COLLIERSWOOD, LONDON SW19 2 BY
GENERAL LINE: 020 8544 9285 (4 LINES)
EMERGENCY LINE: 07771 646 441 / FAX: 020 8542 9530

உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் அனைத்தும் இரகசியமாகப் பேணப்பட்டு உங்கள் வழக்கின் மேன்மைக்காக பயன்படுத்தப்படும்

ESTABLISHED IN 1994

# சினிமா

## சர்வதேச திரைப்பட விழா




உலகத் திரைப்பட விழாக்களென்றதும், எமக்கு முதலில் ஞாபகத்துக்கு வருவது, அமெரிக்காவின் ஆஸ்கார் திரைப்பட விழாவும், பிரான்சின் கேன்ஸ் திரைப்பட விழாவுமே. ஆனால் அவ்விழாக்களில் இல்லாத தனித்துவ மெருகோடு சுவிற்சர்லாந்தில் நடைபெறும் உலகத் , திரைப்படவிழா, லோக்கார்ணோ (Locarno) சர்வதேச திரைப்பட விழாவாகும்.

வருடந்தோறும் ஆவணி மாத முற்பகுதியில் நடைபெறும் இவ்விழாவின் தனித்துவம், உலகெங்கு மிருந்து திரைப்படத்துறைக் குள் நுழையும் புதியவர்களை அடையாளப் படுத்து வதாகும். பிரபலமானவர்களுக்கே களம் தரும் ஏனைய சர்வதேச திரைப்படவிழாக்களிலிருந்து இவ்விதம் வேறுபடும், லோகார்ணோ சர்வதேச திரைப்படவிழா இத்துறையின் புது முகங்களுக்கு நல்லதொரு நுழைவாயில். இத்தகையசிறப்பு மிக்க இத்திரைப்பட விழா 1946ம் ஆண்டளவில் தொடங்கப்பட்டது.

அக்காலப்பகுதியில் ஐரோப்பிய சினிமாவில் ஏற்பட்டிருந்த ஒருவிததேக்கநிலையை, களையும் நோக்குடனேயே முதலில், இத்திரைப்பட விழா ஆரம்பமானது. ஆரம்ப மும் சுமுகமாக இருக்கவில்லை. பிரான்சி லும், இத்தாலி வெனிசிலும், இருவார இடைவெளிக்குள் நடைபெற்ற சர்வதேச விழாக்களைத் தொடர்ந்து இவ்விழாவும் தொடங்கப்பட்டது. முதலில் Lugano நகரிலே இவ்விழாவினைத் தொடங்குவதாகத் தீர்மானிக் கப்பட்ட போதும், அப்பகுதி மக்களின் சம்மதம் கிடைக்காத காரணத்தால் Locarno வில் தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்ட முதல் வருடத்தில், நான்கு இத்தாலிப் படங்களும், ஆறு வேற்று மொழிப் படங்களும், இரண்டாம் உலகப்போர் குறித்த மூன்று திரைப்படங்கள் உட்பட பதினைந்து படங்கள் திரையிடப்பட்டன.

இவ்வாறு தொடங்கப்பட்ட இத்திரைப்படவிழா முசோலியின் பாசிசக் கொள்கையாளர்களின் நெருடல்களுக்கு உள்ளானதென்பதும் குறிப் பிடத்தக்கதாகும். சுவிற்சர்லாந்தின் இத்தாலிய மொழிபேசும் மாநிலத்தில் அமைந்துள்ள Lugano நகரில் இவ்விழா நடைபெற்ற போதும், இவ்விழாவின் மூலமொழி பிரெஞ் மொழியாகவே இருக்கிறது. இப்படி உருப்பெற்ற லோகார்ணோ சர்வதேசதிரைப்படவிழா, 1970ம் ஆண்டில் புதிய பாச்சலாக இளையதலமுறை யினரை உள்வாங்கிக்கொண்டது.

1971ம் ஆண்டில் Livio Vacchini எனும் தொழில் நுட்பக்கலைஞரின் எண்ணத்தில் உதித்த திறந்த வெளித்திரையரங்கு, நகரின் மத்தியிலமைந்த பெரு முற்றத்தில் அறிமுகமானது. 1972ம் ஆண்டு தனது வெள்ளி விழாவைக் கொண்டாடிய இவ்விழா, 1978ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக நடத்தப்படவில்லை.


உலகத்திரைப்படவிழாவாக நடைபெறும் இவ்விழாவில், இந்தியத் திரைப்படங்கள் பலவும், இயக்குநர் அடூர், கோபாலகிருஷ்ணன், மணிரத்னம் உட்பட பல்வேறு கலைஞர்களும், இயக்குனர்களும் கலந்துள்ளார்கள்.

1989ல் சாயிகருணின் 'பிறவி', 1992ல் அஜயனின் 'பெருந்தச்சன்', 1994ல் 'வாயு', 1995ல் சந்தீப்ரேயின் 'ராக்கெட்', அதே ஆண்டில் மணிரத்தினத்தின் 'பம்பாய்', 1998ல் மணிரத்தினத்தின் 'இருவர்', 2000ல் கமலஹாசனின் 'ஹேராம்', என்பன இவ் விழாவில், கலந்து கொண்ட சில இந்தியத் திரைப்படங்களாகும்.

பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் தொடங்கப்பட்டு, பாயும் வேங்கைப் புலியினை அடையாளமாகவும், மஞ்சள் நிறத்தினை வண்ணமாகவும், பார்டோ (Pardo) எனும் விருதுப்பெயரையும் கொண்டமைந்த இத் திரைப்படவிழாவின் வளர்ச்சிப்போக்கில், இவ்வாண்டு முதல் குறும்படங்களுக்கான பிரிவையும் இணைத்துக் கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

இவ்விழா தங்கள் பகுதியில் நடைபெற க்கூடாதெனக் கருத்துத் தெரிவித்த பகுதிகளில் கூட, தற்போது இவ்விழாவின் நகல்கள் போன்றமைந்த சிறு திரைப்பட விழாக்கள் நடைபெறுவதும், இவ்விழாவின் மற்றொரு பரிணாமம் எனக் கொள்ளலாம். கோடை வெயில் அடங்கிய மாலையில், ஏரிக்கரையிருந்து எழுந்து வரும் இதமான தென்றலில், நீள் விரியும் வானமே கூரையாக, திறந்த வெளியமர்ந்து, உலகப்பெருவெளியில் உதித்த உன்னதங்களை, அகலத்திரையில் அசையும் நிழலாய் பாரப்பது, அற்புதமான சுகானுபவம். இந்த அனுபவத்தினை பெற வேண்டுமாயின், இவ்வருடம் 02.08.2006 முதல் 12.08.2006 நடைபெறும் லோகார்ணோ சர்வதேச திரைப்படவிழாவிற்குச் செல்லலாம்.

*- மலைநாடான்*




### விமர்சனம்

## Munich

இந்த மாதிரி படங்களெல்லாம் தமிழில் வராதா என்று ஏங்க வைப்பதே அண்ணன் ஸ்பீலுக்கு அண்மைக்காலத்தில் பிழைப்பாப் போச்சு. அந்த வரிசையில் வந்திருக்கும் இன்னொரு படம் தான் Munich.

முனிக் ஒலிம்பிக் விளையாட்டுகளில் பங்கு பெற வந்திருக்கும் இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களை பாலஸ்தீன விடுதலை இயக்கத் தினர் கடத்திச் சென்று விமான நிலையத்தில் சுட்டுக் கொல்லும் நிகழ்வில் படம் துவங்கு கிறது. பழிக்குப் பழி வாங்க இஸ்ரேல் பெண் பிரதமர், உளவு நிறுவனமான Mossad-க்கு உத்தரவிடுகிறார். முனிக் பயங்கரத்துக்குக் காரணமான பாலஸ்தீனியர்களை ஒவ்வொரு வராக தேடிப் பிடித்து அழிக்கும் பணிக்கு ஒரு சிறப்புக் குழு தேர்ந்தெடுக்கப்படுகிறது.

அதன் தலைவராக நியமிக்கப்படுகிற ார் ஏஜெண்ட் Eric Bana. அவரது மனைவி, பிரசவத்திற்குக் காத்திருக்கும் தருணத்தில் நாட்டுக்காக அவரைப் பிரிந்து செல்கிறார் Bana. கொஞ்சமும் விறுவிறுப்புக் குறை யாமல், அரபு-பாலஸ்தீன- இஸ்ரேலிய சித்தாந்த மாறுபாடுகளை சார்பு காட்டாமல் விவாதித்துக் கொண்டே ராக்கெட் வேகத்தில் சீறிப் பாய்ந்து பயணிக்கிறது படம்.

ஒவ்வொரு ஆளாகத் தேடிக் கண்டுபிடித்து, திட்டமிட்டு assassinate செய்யும் காட்சிகளின் தொழில் நுட்ப நேர்த்தியும், பிரம்மாண்டமும், பின்னனி உழைப்பும் பிரமிக்க வைக்கின்றன. ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமான வெடிகுண்டு தயார் செய்து, ஐவர் குழுவானது மூன்றாகப் பிரிந்து, ஒருவர் கவனித்து சமிக்ஞை தர, இன்னொருவர் வெடிகுண்டை இயக்க, கடைசியாய் ஒருவர் குற்றச் சம்பவ இடத்தி லிருந்து தங்களை incriminate செய்யக் கூடிய தடயங்களை அழித்து வர என்று பட்டையைக் கிளப்புகிற ார்கள். Frederick Forsyth நாவல்களில் எப்போதும் உலகின் மிகச் சிறந்த உளவு நிறுவனமாக Mossad குறிப்பிடப்பட்டிருக்கும். அதை நிரூபிப்பது போல் அவர்களின் திட்ட மிடுதலும் நிறைவேற்றுதலும் இருந்தன.

புகைப்படத்தை மட்டும் வைத்து ஆள் யார், எங்கே இருப்பார், என்ன பழக்க வழக்கம் என்று அறிந்து சொல்லும் நபரும் அவரது பின்னணியும் ஒரு சுவாரஸ்யமான கிளைக் கதை. ஒரு கட்டத்தில் Eric Bana வந்து அவரது புகைப்படங்களைக் காட்டி, யாரோ கொலை செய்யும் நோக்கத்துடன் அவரைப் பற்றி விசாரிப்பதை குறிப்பால் உணர்த்தி பயங்கரத்தின் பின்னணியை உணர வைக்கும் காட்சி மிக நேர்த்தியானது.

சிறப்புக் குழுவைச் சேர்ந்த ஐந்து பேரும் சுற்றி அமர்ந்து சாப்பிடும் போதே ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது, சின்னச் சின்ன சண்டைகளைப் போட்டுக் கொண்டே காரியங் களை முடிப்பது, என கதாபாத்திர வளர்ச்சி யும் முன்நகர்தலும் மிக இயல்பாக அமைகின் றன. Assassinகளுக்கேயுரிய சலனமற்ற பார்வைகளும், ஸ்டைல் மிகுந்த நடவடிக்கை களுடனும் மிக அருமையாக தன்னை வெளிப்படுத்தியிருக்கிறார் Eric Bana. "Troy" படத்திலேயே மூத்த இளவரசனாக வந்து ஹெர்குலிஸால் கொல்லப்படும் பாத்திரமாக மிளிர்ந்திருப்பார். அதை இந்தப் படத்திலும் தொடர்கிறார். தன் குழந்தையின் முதல் பேச்சைத் தொலைபேசி மூலம் கேட்டு உணர்ச்சி வசப்பட்டு அழுவது மிக நெகிழ்வைத் தரும் காட்சி.

ஹாலந்து நாட்டை சேர்ந்த கொலையாளிப் பெண்ணின் நடிப்பும், flirting பார்வைகளும் அட்டகாசம். அநியாயமாய்ச் செத்துப் போவதும் பரிதாபம். இறுதியில், கண்ணுக்குக் கண் எடுத்துக் கொண்டிருந்தால் உலகம் முழுவதும் குருடர்களே நிரம்பியிருப்பார்கள் என்ற தத்துவம் புரிந்து, இவற்றிலிருந்து விலகியிருக்க Eric Ban முடிவு செய்வதும், அந்த முடிவின் அழுத்தம் அவரைப் பின் தொடர்வதும் ரசமான கட்டங்கள். குழந்தையைத் தூக்கிக் கொண்டு நடைப் பயிற்சிக்கு வந்தவர், தங்களைக் கொல்ல யாரேனும் காரில் காத்திருக்கிறார்களோ என்று பதறித் தவிப்பது திகில் நேரம். இயல்பான நகைச்சுவை மிளிரும் வசனங்கள், பிரச்சாரத் தொனி இல்லாத திரைக்கதை, அட்டகாசமான நடிப்பு, எல்லாவற்றையும் ஒருங்கிணைத்த ஸ்பீல் அண்ணாத்தேவின் இயக்கம் என்று வெகுவாக என்னைக் கவர்ந்தது திரைப்படம். அவசியம் பார்க்கலாம்.

*- மீனாக்ஸ்*



வீடு வாங்க, விற்பதற்கும்
வதிவிட வர்த்தக சம்பந்தமாகவும்
குடியுரிமை பிரச்சனைகளுக்கும் எம்மை நாடவும்

Concenyancing
- Residential & Commercial
Immigration

Partners: S.Aravindan & R.Aravindan
Tel: 020 8503 5034 / Fax: 020 8471 7307
DX7421 EASTHAM
216 A High Street North, Eastham, London E6 2JA

ARAVINDANS
Solicitors and Commissioners for Oaths

# RHINO BUILDING SERVICES

20 years of experience

- Plumbing
- Central Heating
- Electrical Works

CORGI



Central Heating Installation
Boiler Repairs
Boiler Replacement
Kitchen & Bathroom Fittings
Complete Building Refurbishment

APPROVED CONTRACTOR

**Shekar**
**079 0168 7241**

# Shelter 4U Estate Agents Ltd

83 Ladywell Road, Lewisham, London SE13 JA

SPECIALISED IN MORTGAGES



Mortgages
Remortgages
Mortgages for foreign Nationality
Buy to let Mortgage

Commericial
Business Loans
Competitive Commission Rates

Lettings
Rent Guranteed
Excellent Maintenance
Suitable Accomodation for Tenants
Free Valuation with No Obligation

வீடுகள் வாங்க, விற்க, சிறந்த பராமரிப்போடு
வீடு வாடகைக்கு விட அனுகுங்கள்

வீடு வாங்க Mortgage வசதிகள் செய்து தரப்படும்

**Tel: 020 8690 5000**
**Fax: 020 8314 1111**

# ASIANTIC TASTE

22, East Avenue, Hayes, Middx UG3 1HP
Tel: 020 8569 2226 | 020 8573 3888



உங்கள் நாவுக்கு இதமான சுவை
சமையல் கலையில் கைதேர்ந்தவர்கள்

Hayesஇல் முதலாவது இலங்கையர் உணவகம்

உங்களுக்குத் தேவையான சகல
உணவுகளையும் சுத்தமான, சுகாதாரமான
முறையில் அறுசுவையுடன் பரிமாறுகிறோம்.

Specialists in all types of food
Catering for all occasions including
Wedding & Parties
Open Seven Days a Week 10.00am to midnight

**அதிசயம் ஆனால் உண்மை!**
தினமும் 100 இடியப்பம்
(சம்பல், சொதியுடன்)
10பவுன் மட்டுமே!

* Free Home Delivery within a radius of 3 miles (over £12.00)

# S & K Italian Furniture LLP

Latif House - First Way, Wembley - Middlesex - HA9 0JD
Email: info@skitalianfurniture.co.uk | Web: www.skitalianfurniture.co.uk
Tel: **020 8903 3351** Fax: **020 8903 4434**

**Opening Hours: Mon - Sat 9.00am - 6.00pm Sun 11.00am - 5.00pm**

- **Italian Bedroom Set**
- **Coffee Tables**
- **Italian Dining Set**
- **Mattress (Single, Double, Queen)**
- **Sofa Set**
- **Wall Units**
- **Computer Tables**






High Quality....
Most Reliable.....



எம்மிடம் உங்கள் இல்லங்களை
அலங்கரிக்கக்கூடிய சகலவிதமான
தளபாடங்களையும் விரும்பிய
வடிவங்களில் செய்து பெற்றுக்
கொள்ளலாம்.

ஒருமுறை வாருங்கள்...
உண்மைதானா பாருங்கள்...
நம்பமுடியாத மிகக் குறைந்த விலை...





You Simply take this Key to open the door to the Paradise
Sales Lettings Management
Mortgages Re-Mortgages Commercial Mortgages Pro.developments & maintenance
RESPONSE
Property Services
T: 020 8902 2625
F: 020 8902 2625
M: 07961 954 889
www.responseproperties.co.uk
info@responseproperties.co.uk
3, Stanley House, Stanley Ave, Wembley HA0 4JB